INDIA AND THE CHRISTIAN MOVEMENT

இந்தியாவும் சுவிசேஷ பிரபல்யமும்

இது
தோர்ணக்கல் அத்தியக்ஷரால் எழுதப்பட்டது

FOURTH EDITION (REVISED)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 OCT 1942
MADRAS

RISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
(UNIT SOCIETY FOR CHRISTIAN LITERATURE)
ALORE SECUNDERABAD COLOMBO
1942

Q6.2
N42

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 109285
MADRAS

இ6-2
N42
109285

(நான்காம் பதிப்பு)

நூன்முகம்

இந்நூல் 1908-ம் ஆண்டில் இங்கிலீஷில் முதல் முதல் எழுதப் பெற்றது. இந்துதேசத்தின் யதார்த்த ஸ்திதியையும், இத்தேசத்தின் மீது சுதேச கிறிஸ்தவர்களுக்கிருக்கவேண்டிய அபிமானத்தையும், அவ்வபிமானத்தால் அவர்கள் இத்தேசத்துக்குச் செய்யவேண்டிய ஊழியத்தையும் நன்குணர்த்தும் நோக்கத்துடன் இதை எழுதலானேன்.

1912-ம் வருஷத்தில் இது தமிழில் மொழிபெயர்க்கப்பெற்றது. இரண்டாம் பதிப்பு 1921-ல் செய்யப்பட்டது. 1937-ல் அச்சிட்ட மூன்றாவது பதிப்பில் 1931-ம் ஆண்டின் ஜனசங்கைக்கிசைய புஸ்தகம் முழுவதும் திருத்தப்பட்டது. இந்த நான்காம் பதிப்பில் 1941-ம் ஆண்டின் ஜனசங்கைக் கணக்கில் தற்சமயம் வெளியாகியிருக்கும் கணக்குகள் சேர்க்கப்பட்டுள. ஆங்கிலத்தினின்று மொழிபெயர்த்திருந்த பதினோராம் அத்தியாயத்தை இதில் விட்டுவிட்டேன்.

தமிழ் தேசச் சபைகள் சுவிசேஷ பிரபல்ய ஊழியத்தில் அனல் மூண்டெழும்புவதற்கு இச்சிறு நூலைக் கடவுள் ஓர் தூண்டுகோலாக உபயோகித்தருளுவாராக.

தோர்ணக்கல்
1942ஆு ஜூலைமீ 1௳

வி. எஸ். அசரியா,
தோர்ணக்கல் பிஷப்.

அட்டவணை

அத்தியாயம்		பக்கம்
1.	தேசமும் அதின் ஜனமும்	1
2.	இந்தியாவின் ஸ்திரீகள்	13
3.	இந்துதேச சமயங்கள்	21
4.	இஸ்லாம்	42
5.	ஹிந்து மதம்	51
6.	இந்தியாவில் கிறிஸ்துமத வியாபகம்	74
7.	பத்தொன்பதாம் நூற்றுண்டு மிஷன்கள்	83
8.	தற்கால மிஷன் சரித்திரம்	92
9.	இந்துதேசக் கிறிஸ்தவ சபை...	100
10.	இன்னம் நடக்கவேண்டிய வேலை I	115
11.	இன்னம் நடக்கவேண்டிய சுவிசேஷ வேலை II ...	124

INDIA AND THE CHRISTIAN MOVEMENT

இந்தியாவும் சுவிசேஷ பிரபல்யமும்

அத்தியாயம் 1

தேசமும் அதின் ஜனமும்.

1. பரப்பளவு, ஜனத்தோகை—இந்துதேசம் முழுமையும் (18,08,679) பதினெட்டுலக்ஷத்து எண்ணுயிரம் சதுர மைல் பரப்பளவு கொண்டது; ஐரோப்பாக் கண்டத்தில் மூன்றிலொருபாகம். ஜப்பான் தேசத்தைப்போல பத்து தேசமும், பிரித்தானியா தீவைப்போல பதினைந்து தீவும் சேர்ந்தால் விஸ்தீரணத்தில் இந்துதேசத்திற்குச் சரியாகும். ஆயினும், ஜனத்தொகைக்குத் தக்கபடி இத்தேசம் பரப்பில் அத்தனை பெரிய தேசம் அன்று. இதின் சுற்றளவு ஆஸ்திரேலியா தீவில் பாதி மாத்திரம்; அமெரிக்காவின் ஐக்கிய மாகாணங்களில் பாதி; ஆப்பிரிக்காக் கண்டத்தில் எட்டிலொரு பாகம். பூலோக உருண்டையிலுள்ள தரையில் முப்பத்தைந்திலொன்று இந்தியா. (படம் 1 பார்க்க.)

ஜனத்தொகையை கவனிக்குமிடத்தோ, இந்தியா ஓர் பெரிய கண்டம் எனத் தகும். 1941-ம் ஆண்டின் ஜனசங்கை மதிப்பின்படி பிரிட்டிஷ் நேர் அரசாட்சிக்குள்ளமைந்திருக்கும் பாகத்தில் 29,58,27,000 ஜனமும், சுதேச அரசர் 'நாடுகளில் 9,29,73,000 ஜனமும் உண்டு. ஆக, இந்துதேசத்தின் மொத்த ஜனத்தொகை முப்பத்தெட்டுக் கோடியே எண்பத்தெட்டு லக்ஷம் (38,88,00,000). ஆப்பிரிக்காக் கண்டத்தின் ஜனத்

தொகையிலும் இது மூன்றிலொருபங்கு அதிகம். அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களின் பரப்பில் பாதியான இந்து தேசத்தில், அவ்வைக்கிய மாகாணங்கள் ஜனத்தொகையில் மூன்று மடங்கு ஜனம் உண்டு. வட அமெரிக்கா தென் அமெரிக்கா இரண்டிலும் சேர்ந்துள்ள ஜனத்தொகையில் இருபங்கு நம் தேசத்தவர். மானிடர் ஐவரில் ஒருவர் இந்து தேச வாசி.

படம் 1 பரப்பளவு



ஆப்பிரிக்கா இந்தியா பிரிட்டிஷ் தீவுகள்

இருவகை அரசாட்சி இத்தேசத்திலுண்டு. பிரிட்டிஷ் நேர் அதிகாரத்திற்குட்பட்ட பாகமுமுண்டு; சுதேச அரசர் கையின்கீழுள்ள சமஸ்தானங்களுமுண்டு. பிரிட்டிஷ் நேர் அரசாட்சிக்குட்பட்ட பூமியைப் பதினாறு ராஜதானிகளாகப் பிரித்திருக்கின்றனர். சிற்றரசு நாடுகளின் தொகை 675. தேசத்தின் பரப்பளவில் பிரிட்டிஷ் ராஜதானிகள் சுமார் ஐந்தில் மூன்று பாகமும், சுதேச ராஜ்யங்கள் சுமார் ஐந்தில் இரண்டு பாகமும் அடங்கும். உலகத்தில் பிரக்யாதை பெற்றிருக்கும் பல தேசங்களுக்கு ஒவ்வோர் ராஜதானி சமமாகும். உதாரணமாக:

வங்காள ராஜதானி. ஜப்பான் ராஜ்யத்துக்குச் சமம். பேஹார் ஒரிஸ்ஸா மாகாணம் பிரான்ஸ் தேசத்துக்குச் சரி. பிரித்தானியா, ஐர்லந்து தேசங்களின் ஜனத் தொகையிலும் அதிகமான ஜனம் சென்னை ராஜதானியி லுண்டு. நார்வே சுவீடன் அரசர் கீழுள்ள ஜனத்தைவிட மைசூர் மகாராஜா ஆதீனத்துளுள்ள ஜனம் அதிகம்.

அரசாட்சிக்கு அநுகூலமாக ஒவ்வொரு ராஜதானி யும் சமஸ்தானமும் பல ஜில்லாக்களாக வகுக்கப்பட் டிருக்கின்றன. ஜில்லாக்கள் சிற்சிறு தாலுகாக்களாக, அல்லது தாசில்களாக அல்லது தாலுக்களாகப் பிரிக்கப் பட்டுள. ஒவ்வோர் ஜில்லாவின் சராசரி ஜனத்தொகை சுமார் ஏழு லட்சத்து ஐம்பதினாயிரம்.

இந்துதேச மக்களில் பத்துக்கு ஒன்பதுபேர் 5,000 பேருக்குக் கீழ்ப்பட்ட கிராமங்களில் வசிக்கிறார்கள். மொத்தம் சுமார் ஏழு லக்ஷம் குடியிருப்பு ஸ்தலங்களில், ஐந்தில் நான்கு பங்கில் ஐந்நூறு ஜனங்களுக்குக் குறை வாகவே வசிக்கின்றனர். லக்ஷத்திற்கு அதிகப்பட்ட ஜன முள்ள நகர்கள் முப்பத்தெட்டு; இவற்றில் வசிப்போர் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு மூன்று பேரே. இங்கிலாந்து தேசத்து ஜனத்தொகையில் 100-க்கு 45 பேரும், பிரான்ஸில் 100-க்கு 44 பேரும் 5000-க்கு மேற்பட்ட பட்டணங்களில் வசிப்போர். நம் தேசத் திலேயோ 100-க்கு 11 பேர் மாத்திரமே. அப்படி யானால், இந்துதேசத்தை சுவிசேஷ ஒளிக்குட் கொண்டு வரவேண்டுமாகில், மிச்சமான வேலை நடைபெறவேண்டி யது கிராமங்களிலேயே.

இந்துதேசம் முழுமையையும் சேர்த்து சராசரி பார்க் கின், மூன்று சதுரமைலுக்கு ஒரு கிராமம் இருப்பதாகக் காணலாம். வங்காள ராஜதானியிலோ முக்கால் சதுர மைலுக்கு ஒரு கிராமம். தேசமுழுமையிலும் சதுர மைலுக்குச் சராசரி 195 ஜனம். ஆக்ரா, அயோத்தியா ஐக்ய மாகாணத்திலோ சதுரமைலுக்கு சராசரி 456 ஜனமும், வங்காள மாகாணத்தில் சராசரி 646 பேரும் உண்டு. ஆகவே, கங்காநதிதீரமும், இந்நதியின் கழி

முகத்திற்கெதிர்த்த பூமியுமே ஜனத்திரள் பெருத்த பாகங்கள். தென் இந்தியாவின் ஜில்லாக்களில் தஞ்சாவூர் ஜில்லாவில் ஜனம் அதிக அடர்த்தி. தாலுகாக்களைக் கவனித்தால் பின்வரும் தாலுகாக்களில் ஜனநெருக்கம் அதிகமென விளங்கும்: சைதாப்பேட்டை 1,110; கும்பகோணம் 1,332; மதுரை 1,237; திருச்செந்தூர் 734; நாகபட்டணம் 919.

இந்த 38 கோடி ஜனங்களும் பற்பல ஜாதியாராகவும், நானுவித பாஷைக்காரராகவும், வெவ்வேறுன மதானுசாரிகளாகவும் தேசமெங்கும் பரவியிருக்கின்றனர்.

முப்பத்தெட்டு கோடி! இந்த லக்கத்திற் கண்ட தொகையை மனதிற் சரிவர கிரகித்துக்கொள்ளுவது மிகவும் பிரயாசமே. திருஷ்டாந்தமொன்றினுல் விளக்கிக் காட்டுவோம்: இந்த 38 கோடி ஜனங்களையும் ஓரிடத்தில் கூட்டிச்சேர்த்து, நிமிஷத்துக்கு 20 பேர் வீதம் இரவுபகலாக இடைவிடாமல் ஒருவர் எண்ணினுல் புருஷர், ஸ்திரீ, பிள்ளைகள் யாவரையும் எண்ணிமுடிக்கச் சுமார் 37 வருஷம் செல்லும்! இப்புஸ்தகமவ்வளவு விஸ்தீரணமான காகிதத்தில் இத்தனை பேருடைய பேர்களையும் அச்சிட்டால், புஸ்தகம் கோடிப்பக்கத்துக்கு மேலாகும், கனம் இரண்டரை பர்லாங்! தேச முழுவதிலும் மாசம் ஒன்றுக்கு (8,00,000) எட்டு லக்ஷம் ஆத்துமாக்கள் நித்தியத்திற்குட் பிரவேசிக்கின்றன! நிமிஷத்துக்கு இருபது பேர்!

'இயேசு ஜனத்திரளைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல அலைக்கழிந்து சிதறுண்டுபோயிருந்ததால் அவர்கள்மேல் மனதுருகினுர்.' இத்திரள் ஜனங்களைக் காணும் நாமும் அருள்நாதரைப்போல அவர்கள்மீது மனதுருகுகிறேமா? மனதுருகினேமாகில், நம் தேசத்தவர்களுக்காக ஜெபிப்போம்; அவர்கள் திரள் திரளாய்க் குடியிருக்கும் பட்டி தொட்டிகளிற் பிரவேசிப்போம்; அவர்களில் எப்படியாவது சிலரை இரட்சிக்கும்படி முயலுவோம். மாம்சத்தின்படி நம் இனத்தாராகிய நம் சகோதரருக்காக எதைத்தான் சகிக்கமாட்டோம்?

2. * பாஷை.—இந்த தேசத்தில் வழங்கும் வெவ்வேறான பாஷைகளின் தொகை 225. பத்து லக்ஷத்துக்கு அதிகமானபேர் பேசும் பாஷை 23. பத்துகோடியே ஐந்து லக்ஷம் ஜனங்கள் ஹிந்தி பேசுகிறார்கள். இதுதான் மிகவும் அதிகமான ஜனங்கள் பேசும் பாஷை. பேசும் ஜனங்களின் தொகைப்படி பாஷைகளை ஒழுங்குபடுத்தினால், ஹிந்தி, வங்காளம், தெலுங்கு, மாராட்டி, தமிழ், பஞ்சாபி என்ற வரிசையாகும். இரண்டு கோடியே நாற்பது லக்ஷம் ஜனங்கள் தமிழ்ப் பேசுகிறார்கள். இந்தியாவில் வழங்கும் முக்கிய பாஷைகளையும் அப்பாஷைகளைப் பேசும் ஜனத்தொகையையும் 1931-ம் வருஷ ஜனசங்கைக் கணக்கின் பிரகாரம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கிறோம்.

ஹிந்தி	10,50,00,000	பஞ்சாபி	1,55,00,000
வங்காளம்	53,000,000	கன்னடம்	1,10,00,000
தெலுங்கு	26,000,000	உரியா	1,10,00,000
மாராட்டி	20,800,000	குஜராத்தி	1,08,00,000
தமிழ்	20,400,000	மலையாளம்	90,00,000
		பர்மா	88,00,000

3. *தொழில்.—28 கோடி ஜனங்கள் கிருஷித்தொழிற் செய்து பிழைக்கிறார்கள்; ஜனத்தொகையில் 100-க்கு 71 வீதம். இங்கிலாந்து தேசத்தில் நூற்றுக்கு எட்டுப்பேர் விவசாயஞ்செய்யும் சமுசாரிகள்; நூற்றுக்கு ஐம்பத்தெட்டுப்பேர் கைத்தொழில் செய்கிறவர்கள். நமது தேசத்துக்கோ ஜீவனாதாரம் விவசாயமே. மழைகாலம் தவறிப்போகுங்கால், பயிர் படவே பஞ்சம் உண்டாகிறது. உலகின்கண் வழங்கும் மிச்சமான அரிசி, சணல், தேயிலை இந்துதேசத்தில் விளைகின்றன. இத்தேசத்திற்கு நன்மை செய்யவேண்டுமானால், கிருஷி சாஸ்திர விதிகளை ஜனங்களுக்குப் புகட்டுவதும் விவசாய விருத்திக்கனுகூலமாயிருக்கும் நவீன சாதனங்களை நுழைப்பதும் அவசியம். மேலும், நூற்றுக்குப் பத்துப்பேர் கைத்தொழில்

* இவை 1931-ம் வருஷத்து ஜனசங்கை இலக்கங்கள்.

செய்து பிழைக்கிறவர்கள். இவர்களில் 41 லக்ஷம்பேர் நெசவு சம்பந்தமான வேலை செய்கிறவர்கள். நமது ஜனங்களின் முன்னேற்றத்துக்கு விவசாயத்திலும் நெசவிலும் முன்னேற்றம் அவசியம்.

4. பஞ்சம் பீடை.—இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான பாகங்களில் நடைபெறும் வேளாண்மைக்கு மழை இன்றியமையா அவசியம். பருவகாலங்களில் மழை பெய்யாமற்போனால், அகவிலை ஏறி, பஞ்சம் உண்டாகிறது. 1900-ம் ௵ உண்டான கொடிய பஞ்சத்தினால், கஷ்டப்பட்டவர்கள் 5,20,00,000. இவர்களில் சுமார் 10 லக்ஷம் ஜனங்கள் பசி பட்டினியினாலும், அதன் பலனாக நேர்ந்த வியாதிகளினாலும் பீடிக்கப்பட்டு மாண்டார்கள். பஞ்சகாலத்தில் ஜனங்கள் சாப்பிடும் தகாத பதார்த்தங்களினால் ஜனங்களுடைய ஆரோக்கிய ஸ்திதி குறைந்து விடுவதுமன்றி, பயங்கரமான பல வியாதிகளும் உண்டாகின்றன. விஷபேதி ஜுரம் முதலிய நோய்கள் இந்தியாவின் ஒரு பாகத்தில் இல்லாவிட்டால் மற்றொரு பாகத்தில் எக்காலமும் இருப்பதைக் காணலாம். 1931-க்கு முந்தின பத்து வருஷங்களில் பதினைந்து லக்ஷம்பேர் பிளேக் ஜுரத்தினாலும், இருபத்தைந்து லக்ஷம் பேர் வாந்திபேதியினாலும், நாலு கோடிப்பேர் நானாவித ஜுரங்களினாலும் மாண்டதாகக் கணக்கு.

நம் தேசத்து ஜனங்கள் படும் உபாதிகளிலிருந்து அவர்களை இரட்சிப்பதும் கிறிஸ்தவர்கள் கடமையே. ஆஸ்பத்திரி வைப்பதும், மருத்துவம் பார்ப்பதும், வைசூரிப்பால் குத்திக்கொள்வதற்கு ஜனங்களை உற்சாகப் படுத்துவதும், விஷபேதி, ஜுரம் வராதபடி தப்பிக் கொள்ளும் வழிவகைகளைப் படிப்பிப்பதும், அவைகளுக்கேற்ற சுலப சிகிச்சைகளை இலவசமாய்க் கொடுப்பதும், நன்மை செய்கிறவராய்ச் சுற்றித்திரிந்த இயேசு பெருமான் அடியார் செய்யத்தக்க வேலை. முற்காலத்துக்கிப்போது இவ்விஷயங்களில் அதிகத் தேற்சியே. எனினும் நடைபெறவேண்டிய வேலை இன்னும் எவ்வளவோ உண்டு!

5. அங்கவீனங்கள். — 1931-ம் வருஷ ஜனசங்கைக் கணக்குப்படி இந்துதேசத்திலிருக்கும் செவிட்டூமையர் 2,30,895; கபோதிகள் 6,01,370; குஷ்டரோகிகள் 1,47,911; புத்திபேதமுள்ளவர்கள் 1,20,304. நமது உடன் சிருஷ்டிகளாகிய இந்த 11 லக்ஷம் ஜனங்கள் படும் கஷ்டத்தை நிவிர்த்திக்கும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸ்தாபனங்கள் வெகு சொற்பம்; ஒன்றுக்கொன்றிருக்கும் தூரமும் அதிகம். இந்த அகதிகளுக்காக ஸ்தாபித்திருக்கும் சாலைகளில் சிறந்தவை பல கிறிஸ்தவர் மேல் விசாரணைக்குள் உள. செவிட்டூமையருக்கு மூன்று பாடசாலைகள் இந்துதேசத்திலுண்டு. ஒன்று கல்கத்தாவிலும், ஒன்று பாளையங்கோட்டையிலும், மற்றது சென்னையிலுமிருக்கிறது. குஷ்டரோகிகளுக்கு நெய்யூரிலும், செங்கற்பட்டிலும், திச்பல்லியிலும், அலஹபாத்திலும் ஆஸ்பத்திரிகள் உண்டு. க்ஷயரோகிகளுக்கு மதனப்பள்ளியில் ஓர் சிறந்த மிஷன் வைத்தியசாலையிருக்கிறது. ரோகிகளில் மிச்சமானவர்கள் புறமதஸ்தர். இவைபோக, அநேக இடங்களில் மிஷன் ஆஸ்பத்திரிகளின் மூலமாய் நல்ல வேலை நடைபெறுகின்றது. இவை யாவும் கிறிஸ்துவுக்கும் நம் தேசத்துக்கும் நாம் ஊழியஞ்செய்யும் ஏதுக்களே.

6. கல்வி.—இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் புருஷரில் நூற்றுக்கு 15 பேரும், பெண்களில் நூற்றுக்கு 3 பேரும் மாத்திரம் எழுத்துக் கற்றவர்கள். மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 12 பேர் மாத்திரம் வாசிக்கத் தெரிந்தவர்கள். பிரிட்டிஷ் அரசாட்சிக்குள்ளிருக்கும் பாகங்களில் பள்ளிக்கூடத்திற்குப் போகும் பிராயமுள்ள பிள்ளைகளில் 100-க்கு 25 பையன்களும், 100-க்கு 4 பெண்களும், மொத்தத்தில் 100-க்கு 10 பேரும் பாடசாலையில் வாசித்துவருகிறார்களென்று கணித்திருக்கிறது. ஜப்பான் தேசத்திலோ திட்டவட்டமான கணக்கு பார்த்ததில் 100-க்கு 80 பேர் பள்ளிக்கூடத்துக்குப்போய் வருகிறார்களாம். ஜப்பான் தேசத்தின் பட்டி தொட்டிகளிலும் முதலாய் கொல்லன்

தச்சன், வண்டிக்காரன் முதலானவர்கள் வாசிக்கத் தெரிந்தவர்களாயிருக்கிறார்கள். தெருவில் புல் விற்கும் வயோதிபரும், மீன் விற்கும் கிழவிகளும் தினசரி வர்த்தமானப் பத்திரிகையைப் படிப்பதைக் கண்ணால் கண்டேன். மொத்த ஜனத்தொகையில் பள்ளிக்கூடம் போகிறவர்கள் அமெரிக்க ஐக்ய மாகாணங்களில் நூற்றுக்கு 21, பிரித்தானியா தீவுகளில் 18, ஜப்பானில் 12, நம் தேசத்திலோ 3. என்ன பரிதாபம்! 'என் ஜனங்கள் அறிவில்லாமல் அழிந்துபோகிறார்கள்' என்று இஸ்ரவேலரைக் குறித்துச் சொல்லப்பட்டது எப்படி உண்மையோ அப்படியே இன்று நம் சுய தேச விஷயமாயும் உண்மைதான். அறிவீனத்தினால் சுகவீனம். கணக்குத் தெரியாததால், கணக்கப்பிள்ளை சொன்னதே சட்டம். வாசிப்பில்லாததினால் செட்டியார் எழுதி வைத்ததே கணக்கு. வியாதி, மரணம், கடன், அவபக்தி யாவற்றிற்கும் மூலகாரணம் கல்வியில்லாதிருப்பதே. வருஷத்துக்கு வருஷம் தேசம் இவ்விஷயத்தில் தேறி வருகிறது மெய். 1921-க்கும் 1931-க்குமிடையில் 55,00,000 பேர் கல்வி கற்றிருக்கின்றனர். 1931-க்கும் 1941-க்கும் இடையில் முன்னிலும் அதிகத்தேற்சி. பதினைந்து வயதுக்கு மேற்பட்ட ஸ்திரீகளில், முப்பது வருஷத்துக்கு முன் வாசிப்பறிந்தவர்கள் ஐந்து லக்ஷம். தற்போது முப்பது லக்ஷம். எனினும், இன்னம் நடக்கவேண்டிய வேலை எவ்வளவோ அதிகம்!

இந்தியா முழுவதிலும் 36 லக்ஷம் பேர் இங்கிலீஷ் தெரிந்தவர்கள். இதுவும் அபிவிருத்தியே.

ஒவ்வோர் ராஜதானியையும் பிரத்தியேகமாகக் கவனிப்பின், கல்வியில் பர்மாவே பிரதம ஸ்தானம் வகிக்கும். அங்கு நூற்றுக்கு 37 பேர் படித்தவர்கள்; கொச்சியில் 33 பேர், திருவாங்கூரில் 29 பேர். ஹைதராபாத் சமஸ்தானத்தில் புருஷர் நூற்றுக்கு எட்டுபேரும், ஸ்திரீகள் நூற்றுக்கு ஒருவர்மட்டும் வாசிக்கக் கற்றவர்கள்; இச்சமஸ்தானமே கல்வி விஷயத்தில் அதம ஸ்தானம் பெற்றுள்ளது.

அந்தந்த மதஸ்தர்களின் கல்வியறிவைப் பரீட்சித்தால், கிறிஸ்தவர்களில் நூற்றுக்கு 28 பேர் வாசிப்பறிந்தவர்களெனக் காணும். (புருஷர் நூற்றுக்கு 35 பேர், ஸ்திரீகள் நூற்றுக்கு 20 பேர்). ஹிந்து சமயிகள் நூறுபேரில் 8 பேர் படிப்பறிந்தவர்கள். (புருஷர் 14, ஸ்திரீகள் 2). இஸ்லாமியரில் நூற்றுக்கு 6 பேர் மாத்திரம் வாசிக்கக்கூடியவர்கள். (புருஷர் 10, ஸ்திரீகள் 2). ராஜாங்கத்தார் தற்சமயம் இது விஷயத்தில் அதிக சிரத்தை எடுத்துக்கொள்வதினால், இனி வருங் காலத்தில் கல்வி துரிதமாய் அபிவிருத்தியாகுமென்பதற் கையமில்லை. இந்துதேசத்திலுள்ள கிராமங்களில் மூன்றில் இரண்டுக்கு எவ்வித பாடசாலையும் கிடையாதென்று 1931-ம் வரு ஜனசங்கை அறிக்கையில் கண்டிருந்தது. பிரஜைகள் செழுமையாய்ப் பிழைக்கவேண்டுமாகில் பொதுஜனக் கல்வி அவசியம். விவசாய விருத்தியோ, சுகாதார ஞானமோ, அரசாங்க அறிவோ—இவற்றில் ஒன்றும் கல்வியின்றி லபிக்காது. நம் தேசம் சகல விஷயங்களிலும் முன்னேற வேண்டுமாகில் பிரதம கல்வி இன்றியமையா அவசியம்.

7. ஜாதி. — 'இந்துமார்க்கமாகிய கமானைத் தாங்கி நிற்கும் நெற்றிக்கல் ஜாதியாசாரம்' என்று ஓர் நூலாசிரியர் கூறுகின்றார். இத்தேச ஜனங்களுள் ஆயிரக்கணக்கான வெவ்வேறு ஜாதிப் பிரிவுகளுள். ஜனசங்கைக் கணக்கில் 2,300 ஜாதிகளின் நாமங்கள் கண்டிருக்கின்றன. ஐந்துகோடி ஜனங்களை வெளி ஜாதியார் வகுப்பில் வைத்திருக்கிறது. மற்றவர்கள் உள் ஜாதியாராம்! கர்வம், விரோதம், தன்னயம் முதலிய துர்க்குணங்களால் தேசம் சீரழிவதற்கு ஜாதியே மூலகாரணம்.

பந்தர்க்கர் என்னும் வித்வான்: துரைத்தன விஷயமாய் இந்தியா அடிமைத்தனத்தி லிருப்பதற்குக் காரணம் ஜாதிக்கட்டுப்பாடென்று சொல்லுகிறார். மானிடக்கட்டுப்பாட்டுகளிலெல்லாம் மிகவும் கொடியதும், அதிகத் தீமை விளைவிப்பதுமான ஏற்பாடு ஜாதி வித்தியாசமே என்று மேயின் என்னும் சட்டநிரூப வியாக்யானி கூறுகின்றார்.

ஓர் ஹிந்து வர்த்தமானப் பத்திரிகையில்: ஜாதிக்கட்டுப் பாடு இந்தியாவில் செய்திருக்கும் பயங்கரமான நாசத்தை நாவாற் சொல்லச் சாத்தியப்படாது; ஜாதி ஆசாரப்படி நடந்து நடந்து நம் தேசத்தின் வாழ்வை நாமே சீர் குலைத்துப்போடுகிறோம் என்று கண்டிருக்கிறது. ஜாதிக் கட்டுப்பாட்டினால் விளைந்திருக்கும் தீமைகளை ஹிந்து சீர் திருத்தக்காரர் பின்வரும் வார்த்தைகளில் தொகுத்துக் காட்டியிருக்கிறார்கள்:—இக்கட்டுப்பாடானது,

1. ஜாதியோடு ஜாதி சண்டை செய்யவும், விரோதம் பாராட்டவும் செய்து, தேசத்தின் ஜனங்களைத் துண்டு துண்டாய்ப் பிரித்துவிட்டது;

2. அந்தந்த ஜாதிக்கு அந்தந்த வேலை என்று ஏற்பாடு பண்ணியதால், கைத்தொழில்களில் சிலவற்றைத் தீழ்ப் பென்று எண்ணவும், வர்த்தகமும், கைத்தொழிலும் குன்றிப்போகவும் வழி உண்டுபண்ணியிருக்கிறது;

3. தன் தன் ஜாதிக்குள்ளேயே சம்பந்தங் கலந்து கொள்ளும் விதியை ஏற்படுத்தி, ஜன விருத்தியைக் குறைத்துக்கொண்டு வருகிறது;

4. சிசு விவாகத்திற்குக் கைகொடுத்திருப்பதுமன்றி, கல்யாணங்களில் கொடுமையான ஸ்திரீதனங்கள் கேட் கும் வழக்கத்தையும் உண்டாக்கியிருக்கின்றது;

5. ஜனங்கள் தம் தம் சொந்த அபிப்பிராயங்களை அனுஷ்டித்து நடக்காமல், மாமூல்படியும் ஜாதிவிதிப் படியும் நடந்துவரும்படி செய்வதால், சுயாதீன சித் தத்தை அடக்கிப்போட்டது;

6. கல்வி, மனோதத்துவ விர்த்தி, ஞானபோதனை யாவும் சில ஜாதிகள் வசம் மாத்திரம் இருக்கும்படி பண்ணி, ஏராளமான ஜனங்களை அறிவீனத்திலேயே வைத்துவிட்டது என்கிறார்கள்.

ஜாதிபேதத்தைத் தவிர்ப்பதற்குத் தற்காலத்தில் பல பிரயத்தனங்கள் நடைபெற்றுள. ஹரிஜன முன்னேற் றம், தேவாலயப் பிரவேச முயற்சி, தீண்டாமை நிரா

கரிக்கும் இயக்கம்—முதலியன இந்நல்ல நோக்கத்துடன் வேலை நடப்பிக்கின்றன. எனினும், 1931-ம் ஆண்டின் ஜன சங்கை அறிக்கை ஆக்கியோன் ஹட்டன் என்பவர் சொல்லுகிறபடி: இந்துதேச ஜனசமூகத்தில் ஜாதிக்கட்டுப்பாடு இன்னம் வலிமை பொருந்தியதாகவே இருக்கிறது; ஹிந்துக்களில் மிச்சமானபேர் இதை விட்டுவிட்டதாகச் சொல்லமுடியாது. இதற்கோர் காரணம், ஜாதிக்கட்டுப்பாட்டுக்கும் ஹிந்து மதத்திற்குமிருக்கும் சம்பந்தமே.

கிறிஸ்துநாதரில் யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை; கிறிஸ்து சபையின் ஐக்கியத்துக்குள்ளேயே தேசபேதங்கள், குலபேதங்கள், வர்ணபேதங்கள் யாவும் வலிமையற்றுப்போகும். கிறிஸ்தவமக்களுக்குள் இன்னும் இவ்விஷயத்தில் என்னென்ன குறை இருந்தபோதிலும், ஹிந்து சமூகமெங்கும் காணப்படாத ஒருமைப்பாடு திருச்சபையிலுண்டென்பது யாவரும் அறிந்த விஷயம். எனினும், காணப்படும் அறைகுறைகளினால், திருச்சபையின் சாட்சி இக்காரியத்தில் அத்தனை பலமாய் விளங்கவில்லை. ஆனதுபற்றி, நம் தேசத்தின் ஜாதிப்பிரிவினைகள் யாவும் ஒழியவேண்டுமென்ற அவாவுள்ள கிறிஸ்தவர்கள் யாவரும் தம்மிலுள்ள ஜாதிப்பிரிவினைகள் விரோதங்கள் யாவற்றையும் முற்றிலும் தவிர்த்து, இயேசுபெருமானின் அடியார் வெவ்வேறு தேசம், பாஷை, குலம், கோத்திரத்தினின்று வந்திருந்தபோதும், வந்தபின், "அவருக்குள் அனைவரும் ஏகர்" என்று திருஷ்டாந்தப்படுத்திக் காட்டக் கடன்பட்டவர்கள்.

அநுபந்தம்

அந்தந்த மாகாணங்களில் கல்வியறிவின் கணக்கு:—

1941-ன் கணக்கின்படி நூறு பேரில் பின்கண்ட தொகையினர் வாசிக்கப் படித்தவர்கள்.

பர்மா	37	மத்திய மாகாணங்கள்	7
கொச்சி	35	பஞ்சாப்	10
திருவாங்கூர்	48	பேஹார், ஒரிஸ்ஸா	8,10
பரோடா	25	ஐக்கிய மாகாணங்கள்	9
வங்காளம்	16	மத்திய இந்தியா	5
சென்னை	12	ஹைதராபாத்	6
பம்பாய்	20	ராஜபுதனம்	5
மைசூர்	12	காஸ்மீரம்	5
அஸ்ஸாம்	10		

இந்தியா முழுவதும் 12

அத்தியாயம் 2

இந்தியாவின் ஸ்திரீகள்*

'ஓர் தேசம் அடைந்திருக்கும் நாகரீகத் தேர்ச்சிக்கு சரியான உறைகல் அதிலுள்ள ஸ்திரீ ஜாதியின் சீரே. ஸ்திரீகள் நிலைமையே ஓர் தேசத்தவரின் நாகரீக அபிவிர்த்திக்கு அளவுகோல்.'

இந்த அளவுகோலை வைத்து நிதானிக்குங்கால், நமது தேசம் மிகவும் தாழ்ந்த நிலைமையில்தானிருக்கிறதென்று சொல்லவேண்டும். சமுதாய சீர்திருத்த முயற்சிகளிலும், சுதேச கைத்தொழில் முன்னேற்றத்திலும், அரசாங்க இயக்கத்திலும் ஸ்திரீகள் தற்காலத்தில் கைகொடுத்துதவியபோதிலும், மொத்தத்தில் ஸ்திரீ ஜாதியின் நிலைமை இன்னம் நிர்ப்பந்தமே.

1. கல்வி.—தேச க்ஷேமத்துக்குப் புருஷர் கல்வி எவ்வாறு முக்கியமோ ஸ்திரீகள் கல்வியும் அவ்வாறே முக்கியம். எனினும், பெண்களில் நூற்றுக்கு மூவர் மாத்திரம் வாசிக்கப் படித்தவர்கள்! இவ்விகிதாசாரம் தேசத்தின் எல்லாப் பாகங்களிலும் ஒன்றுபோலில்லை. இவ்விவரத்தை இவ்வத்தியாயத்தின் இறுதியிலுள்ள ஜாபிதாவிற் காணலாம். கொச்சி, திருவாங்கூர், பர்மா முன்னிற்கும் பகுதிகள்; அப்பால் மைசூர், பம்பாய், சென்னை.

ஐந்து வயதுக்கும் பத்து வயதுக்குமிடையிலுள்ள இரண்டுகோடி பெண் பாலியரில் 4,29,000 பேர் மட்டும் வாசிக்கக் கற்றவர்கள். இருபது லக்ஷம் பெண்பிள்ளைகள் பிரதம பாடசாலைகளி லிருப்பதாகவும், இவர்களில் பதிமூன்று லக்ஷம்பேர் முதலாம் படியிலிருப்பதாகவும் சர்க்கார் கல்வி இலாக்கா அறிக்கை கூறுகின்றது. நூற்றுக்குத் தொண்ணூறுபேர் நான்காம் வகுப்புவரை படிக்கிறதில்லையாம். சிசு விவாகமே இதற்கு முக்கிய இடையூறு. தேவையான உபாத்தினிகள் இல்லாதிருப்பதும் மற்றோர் தடை. 'பேதைமை என்பது பெண்டீர்க் கணிகலம்' என்ற

---

* இந்த அத்தியாயத்தின் இலக்கங்கள் 1931-ம் வருஷத்து ஜனசங்கை இலக்கங்கள்.

சுலோகத்தை மேற்கோளாகக்கொள்ளும் ஜனம் அவர்களைப் பள்ளியில் வைக்காமற்போனது ஆச்சரியமல்ல.

இந்தியாவிலுள்ள பற்பல மதப்பிரிவின்படி பெண்களுடைய கல்வி நிலைமையைக் கவனிக்குங்கால், பார்ஸி மதப் பெண்கள் முதலிலும், மகம்மதியப் பெண்கள் கடைஸ்தானத்திலும் நிற்கிறார்கள். ஆயிரம் பார்ஸிப் பெண்களில் 734 பேர் படித்தவர்கள்; கிறிஸ்தவர்களில் 203 பேர்; இந்துக்களில் 21; மகம்மதியரில் 15 பேர் மாத்திரம்! நமது தேசத்து ஸ்திரீகளை மூடியிருக்கும் அந்தகாரமும், வீண்பக்தியும், மூடத்தனமும் எவ்வளவு என்று இந்தக் கணக்கு காட்டுகிறதல்லவா? இதின் அர்த்



இச்சக்கரம் இந்து தேசத்தின் பத்தொன்பதுகோடி ஸ்திரீகளைக் குறிக்கும். வெள்ளைப் பாகம் வாசிக்கப் படித்தவர்களைக் குறிக்கும்

தம் நமக்குப் புலப்படுகிறதா? லக்ஷாதி லக்ஷம் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய தாய்மார் நிரக்ஷாகுக்ஷிகளாய் வளருகிறார்கள்! மேலே கண்ட படத்தைக் கவனிக்கவும்.

2. அந்தர்ப்புரம்.—அந்தர்ப்புரம் என்பதற்குப் பெண்கள் புழங்கும் அறைகள் என்று அர்த்தம். அந்தர்ப்புரப் பழக்கமுள்ள ஸ்திரீகளின் தொகை நாலுகோடி. இவர்கள் ஓரிடத்தைவிட்டு மற்றோர் இடத்துக்குப் போகவேண்டுமானால், ஆண்கள் கண்களுக்கு மறைந்திருக்கும்படி முழுவதும் முக்காடிட்டுக்கொள்ளுவார்கள். படுதா மறைவுக்குட்தான் ஆயுள்நாளை யெல்லாம் அவர்கள் போக்கவேண்டும். 'அந்தர்ப்புரங்களில் வசிக்கும் ஸ்திரீகள் கிணற்றில் கிடக்கும் தவளைக்கு ஒப்பாயிருக்கிறார்கள். அலங்காரமான பொருட்களும், விசித்திர விநோதக் காட்சிகளும் எங்கும் இருந்தாலும், எங்களுக்கோ அவைகளைப் பார்க்க இடமில்லை. எங்கள் கண்களுக்கு அவைகள் மறைக்கப்பட்டிருக்கின்றன' என்று ஓர் ஹிந்து மாதுசிரோமணி எழுதியிருக்கின்றாள். நிஷ்டூரமான இந்த மாமூல்படி நடக்க முயன்று, லக்ஷக்கணக்கான நம் சகோதரிகள் ஜீவகாலமெல்லாம் வீட்டிற்குள்ளடைபட்டு, உலகின் கண்ணுள்ள அலங்காரக் காட்சிகளைக் கண்ணுறவும், இப்பிரபஞ்சத்தில் விளங்கும் விசித்திர விநோதங்களைப் பார்க்கவும், ஆலயங்களில் சுவாமி தரிசனை செய்யவும் சுலாக்கியமற்று, மனோதத்துவ முயற்சி குன்றி, பலவித ரோகங்களுக்குள்ளாகி, வாழ்நாளெல்லாம் வீணாகப் போக்குகிறார்கள். என்றாலும், இவ்வாறு அடைபட்டிருக்கும் ஸ்திரீ ஜனங்களே தங்கள் நிலைமையைப்பற்றிப் பெருமை பாராட்டுவதும், அந்தர்ப்புர வாழ்க்கையே தங்கள் உயர் குலத்துக்கு அத்தாக்ஷி யென்று நினைப்பதும் தேசாச்சாரம். இவர்கள் வெளியேறி, தேச க்ஷேமத்திற்காகவும் பொது ஜன நன்மைக்காகவும் உழைப்பது நமது நாட்டின் முன்னேற்றத்துக்கு இன்றியமையா அவசியம்.

3. சிசு விவாகம்.—இல்லற வாழ்க்கையின் இன்ப நிலைமையைச் சீர்குலைக்கும் அரிபிளவைகளிலொன்று சிசு விவாகமே. 1931-ம் வருஷம் ஜனசங்கைக் கணக்கின்படி

பத்து வயதுக்குக் கீழ்ப்பட்ட மங்கலிகளின் தொகை 50,02,000. இவர்களில் 8,01,000 பேர் ஐந்து வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள். ஒரு வயதுக்குக் கீழ்ப்பட்ட மதலை மனைவிகளின் தொகை 44,000. இளமைப்பிராயத்திலேயே சிறுமிகள் கல்வியை நிறுத்திவிடுவதற்குச் சிசு விவாகம் வழிநடத்துவது மாத்திரமல்ல, அவர்கள் தேகக் கட்டு விட்டுப்போவதற்கும், மனோதத்துவ முயற்சி குன்றுவதற்கும், அகாலமரணத்திற்குச் செல்வதற்கும் சிசு விவாகமே முக்கிய காரணம். கணவன் மரிக்குங்கால், இந்தச் சிசு மங்கலி அமங்கலியாகி, புனர்விவாகம்செய்து கொள்ளும் சலாக்கியமற்று, வாழ்நாளெல்லாம் கைமைக் குரிய கஷ்ட ஜீவனம்பண்ணி காலந்தள்ளவேண்டும். 'நமது தேசத்தில் வழங்கும் கொடிய பழக்க வழக்கங்களி லெல்லாம் மிகத் தீயது சிசு விவாகமே; ஓர் ஜாதி உற்பத்தியாகும் ஊற்றுக்கண்களை இவ்வழக்கம் கெடுத்துக்கொண் டிருப்பதுமன்றி, ஜனவிருத்தியையுங்கூட இது தடுத்து நிற்கிறது,' என்று பிரக்யாதி பெற்ற ஓர் ஹிந்து மகான் சொல்லுகிறார்.

1930-ம் வருஷம் எப்பிரல் மாதத்தில் திவான் பகதூர் ஹரிபிலாஸ் சர்தா என்பவர் பிரேரேபித்த சர்தா சட்டம் அமலுக்கு வந்தது. அதுமுதல், பையன்கள் 18 பிராயத்திற்கு முன்னும், பிள்ளைகள் 14 பிராயத்திற்கு முன்னும் விவாகஞ்செய்வது சிக்ஷைக்குரிய குற்றமாகப் பாவிக் கப்படுகிறது. ஆனால் இது பிரிட்டிஷ் நேர் அரசாட்சிக் குட்பட்ட மாகாணங்களிற் செல்லுமே தவிர, சுதேச சமஸ்தானங்களிற் செல்லாது. இச்சட்டத்தினால் சிசு விவாகம் நின்றுபோகவில்லை. அநேகர் இச்சட்ட சிக்ஷைக் குத் தப்பிக்கொள்ளும் நோக்கமாய் அக்கம்பக்கத்தி லுள்ள சுதேச சமஸ்தானங்களுக்கு இரண்டொருநாட் சென்று, அங்கே விவாஹ மஹோற்சவத்தை நிறைவேற் றித் திரும்பி வருகிறார்கள். எனினும், காலஞ் செல்லச் செல்ல இவ்வழக்கம் குறையுமென்று நம்பலாம்.

4. கைமையிருப்பு.—இந்தியாவிலுள்ள பெண்கள் தொகை சுமார் 17,10,00,000. இவர்களில் ஆறிலொரு பங்குப் பேர் விதவைகள்!

விதவைகளை நடத்தும் முறை பற்பல மாகாணங்களில் பற்பலவாருயிருக்கின்றது. குடும்பத்துக்குக் குடும்பம் வித்தியாசமாயிருக்கலாம். சத்தி என்றழைக்கப்பட்ட உடன்கட்டை ஏறுதல் என்ற குரூர வழக்கமே பூர்வகாலத்தில் சகஜம். இப்போதோ அக்கொடிய முறை கட்டோடு நிறுத்தப்பட்டாயிற்று. ஆகிலும், ஹிந்து விதந்துகளின் கதி தற்காலத்திலும் அத்தனை சிரேஷ்டமல்ல என்பதை ஹிந்துக்களுடைய இல்லற ஒழுக்கங்களை நன்ருய் அறிந்தோர் யார்தான் மறுக்கக் கூடும்? விதவையைக் கண்டால் துர்ச்சகுனம் என்று விலகிப்போகாதவரில்லை. விமரிசையாய் நடைபெறும் சுக சோபனுதிகள் சகலத்திற்கும் அவள் தள்ளுபடி. அவள் சிவப்புச்சேலை வெள்ளைச்சேலையாகவும், இருகால் போஜனம் ஒருகால் போஜனமாகவும், நிறை காது வெறுங் காதாகவும், மயிர்த்தலை மொட்டைத்தலையாகவும் மாறுகின்றன. கூலியில்லாவிட்டாலும் வேலைக்குக் குறைவில்லையென்பதுபோல் வீட்டிலுள்ள கஷ்டமான வேலைக்கெல்லாம் அவளே உத்தரவாதி. அவள் கணவன் போனுன்; அவள் சுகமும் அதோடு போனது. மேலும் இளந்தலை விதவைகளின் பாட்டை என்ன சொல்ல! பதினைந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட விதவைகள் தொகை 3,21,701; பத்து வயதுக்குக் கீழ்ப்பட்ட விதவைகள் தொகை 1,05,482; ஐந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட விதவைகள் தொகை 30,880; ஒரு வயதுக்குக் கீழ்ப்பட்ட மதலை விதந்துகள் 1515. ஹிந்துமதச் சீர்திருத்த சமாஜங்கள் இவ்விஷயத்தில் நல்ல வேலைசெய்து வருகின்றன. இவற்றின் பிரயத்தனத்தினுல் அங்கங்கே சில விதவைகள் மறு விவாகஞ் செய்துகொள்ளுகிருர்கள்; பஞ்சாபில் ஐந்து வயதுக்குக் கீழ்ப்பட்ட விதவைகள் இல்லை. வங்காளத்தில் தொகை குறைந்து வருகிறது. இவ்விஷயத்தில் நம்தேசம் சீக்கிரம் விடுதலைபெறும் என்று நம்ப இடமுண்டு.

கிறிஸ்துவின் சுவிசேஷ ஒளியே ஹிந்து தேச விதவைகளுக்கு ஆறுதலையும் விடுதலையும் கொண்டுவரக்கூடும். விதவைகளின் கஷ்டத்தை நிவிர்த்திக்கும்படி ஸ்தாபக

மான முதல் விதவை சாலை கிறிஸ்தவ சாலையே. 1,500 விதவைகளையும் அநாதப் பிள்ளைகளையும் ஒன்றுசேர்த்து, அவர்கள் இகபர வாழ்வைக் கருதி, பண்டித ராமாபாய் அம்மாள் அருந்திறமையுடன் நடத்திவந்த முக்திசாலை விதந்துகள்மீது இயேசுபெருமான் பாராட்டும் கருணைக்குப் போந்த அத்தாட்சியும் நிலையான சின்னமுமல்லவா?

5. துன்மார்க்க ஜீவனம்.—தாசிகள் எல்லாத் தேசங்களிலும் உளர். மார்க்க சடங்காச்சாரங்களைச் சரிவர நிறைவேற்றுவதற்குத் தாசிகளும் அவசியமென்பதோ நமது தேசத்தின் வெட்கமான விஷயங்களில் ஒன்று. இளமையிலேயே ஏராளமான சிறு பெண்களை இதற்காகப் பிரத்தியேகப்படுத்தி வளர்க்கும் வழக்கம் தொன்று தொட்டு இருந்து வருகிறது. இப்பெண்கள் சிறு பிராயத்திலேயே வாசிக்கவும் இனிய ராகங்கள் பாடவும் அபிநயத்துடன் நடனஞ்செய்யவும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இவர்களுக்குத் தேவதாசிகள் என்று பெயர். ஹிந்து சீர்திருத்தக்காரரில் ஒருவர் தாசிகளைப்பற்றி ஒரு பத்திரிகையில்: 'தேசாச்சாரம், மார்க்காச்சாரம் என்று சொல்லி தற்காலத்திலுங்கூட தாசிகளைத் தேவாலயங்களில் வைத்துக் காப்பாற்றிவருகிறார்கள்; ஓர் ஜாதியாக இவர்களை வைத்துப் பரிபாலித்துவருவது ஹிந்துக்களுடைய நாகரீகத்திற்கும் பேருக்கும் ஹீனம்' என்று சாட்சி பகர்ந்திருக்கிறார். இக்கேட்டை நீக்குவதற்காகச் சமீபகாலத்தில் சிற்சில பிரயத்தனங்கள் நடைபெற்றுள. 1930-ம் ஆண்டின் ஆரம்பத்தில் சவந்தவடி என்ற சமஸ்தான ராஜா தன் ஆதீனத்திலுள்ள தேவாலயங்கள் பேரால் 18 வயசுக்குக் கீழ்ப்பட்ட பெண்களைப் பிரதிஷ்டை செய்யலாகாதெனச் சட்டம் விதித்தார். அதே ஆண்டு ஜூலை மாசத்தில் திருவாங்கூர் ராஜ்யத்தை அரசாண்ட மஹாராணி தன் அதிகாரத்திலுள்ள தேவாலயங்களில் தாசிகளைப் பிரதிஷ்டை செய்வதை முற்றும் நிறுத்தினார். 1910-ம் வருஷத்திலேயே மைசூர் ராஜ்யத்தில் இவ்வழக்கம் நிறுத்தப்பட்டது. இச்சமஸ்தானங்கள் ஆரம்பித்த இந்த நற்சட்டம் தேசமெங்கும் பரம்பினால் நலம்.

மேலே கண்ட பெலவீனங்களினின்று விடுதலைபெற்றிருக்கும் சகோதரிகளுக்கு ஓர் வார்த்தை: மாது சிரோமணிகாள், உங்கள் சுயதேசத்தாரான உங்கள் சகோதரிகள் விஷயமாய் உங்கள் கடமையைச் சிந்தித்துப் பாருங்கள். உங்கள் கல்வி, உங்கள் நாகரீகம், உங்கள் சுயாதீனம், உங்கள் உத்தியோகம்—உங்கள் சுயமேன்மைக்காகவும் சுயலாபத்துக்காகவுமல்ல, உங்கள் தேசத்துக்காக அருளப்பட்டதென்று எண்ணுங்கள். சம்பளத்தையும் உத்தியோகத்தையுமல்ல, ஊழியத்தை நாடுங்கள். பூர்வத்தில் ஓர் ராஜஸ்திரீ தன் ஜனத்தின்மீது வர இருந்த பயங்கரமான அழிவை அறிந்தபோது, 'என் ஜனத்தின் மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படி பார்க்கக்கூடும்? நான் செத்தாலும் சாகிறேன், என் மன்றுட்டுக்கு என் ஜனங்கள் கட்டளையிடப்படுவதாக' (எஸ்தர் 8: 6; 4: 16; 7: 3) என்று சொன்னாள். இந்தியாவின் குமாரத்திகள் இரட்சிப்படையும் நோக்கமாய், அந்த இராணியின் வார்த்தைகளைச் சொல்லித் தங்களைப் பிரதிஷ்டைபண்ணும் கிறிஸ்தவப் பெண்கள் அநேகரைக் கடவுள் எழுப்புவாராக!

அநுபந்தம்

அந்தந்த மாகாணங்களில் புருஷர்-ஸ்திரீகள் கல்விக் கணக்கு.
(1931-ன் கணக்கு)

நூறு புருஷர், நூறு ஸ்திரீகளில் வாசிக்கக்கூடியவர்கள்:—

	புரு.	ஸ்திரீ.		புரு.	ஸ்திரீ.
பர்மா	56	16	மத்திய மாகாணங்கள்	12	1
கொச்சி	46	22	பஞ்சாப்	10	2
திருவாங்கூர்	41	17	பேஹார் ஒரிஸ்ஸா	10	·8
பரோடா	33	8	ஐக்கிய மாகாணங்கள்	9	1
சென்னை	19	3	மத்திய இந்தியா	9	1
வங்காளம்	18	3	ஹைதராபாத்	8	1
பம்பாய்	17	3	ராஜபுதனம்	7	·6
மைசூர்	17	3	காஸ்மீரம்	7	·6
அஸ்ஸாம்	15	2			

இந்துதேச சமயங்கள்



① = ஹிந்துக்கள்

② = மகம்மதியர்

③ = புத்தர்

④ = பூத வணக்கக்காரர்

⑤ = ஜயினர்-சீக்கியர்-யூதர்-பார்வஸியர் முதலியோர்

⑥ = கிறிஸ்தவர்கள்

அத்தியாயம் 3

இந்துதேச சமயங்கள்*

நம் தேசத்து ஜனங்களில் பின்வரும் மதானுசாரிகள் உண்டு. 1931-ம் வருஷக் கணக்கின்படி,

யூதர்	24,121	பூத வணக்கக்காரர்	82,80,347
பார்ஸீயர்	1,09,000	புத்தர்	1,27,86,806
சமணர்	12,52,000	இஸ்லாமியர்	7,76,77,545
சீக்கியர்	43,35,000	ஹிந்து சமயிகள்	23,91,95,140
கிறிஸ்தவர்	62,96,763		

வேறுவிதமாய்ச் சொல்லின், இத்தேசத்தவர்களில் நூறுபேருக்கு அறுபத்தொன்பதுபேர் ஹிந்துக்கள், இருபத்திரண்டுபேர் இஸ்லாமியர், நாலுபேர் புத்தர், இருவர் பூத வணக்கக்காரர், ஒருவன் கிறிஸ்தவன், ஒருவன் சீக்கிய மதஸ்தன்.

யூதரும் பார்ஸீயரும் மிச்சமாய்ப் பம்பாய் ராஜதானியில் வசிக்கின்றனர். சமணரைப் பம்பாய், ராஜபுதனம், மத்தியஇந்தியாவிற் காணலாம். சீக்கியர் பஞ்சாபுக்குரியவர்கள். புத்தரில் பெரும்பான்மையோர் பர்மாவில் உண்டு. இந்துக்கள், இஸ்லாமியர், கிறிஸ்தவர்களை ஏறக்குறைய தேசத்தின் எப்பாகத்திலும் காணலாம். இஸ்லாமியரில் 2,70,00,000 பேர் வங்காளத்தில் வசிக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் மொத்தத் தொகையில் பாதிப்பேர் சென்னை ராஜதானியிலுண்டு.

மேலே கட்டிய சமயங்கள் ஒவ்வொன்றைப்பற்றியும் சிற்சில குறிப்புகள் இங்கு வரைவோம். அந்தந்தச் சமயங்களைப்பற்றி விவரமாய்ப் படிக்க விரும்புவோர் பெரிய நூல்களைப் பார்வையிடவேண்டும்.

1. **யூத** மதம். — யூதர் நம் தேசத்தில் பூர்வகாலம் தொடங்கி வாசம்பண்ணிவந்திருப்பதாய்த் தோன்றுகிறது. உத்தேசம் கிறிஸ்துவுக்குப்பின் முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் இங்கே வந்து குடியேறியிருக்கலாம் என்பது அநுமானம். பம்பாய், பூனா, கொச்சி

---

*இவ்வத்தியாயத்தின் இலக்கங்கள் யாவும் 1931-ன் இலக்கங்கள்

என்ற நகர்களில் யூதர் குடியேற்றங்கள் உண்டு. இவ்விடங்களில் ஜெப ஆலயங்களும், ஜெப ஆலயங்களைச் சேர்ந்த பள்ளிக்கூடங்களும் இருக்கின்றன. புராதனத் தோல் சுருளில் எழுதிய பழைய ஏற்பாட்டுக் கையெழுத்துப் பிரதிகளிலிருந்தே இன்னும் பாடம் வாசிக்கிறார்கள். குறிக்கப்பட்ட பாடத்தை நின்று வாசிப்பதற்காக, ஜெப ஆலயத்தின் மத்தியில் ஓர் பீடமும், சுவரோரம் ஆசனங்களும், ஸ்திரீகள் ஆராதிக்க மேல் தட்டில் படிக்கட்டு ஆசனங்களும் உண்டு. பழக்க ஒழுக்கங்களில் இவர்களும் பூர்வகாலத்து யூதரைப்போலவே சடங்காசாரக்காரராயும் மதவைராக்கியமுடையோராயும் விளங்குகின்றனர். யூதர் பெருத்த வியாபாரிகள், தனவந்தர். இயேசு மேசியாவை அவர்கள் அங்கீகரிக்காதபடியால், 'மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள்வரைக்கும் முக்காடு அவர்கள் இருதயத்தின் மேல் இருக்கிறது.' சில இடங்களில் இவர்கள் பிள்ளைகள் கிறிஸ்தவ பாடசாலைக்கு வருகிறார்கள். 1931-ம் வருஷத்துக்கு முந்தின பத்து வருஷத்தில் யூதர் 100-க்கு 11 வீதம் விருத்தியானார்கள். இது ஜனன விருத்தியினால் அதிகரித்த தொகையேயன்றி, புதிதாய் எவரும் யூத மார்க்கத்தைச் சேர்ந்ததினால் உண்டானதன்று.

2. ஸோரோஸ்தர் மதம். — ஸொரோஸ்தர் என்பவர் கிறிஸ்துவுக்குச் சுமார் ஏழு நூற்றாண்டுக்குமுன் பாரசீக தேசத்தில் வசித்த ஓர் மார்க்க சீர்திருத்தக்காரர். இவர் ஏற்படுத்திய மார்க்கத்துக்கு ஸொரோஸ்தர் சமயம் எனப் பேர் வழங்குகின்றது. இதுவே பார்ஸீயர்கள் வழிபடும் மார்க்கம். இவர்கள் கிரந்தத்திற்கு அவெஸ்தா என்பார்கள். ஸொரோஸ்தர் இயற்றிய புராதன பாடல்கள் இவ்வாகமத்தில் அடங்கியிருக்கின்றன.

சுமார் ஆயிரம் வருஷத்துக்குமுன், பாரஸீக தேசத்தை அரபியர் ஜெயித்துக் கீழ்ப்படுத்தி, இஸ்லாமிய சமயத்தைப் பலவந்தமாய் ஸ்தாபித்த காலத்தில், பாரஸீயரில் பலர் இஸ்லாமியருடைய பட்டயத்துக்குப் பயந்து, தங்கள் சுயதேசம் விட்டு ஓடி, கடைசியாய்ப்

பம்பாயிலும் அதின் சுற்றுப்புறங்களிலும் குடியேறினார்கள். இதுவே பார்ஸீ ஜனங்கள் இந்தியாவுக்கு வந்த சரிதை. பார்ஸீயர்கள் பெருத்த வர்த்தகர். வியாபார விருத்தியிலும், குன்றா முயற்சியிலும், பரோபகாரத்திலும், நாகரீகத் தேர்ச்சியிலும் வேறெந்த மதஸ்தரும் இவர்களுக்கு இணையாகார். ஆண்களில் ஐந்தில் நாலு பங்குப்பேரும், பெண்களில் முக்கால்வாசிப் பேரும் வாசிக்கக்கூடியவர்கள்.

பார்ஸீயரது பூர்வமதத்துக்கும் ஆரியர் இந்து தேசத்துக்குக்கொண்டுவந்த இருக்குவேத மதத்துக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. பார்ஸீயரின் முற்பிதாக்களும் இந்திய ஆரியரின் முற்பிதாக்களும் ஏகமாயிருந்த காலத்திலிருந்து இவ்வொற்றுமை உற்பத்தியாயிருக்கவேண்டும். திட்டமான காலம் குறிப்பதரிது; சுமார் கி. மு. 1000 வருஷத்துக்குமுன் என நியாயமுண்டு. இப்பிரபஞ்சத்தின்கண் விளங்கும் இடி, மின்னல், சூரியன், சந்திரன் முதலிய சிருஷ்டிப் பொருட்களைத் தெய்வங்களாகத் தன் தேசத்தவர் வழிபடுவதைப் பார்த்த பக்தன் ஸொரோஸ்தர். கடவுள் ஒருவரே என்னும் சத்தியத்தை மூலோபதேசமாக வைத்து ஓர் மதம் ஸ்தாபித்தனர். சர்வேஸ்வராகிய ஒரே கடவுளை ஆர்மஸ்ட் (ஞான கர்த்தா) என்ற நாமத்தினால் அழைத்தார். இந்த சர்வேஸ்வரருக்குத் தாழ்ந்த அந்தஸ்தில் 'அம்ஷாஸ் பந்துக்கள்' (நித்திய கர்த்தர்) என்று பெயர்கொண்ட நற்குணசீலரான சிரேஷ்ட தூதாக்கள் ஆறுபேரும், இச்சிரேஷ்ட தூதாக்களின் செல்வாக்குக்குள் யஸதர்கள் என்னும் சாமான்ய தூதாக்கள் பலரும் உளரெனக் கற்பித்தனர். விக்கிரக வணக்கத்திற்குக் கிஞ்சித்தேனும் வழியில்லாதபடிக்கும், ஈஸ்வர மூர்த்தியாகிய ஒரே கடவுளை மாத்திரம் ஜனங்கள் அர்ச்சனை செய்யும்படிக்கும் இப்படிச் செய்தனர். பார்ஸீயரும் ஹிந்துக்களும் ஏக குடும்பமாய் வசித்துவந்த காலத்தில் அவர்கள் நமஸ்கரித்த தேவதைகளைக் கடவுள் ஸ்தானத்தினின்று கீழே இறக்கி, மானிடர்க்குத் தொண்டு செய்யும் யஸதர்கள் என்ற தூதாக்களாக அவைகளை மாற்றி, நற்சிந்தை, உத்தமநீதி, சுயாதிபத்தியம், தூய

பக்தி, ஆரோக்கியம், நிர்மலம் என்ற குணப்பெயர்பெற்ற அம்ஷாஸ் பந்துக்களை சிரேஷ்ட தூதாக்களாக அமைத்தனர். இவ்வித குணப்பெயர்கொண்ட தூதர்களுக்கு ரூபம் படைப்பது அசாத்தியமாகையால் விக்கிரகாராதனையைத் தொலைப்பதற்கு இது நல்ல முறையென்று இவ்வாறு ஏற்படுத்தினர். பார்ஸீய மதத்தில் இது ஒரு நற்குறிப்பு.

தீமை உலகத்தில் எவ்வாறு உற்பவித்ததென்பதற்கு ஸொரோஸ்தர் ஓர் நவீன சித்தாந்தத்தை உபதேசித்தனர். மனோவாக்குக் காயங்களினால் தீமை செய்வதை ஆதியில் தெரிந்துகொண்ட அஹ்ரிமான் என்னும் ஓர் தீய ஆத்மனது செய்கையினாலேயே இல்வுலகின்கண் நேரிடும் சகல சன்மார்க்க நெறி தவறுதல்களும், பிரகிருதியில் நேரும் சகல தீங்குகளும் விளைகின்றனவென்பது ஸொரோஸ்தர் கோட்பாடு. இப்பொல்லாத ஆவியோடும், அதின் கர்த்தத்துவங்களான பசாசுக்களோடும் ஓய்வின்றிப் போர்செய்வதே ஆயுள்காலத்தின் வேலையென உபதேசித்தார். நற்சிந்தை, நல்வாக்கு, நற்கிரியை முதலிய சுகுணங்களை இவ்வுலகத்திலிருக்கையில் பேணிவளர்க்கும் பக்தர், 'கீத கிரஹம்' என்ற சுவர்க்கத்தில் மாணத்திற்குப்பின் ஈஸ்வரனோடு நீடூழிகாலம் ஆனந்தங் கொண்டாடுவார்களென்றும், பேய் பசாசுகளை நமஸ்கரித்துச் சேவிக்கின்றவர்களோ 'அபத்த கிரஹம்' என்ற இடத்தில் வேதனையடைவார்களென்றும், கடைசியாக, சோஷியாந்தர் (இரட்சகர்) என்னுமொருவரை ஸொரோஸ்தர் அற்புதமாய் அனுப்புவாரென்றும், அந்த இரட்சகர் அக்னிமயமாய் உருகின ஈயத்தை மேலுலகிலிருந்து ஊற்றிவிடுவாரென்றும், அப்பிரவாகம் அஹ்ரிமானையும் அவனைச் சேர்ந்த பொல்லாத ஆத்துமன்களையும் நிக்கிரகம்பண்ணி, உலகத்தைச் சுத்திகரித்துப் புதுப்பிக்குமென்றும் பார்ஸீ சமயிகள் நம்புகிறார்கள்.

பார்ஸீயர்களுக்குச் சன்மார்க்க பிரமாண முண்டு. அத்துடன் அநேக சடங்காசாரங்களையும் அவர்கள் ஆசரிப்பதுண்டு. நற்கிரியைகளினால் புண்ணியம் சம்பாதித்துக் கொள்ளலாமென்பதும் பார்ஸீயர்களது அபிப்

பிராயம். இதினுலேயே பரோபகாரமான பல பெருத்த நன்கொடைகளை இச்சமயத்தவர்கள் அளிப்பார்கள். பிருதுவி, அப்பு, வாயு, அக்னி என்ற நான்கு பூதங்களுக்கும் வணக்கம் செலுத்துகிறுர்களெனச் சொல்லத் தகுமாறு அவற்றைக் கனபக்தியுடன் மதித்துவருகிறுர்கள். அக்னிபக்தி இவர்களில் விசேஷித்துக் காணப்படுவதுண்டு. அக்னி, அப்பு, வாயு, பிருதுவி முதலிய பூதங்கள் அசுசிப்படாது காக்கப்படவேண்டுமென்ற கருத்தினுல், தங்கள் பிரேதங்களை 'மௌன துருக்கம்' என்னும் கோட்டைக்குள் வைத்து பக்ஷிராசிகள் பக்ஷணம் செய்வதற்குப் போட்டுவிடுகிறுர்கள். பம்பாயில் இத்துருக்கத்தை யாரும் போய்ப் பார்க்கலாம்.

பார்ஸீய மதத்துக்கும் யூதமார்க்கத்துக்கும் சில சம்பந்தமுண்டு. சிறையிருப்பிலிருந்து யூதரைத் தம் தேசத்துக்குப் போகவிட்டது பார்ஸீய மதத்தானுகிய கோரேஸ். இரண்டாம் ஆலயம் கட்டப்பட்டது இவ்வரசனுக்குப் பின் வந்த பார்ஸீய அரசர் காலத்திலேயே. இக்காலத்துக்குப் பின்னரே தூதர்களைப்பற்றியும், பசாசுக்களைப்பற்றியும், உயிர்த்தெழுதலைப்பற்றியும் வேதாகமங்களில் அதிகமாய் வாசிக்கிறேமாதலால், இவ்வுபதேசங்களைப் பார்ஸீயர் மதத்திலிருந்து யூதர் பெற்றிருக்கவேண்டுமென்பது சாஸ்திரிகள் அபிப்பிராயம். நமதாண்டவரைத் தரிசிக்கவந்த கிழக்கத்து சாஸ்திரிகளும் ஸொரோஸ்தர் மதஸ்தரென்று சிலர் சொல்வதுண்டு.

பிரக்யாதிபெற்ற பார்ஸீயர்களில் சிலர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருக்கிறுர்களே யன்றி, ஏனையோர் சுவிசேஷ நற்செய்தியை அங்கீகரிக்க மனமற்றிருக்கிறுர்களென்றே சொல்லவேண்டும். இயேசுகிறிஸ்து என்னும் சோஷியாந்தர் (இரட்சகர்) அழிக்கிறதற்கல்ல, பார்ஸீயர்களையும் இரட்சிக்கவே வந்திருக்கிறுர். இதை அவர்கள் அறிந்துகொள்ளும்படி கடவுள்தாமே அவர்கள் கண்களைத் திறந்தருளுவாராக. பார்ஸீயர்களுக்குக் கிறிஸ்து பெருமான் அவசியம். கிறிஸ்து பெருமானுக்குப் பார்ஸீயர்களும் அவசியமே.

3. சமண மதம்.—ஹிந்து பிராமணர்களது குரு தந்திரங்களையும், வீண் சடங்காசாரங்களையும் எதிர்த்துத் தோன்றிய மதங்களில் சமணமதம் ஒன்று. வர்த்தமானன் அல்லது மகாவீரன் என்ற ஓர் க்ஷத்திரிய அரசனால் இச் சமயம் ஸ்தாபிக்கப்பெற்றது. அவன் புத்தன் காலத்தில் தோன்றினவன். ஆயினும் புத்தனைவிட வயதில் மூப்புற்றிருந்தவன்.

ஜைனர் என்னும் பதம் ஜைனனது தொண்டர் எனப் பொருள்படும். ஜைனன் என்பது மகாவீரனுக்கு சூட்டப்பட்ட ஓர் நாமம். அதற்கு ஜெயவீரன் என்றர்த்தம். மனோவாக்குக் காயத்தை யடக்கி வெற்றிபெற்றவன் என்பது அதின் கருத்து. காலத்தைத் தொடர்பான யுகங்களாகப் பிரித்து யுகம் ஒன்றுக்கு இருபத்து நான்கு 'தீர்த்தங்காரர்' (தடம் குறிப்பிடுவோர்) உண்டென்று ஜைனர் சொல்வர். கடைசியில் தோன்றிய பரசுநாதன் (மகா வீரனது ஆசிரியர்), வர்த்தமானன் என்ற இரண்டு தீர்த்தங்காரரை மற்றவரைப் பார்க்கிலும் அதிகமாய் ஜைனர் கொண்டாடுவர்.

ஜைனர் ஆலயம் கட்டுவதில் கீர்த்திபெற்றவர்கள்: ஜனங்கள் உபயோகத்திற்கென்றல்ல, புண்ணியத்திற்கென்று ஆலயங்களைக் கட்டுவது அவர்கள் வழக்கம். சோலைகளடர்ந்த மலைகளையும் ஏகாந்தமான அலங்காரத் தாவுகளையும் புண்ணிய க்ஷேத்திரங்களாகக் குறிப்பிட்டு, அங்கு ஆலயங்களைக் கட்டி, வெண்சலவைக்கல் அல்லது அரைசாந்தில் அவைகளை வெகு விநோதமாய்ச் சித்திரிப்பார்கள். வங்காளத்திலுள்ள பரசுநாத சிகரம், கதியவாரிலுள்ள பலிட்டான நகரம், ஆபுமலை முதலிய இடங்களில் திருஷ்டாந்த பூர்வமாய் இவ்வுண்மையைக் கண்டு கொள்ளலாம். ஜைன ஆலயங்களைச் சுற்றி உயரமும் அரணிப்புமான மதில்கள் உண்டு. ஆலயங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே அடக்கமாயிருக்கும். பூசாரிகளில் சிலர் செய்யவேண்டிய நித்தியானுஷ்டானங்களைச் செய்து ஆலயங்களிலேயே படுத்துக்கொள்வர். இடத்தைச் சுத்தம் செய்வதற்கும், கோவில் புருக்களைப் போஷிப்பதற்

கும் வேலைக்காரர் சிலர் எப்பொழுதும் அங்கேயே தங்கியிருப்பார்கள். பிரயாணியாயினும் யாத்திரிகராயினும் அத்திருச் சிகரத்தின்மீது நித்திரை செய்யவாவது தன் ஆகாரத்தைச் சமைத்து அருந்தவாவது கூடாது. தேவர்களது நகாமாதலின் குருக்களைத்தவிர வேறொருவரும் அதை உபயோகிக்கலாகாது என்பது கோட்பாடு.

ஜைனரில் 'திகம்பரர்,' 'ஸ்வதாம்பரர்' என இரு வகுப்பினர் உளர். திகம்பரர் எனின் ஆகாய உடை புனைந்தவர் எனப் பொருள்படும். இவர்களுடைய பிரதிமைகளுக்கு யாதொரு உடையும் கிடையாது. இவர்களது சந்நியாசிகளும் நிர்வாணிகளாகவே அலைவார்கள். பெண்மக்கள் முக்தியடைவது அசாத்தியமென்றும் இவர் கூறுவர். 'ஸ்வதம்பரர்' எனின் வெள்ளுடை தரித்தவர் என்றர்த்தம். பெண்மக்களும் முக்தியடையலாம் என்பது இவரது கோட்பாடு. இவர்களது சந்நியாசிகள் வெள்ளுடை போர்த்துக்கொள்வர்; பிரதிமைகளுக்கும் வெள்ளுடை தரிப்பர். சிறிது காலத்திற்கு முன், ஸ்வதம்பரர் என்னும் முக்கிய வகுப்பைச்சேர்ந்த சிலர், வேறொரு கிளையாய்ப் பிரிந்து 'துண்டியர்' எனப் பெயர் வஹித்தனர். இவர்கள் எவ்வித ஜீவவதையும் செய்யக்கூடாதென விரதம் பூண்டவர்கள், விக்கிரகங்களுக்குப் பதிலாகக் குருக்களையே வணங்குகிறவர்கள்.

சமணர் (அல்லது ஜைனர்) கொள்கைப்படி ஆத்ம ஈடேற்றமடைவதற்குரிய சாதனங்கள் மூன்று. அவையாவன:—அறிவு, பக்தி, நற்குணம் என்பவைகளாம். அறிவு என்றால், ஆவிக்கும் சடலத்திற்குமுள்ள உறவை கிரஹித்தறியும் ஞானம். அருகன் சொன்ன வார்த்தையையும் நாற்பத்தைந்து ஆகமங்களில் கூறப்பட்டவைகளையும் பூராவாக நம்பும் நம்பிக்கையே பக்தியாம். நற்குணம் என்றால் (1) உயிர்வதை செய்யாமை; (2) தயாளம், உண்மை யுரைத்தல்; (3) களவு செய்யாமை; (4) மனோவாக்குக் காயங்களில் கற்புடைமை; (5) உலக ஆசை வெறுத்தல் முதலிய சுகுணங்கள். இவற்றில்

உயிர்வதை செய்யாமை என்பதைச் சமணர் அதிகமாய் வற்புறுத்தியிருக்கின்றனர்.

மேல் இந்தியாவில் சமணர் இருக்கும் இடங்களிலெல்லாம் மிருகங்களை வைத்துப் போஷிக்கிற பிஞ்சிராப்போல் என்ற தர்மசாலை பட்டணத்திற்கு ஒன்றுண்டு. அதைக் கவனிக்குங்கால், ஜைனர் ஜீவபிராணிகளை எவ்வளவு பயபக்தியுடன் மதிக்கின்றனர் என்பது புலப்படும். கூச் மாகாணத்திலுள்ள தர்மசாலையொன்றில் ஐயாயிரம் எலிகள் இவ்வாறு பராமரிக்கப்பட்டு வந்தன. புத்த சமயிகளைப்போல் சமணரும் சதுர்வேத அதிகாரத்தை மறுப்பர். ஆயினும், புத்தரைப்போல 'நிர்வாணம்' என்னும் கொள்கையை ஏற்றுக்கொள்ளார். ஆன்மா பிறவியினின்று மீட்படைந்தபின், மகாத்மாக்கள் வாசஞ் செய்யப்பெற்ற பதவியடைந்து வைதீக வாழ்க்கையாற்ற ஆரம்பிக்கின்றனவெனக் கூறுவர்.

சமணரில் முக்கால் வாசிப்பேர் ராஜபுதனத்திலும் பம்பாய் ராஜதானியிலும் அதைச்சேர்ந்த சிற்றரசு நாடுகளிலும் வசிக்கின்றனர். பெரும்பான்மையோர் வியாபாரிகளாயும் சவுக்காராகவுமிருப்பதால் இம்மதானுசாரிகள் தனவந்தரென்றும் புத்திகூர்மையுள்ளவர்களென்றும் முன்னேறிவருகிறவர்களென்றுமே சொல்லவேண்டும். ஆகிலும் சிசு விவாகத்தைக் கண்டிப்பாய் நிறைவேற்றுகிறவர்கள், விதவைகள் புனர்விவாகத்தை அருவருக்கிறவர்கள். 1911-ம் வருஷம் ஜனசங்கை மதிப்பில் அவர்களுடைய ஜனத்தொகையில் நூற்றுக்கு ஆறு வீதம் குறைவு காணப்பட்டது. 1921-ம் வருஷத்து கணக்குப்படி மறுபடியும் நூற்றுக்கு ஆறுவீதம் இவர்கள் குறைந்திருந்தார்கள். 1931-ம் வருஷத்து கணக்கின்படி நூற்றுக்கு ஆறுவீதம் பெருகியிருக்கிறார்கள். மொத்த ஜனத்தொகை விருத்தியடைந்த அளவு, சமணர் விருத்தியடையவில்லை. சிசு விவாகமே இக்குறைவுக்குக் காரணம். ஜனத்தொகையில் 100-க்கு 22 பேர் விதவைகள். பத்து வயசுக்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள் 10,000 பேர் விவாகமானவர்களென்று 1931-ம் வருஷத்து கணக்கில் கண்டிருக்கிறது.

4. சீக்கிய மதம்.—சீக்கிய மதத்தை ஸ்தாபித்த நானக் என்பவர் லாகூர் பட்டணத்திற்கருகில் 1469-ம் வருஷத்தில் பிறந்தார். சீக்கிய சமயமெனின், ஹிந்து சமயத்துக்கும் இஸ்லாமிய மதத்துக்கும் பொதுவாயுள்ள சத்தியங்கள்மீது ஸ்தாபிக்கப்பட்ட ஓர் மதம். ஹிந்து சமயத்திலுள்ள ஜாதிபேதத்திற்கும் விக்கிராகாராதனைக்கும் விரோதமாக ஆதியில் இச்சமயம் அமைக்கப்பெற்றது. சீக்கியர் ஒரே கடவுளை வழிபடுவர். பல தேவர்களைப் பூசிப்பது தவறு என்பது அவர்கள் கோட்பாடு. விக்கிராகாராதனை, ஸ்தலயாத்திரை, சகுனம்பார்த்தல், மந்திரித்தல் முதலியவற்றைச் சீக்கியர் மதம் கண்டனஞ் செய்கின்றது. ஜாதிபேதமுண்டென்றுவது, பிராமணர் மற்றவரைவிட மேலானோர் என்றுவது, பிறப்பு இறப்புகளில் தீட்டு உண்டென்றுவது சீக்கியர் சமயத்தில் ஏற்படவில்லை.

நானக்கின் தொண்டருக்குச் சீக்கியர் என்று பேர் வந்தது. சீக்கியர் என்னும் பதத்திற்கு சிஷர் என்றர்த்தம். தம் குருக்களின்மீது பாராட்டும் பக்தியே சீக்க சமயிகளின் விசேஷ லட்சணம். 1538-ம் ஆண்டில் பாபா நானக் தேகவியோகமானர். அவரும் அவர்பின் தோன்றிய ஒன்பதுபேரும் பத்து முக்கிய குருக்களாக எண்ணப்படுகின்றனர். ராமதாஸ் என்னும் நாலாம் குரு 'அமிர்த்சர்' அல்லது 'அமிர்த தடாகம்' என்றழைக்கப்படும் பெரிய சதுர தடாகமொன்றை வாங்கி, அதன் நடுவில் ஒரு கோவிலைக் கட்டினன். இதற்குக் கனக தேவாலயம் என்று பேர். இதுவே சீக்கியருக்குப் புண்ணிய ஸ்தலம். ஐந்தாவது குருவாகிய அவன் புத்திரன் அர்ஜன், நானக்கும் மற்ற மூன்று குருக்களும் அருளிச் செய்த பாடல்களைச் சங்கிரகமாகத் திரட்டி, ஆதிகிரந்தம் என அதற்கு நாமகரணம் சூட்டி, அதை மேற்கூறிய கனக தேவாலயத்தில் வைத்தான். அக்காலமுதல் குருபாத்தியதை தலைமுறை தத்துவமாயிற்று. பின்தோன்றிய ஐந்து குருக்களும் ஆசிரியர்போல் நடவாமல், அதிகாரிகள்போல் நடந்ததால், மொகலாயச் சக்கரவர்த்தி அவர்களை அடக்க நேரிட்டது. அவுரங்கசீப் சக்கரவர்த்தி

பிறப்பித்த கட்டளேயால் ஒன்பதாவது குரு கொல்லப் பட்டதுமன்றி, மற்ற சீக்கியரும் மதத் துவேஷ காரண மாய்த் துன்புறுத்தப்பட்டனர். இச்சம்பவம் சீக்கியரது பின் சரித்திரத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. எப்படி யெனில், பத்தாவது குருவாகிய குரு கோவிந்து சீக்கிய ரெல்லாரையும் யுத்தத்தில் பழக்குவித்து, மகம்மதிய ராஞலும் சரி, ஹிந்துக்களாஞலும் சரி, எல்லாரையும் நாம் பகைப்போம் என்று பிரதிக்கினேயை பண்ணச்செய் தான். சிங்கமென்றர்த்தங்கொள்ளும் 'சிங்' பட்டத்தைத் தங்கள் பெயருடன் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், நீண்ட ஜடையாக ரோமம் வளர்க்கவேண்டுமென்றும், தலேச்சவரமாவது முகச்சவரமாவது செய்யக்கூடாதென் றும், தொப்பி ஒருபொழுதும் தரிக்கக்கூடாதென்றும், போஜன சமயத்திலுங்கூட தலேப்பாகையே தரித்துக் கொள்ளவேண்டுமென்றும், மகம்மதியருடன் ஓயா யுத்தம் புரிவதற்கு அறிகுறியாக எப்பொழுதும் வாள் கையில் வைத்திருக்கவேண்டுமென்றும், புகையிலே பரிச்சேதம் பிரயோகிக்கக்கூடாதென்றும் ஆஞ்ஞாபித்தான்.

இரண்டாம் கிரந்தம் என்னப்பட்ட நூலே குரு கோவிந்து எழுதி ஆதிகிரந்தத்துடன் சேர்த்தான். இரண்டாங் கிரந்தத்தில் யுத்தாபேக்ஷைகளுள்ள பாடல் கள் அநேகமுள. ஆதிகிரந்தத்திலோ அப்படியில்லாமல் சமாதானத்தையும் சாந்தத்தையும் குறிக்கும் பாடல் கள் மாத்திரமே உண்டு. 1764-ம் வருஷத்தில் பஞ்சாப் முழுவதையும் சீக்கியர் ஜெயித்து அங்கு சுய அரசாட்சி நடத்திவந்தனர். 1848-ம் ஆண்டில் ஆங்கிலேயர் பஞ்சா பைத் தம் ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டபொழுது சீக்கியர் சுயாதீனம் முடிவடைந்தது.

சீக்கியர் விக்கிரகங்களே ஆராதிப்பதில்லேயெனினும், அமிர்த்சர் நகர் கோவிலிலுள்ள கிரந்த ஆகமத்தை உண்மையாகவே ஓர் தெய்வமாகப் பாவித்து வருகின்ற னர். நாடோறும் விடியற்காலம் விலேயுயர்ந்த பட்டாடை யொன்றை அதற்கு உடுத்தி, மணி பதித்தமைக்கப்பெற்ற ஓர் விதானத்தின்கீழ் சிங்காசனத்தின்மீது பயபக்தி யுடன் அதை வைப்பர். இவ்விதானம் அமைக்க

ரூ. 50,000 சென்றதாகப் பிரஸ்தாபம். பகல் முப்பது நாழிகையும் இவ்வாகமத்திற்கு வெண்சாமரை வீசி, சாயங்காலமானவுடன் மற்றொரு ஆலயத்துக்கு எடுத்துக் கொண்டுபோய், அங்கு தீட்டான கைகள் அதைத் தொட்டுவிடாதபடி, அளிப்பாய்ச்சிய மண்டபமொன்றில் பொற்கட்டிலின்மீது அதைக் கிடத்துவர்.

தற்காலத்தில் சீக்கியர் அநேகர் தம் சமயக்கோட்பாட்டிற்கு மாருக 'வர்ணபேதம்' பார்க்கவும், பூணூல் தரிக்கவும், ஹிந்து விழாக்களைக் கொண்டாடவும், ஹிந்து கோவில்களிலுள்ள விக்கிரகங்களுக்குக் காணிக்கைகள் சமர்ப்பிக்கவும் தலைப்பட்டிருக்கின்றனர். ஒருவன் சீக்கியனு அல்லவா என்று கண்டுபிடிக்கவேண்டுமெனின், அவன்மீது சவரகன் கத்தி பட்டிருக்கிறதாவென்றும், அவன் புகையிலை உபயோகிக்கிருனேவென்றும் அறிந்து தீர்க்கவேண்டுமென்று 1891-ம் ஆண்டு ஜன சங்கைக் கணக்கில் கண்டிருக்கிறது. ஏனெனில், புகையிலை உபயோகிக்கவும், முகச்சவரமாவது தலைச்சவரமாவது செய்துகொள்ளவுங் கூடாதென்ற கட்டளையைத்தான் சீக்கியர் மகா திட்பநுட்பமாய் அனுஷ்டித்து வந்தார்கள். இப்பொழுதோ, தங்கள் முடியைக் கத்தரித்துக் கொள்ளும் 'மூனு சீக்கியர்' என்ற ஓர் வகுப்பாரும் எழும்பியிருக்கின்றனர். தற்காலத்தில் சீக்கியர் அநேகர் தங்களை ஹிந்துசமயிகளில் ஒரு கிளையாகப் பாவிக்கவும் குரு கோவிந்தனுல் விதிக்கப்பட்ட மத அடையாளங்களை அனுசரியாமல் தவிர்த்துவிடவும் தலைப்பட்டிருக்கின்றனர்.

சீக்கிய மதத்துக்கு உறைவிடம் பஞ்சாப் மாகாணம். பஞ்சாபிலும் அதைச் சேர்ந்த சுதேச சமஸ்தானங்களிலும் இந்தியாவிலுள்ள சீக்கியரில் 100-க்கு 96 பேர் உளர். 1931-ம் வருஷத்துக்கு முந்தின பத்து வருஷத்தில் இவர்கள் நூற்றுக்கு முப்பத்துநாலு வீதம் விருத்தியடைந்திருக்கிறுர்கள். ஹிந்து மதத்தின் வெளி ஜாதிகள் சீக்கிய மதத்தை அநுசரிப்பதும், சீக்கிய ஜமீன்தார்கள் தங்கள் கையின்கீழ் வேலைசெய்யும் வேலையாட்களைத் தம் மதத்தில் சேர்ப்பதும் இவ்விருத்திக்குக் காரணம்.

சீக்கியரில் சில பிரசித்த கிறிஸ்தவர்கள் உண்டு. ராஜா ஸர் ஹார்ணம்சிங் சீக்கிய குலத்தவரே. சாது சுந்தர்சிங் குடும்பமும் சீக்கிய குடும்பமே. இவ்வித பக்தர் இன்னமனேகர் இவர்களிலிருந்து எழும்புவார்களாக!

கடவுளுக்கும் கடவுள் வணக்கத்துக்கும் இடமில்லாத இம் மதஸ்தருக்கு இயேசுபெருமான் வெளிப்படுத்திய பிதாவைத் தெரியச்செய்வது நமது கடமை. இயேசு சுவாமியே சத்ய குரு. மானிடருக்காக மரணமடைந்தவர் அவரே, மானிடர் பக்திக்குரியவர் அவரே. சீக்கியர் அவருக்கே சீஷர்களாகவேண்டியவர்கள்.

5. பூத வணக்கம்.—இந்து தேசத்தின் பூர்வ குடிகளான அரண்யவாசிகளும், மலைவாசிகளும் அநுசரிக்கும் மதத்திற்குப் பூத வணக்கம் என்றும் குலதேவ மதம் என்றும் பேரிட்டிருக்கிறது. இவர்கள் ஆத்துமா உண்டென்றும் மறுமை உண்டென்றும் ஒப்புக்கொள்ளுவார்கள். சகல நன்மைக்கும் தீமைக்கும் ஒவ்வோர் தேவர் தேவதைகளைக் குறிப்பிடுவார்கள். இன்னும் அநேக பேய் பசாசுக்களும் உண்டென்று நம்பிப் பயந்து, அவைகளைச் சாந்திசெய்ய முயற்சிப்பார்கள். கிராமங்களிலுள்ள ஹிந்துக்களில் உயர்ந்த ஜாதியாருங்கூட பேய்க்குக்கொடுத்துப் பேயாட்டம் ஆடி, பற்பல ரோகங்களுக்குப் பற்பல அம்மன்களைக் குறிப்பிட்டு, இவைகளைத் தூரத்தும் வழக்கத்தை யாவரும் கவனித்திருக்கலாம். இவ்வித ஆசாரங்கள் இப்பூர்வ பூத வணக்கத்திலிருந்தே வந்தவைகளென்பது சாஸ்திரிகளின் பொது அபிப்பிராயம்.

பூத வணக்கத்தின் பூரண கோட்பாடுகளை மிச்சல் சாஸ்திரியார் பின்வருமாறு கூறுகிறார். இவர்கள்:

1. "எல்லாவற்றிற்கும் மேலான கடவுள் ஒருவர் உண்டென்று ஒப்புக்கொள்ளுவார்கள். எனினும்,

2. அநேக பேய் பசாசுக்கள் உண்டென்றும், இவைகளனைத்தும் குரூர சித்தமுடையவைகளென்றும் நம்புவார்கள். அவைகளைச் சாந்தி செய்யும்படி அவைகளுக்குக் கொடை கொடுப்பார்கள்.

3. இவ்வாறு சாந்தி செய்யும்படி கொடுக்கும் கொடைகளில் இரத்தம் சிந்திப் பலியிடுவது ஒரு பாகம்.

4. பேயாட்டம் முதலிய கோரணிகள் உண்டு.

5. விக்கிரகம், ஆலயம், பூசாரி என்பவற்றை மதிக்க மாட்டார்கள்.

6. மனுஷரைப் பேய் பிடித்துக்கொள்ளும் என்று நம்புவார்கள்.

7. பில்லி சூனியம், வஞ்சனை வைத்தல் இவற்றை அதிகமதிகமாய்க் கையாடுவார்கள்."

இதைக்கொண்டு நிதானித்தால், ஹிந்துக்களில் கிராமவாசிகளான மத்திய, தாழ்ந்த குலத்தோர் யாவரும் பூத வணக்க வகுப்பினரெனத் தகும். ஆகினும் இப்பேர் அரண்யவாசிகளான பூர்வ ஜனங்களுக்கே வழங்கப் பெற்றுளது.

பூத வணக்கத்தார் எந்த ஆலயத்துக்கும் போகார். பிராமணர் முதலிய பூசாரிகளைத் தேடவுமாட்டார், மதிக்கவுமாட்டார். எந்தப் பாறைக்குள்ளும், அடர்ந்த எந்த விருக்ஷத்தின் கீழும், பயங்கர அருவிகளிலும் ஆறுகளிலும் பேய் பசாசுக்கள் உண்டென்று நம்புவர். விஷபேதிக்கு ஒரு பேய், வைசூரிக்கு ஒரு பேய், மிருகஜாதி ரோகங்களுக்கு ஒரு பேய், இவ்வாறாகப் பேய்களும் பசாசுக்களும் மனுஷனைப் பிடித்து விழுங்குவதற்கு எப்போதும் வாயை ஆவென்று திறந்துகொண்டிருக்கிறதுபோல் எண்ணித் தங்கள் ஜீவ காலத்தையெல்லாம் பயத்திலேயே போக்குவர். இவைகள்மேலுள்ள அன்பினாலல்ல, இவைகள் தங்களுக்கு ஏதேனும் தீமை செய்யாமல் தடுப்பதற்காகவே பூதங்களுக்குப் பூஜைகள் நடப்பிப்பர்.

பூத வணக்கத்திலிருந்து பல கொள்கைகளும் கோட்பாடுகளும் ஹிந்துசமயத்திற்குட் பிரவேசித்திருக்கின்றனவென்று காணலாம். ஹிந்து மதத்திலுள்ள அத்வைதக் கொள்கைக்கும், புனர் ஜன்மக் கோட்பாட்டுக்கும் ஆதிமூலம் பூத வணக்கம் என்று சாஸ்திரிகள் நினைக்கிறார்கள். பூத வணக்க பழக்கவொழுக்கங்களைத் தத்துவ சாஸ்

திரத்தைக்கொண்டு அலங்கரித்ததினல் வந்த பலனே தற்கால ஹிந்து சமயமென்று சொல்லுவாருமுளர். ஹிந்து சமயம் என்ற பொதுப்பெயரின்கீழ் அடங்கியிருக்கும் விதம் விதமான அனுஷ்டானங்கள், ஆசாரங்கள், கோட்பாடுகள், சித்தாந்தங்கள் முதலிய யாவற்றிற்கும் அடியில் ஏராளமான பூத வணக்கப் பழக்கங்கள் உண்டென்பதற்குச் சந்தேகமில்லை.

மேலும் 'ஹிந்துமதம்' என்று சொல்லும்போது, வேதாந்தக்கொள்கைகளும் யோகாப்பியாசங்களும் பரப்பிரமத்தின்மீதுள்ள நாட்டமும் தேட்டமும் அடங்கிய உன்னத ஞானபோதகம் என்று முற்றிலுமாய் நினைக்கத்தகாது. தங்களை ஹிந்துக்கள் என்று பாராட்டிக்கொள்வோரில் லக்ஷாதி லக்ஷம்பேரின் கொள்கை இவையன்று. உலகமே சதம் என்றாற்போல் எண்ணி பூலோக சுக க்ஷேமத்தையே நாடுவதும், இதற்கு ஏதேனும் பங்கம் நேரிட்டுவிடாதபடி மந்திரிப்பதும் நேர்ந்துகொள்வதும் கொடுப்பதுமே ஹிந்துக்களில் மிச்சமானவர்களுடைய நாடோடிய மதம். இது பூத பக்தியேயன்றி வேறல்ல.

ஆகிலும், வரையறுத்துச் சொன்னால், ஹிந்துக்களுக்கும் பூத வணக்கக்காரருக்கும் பேதம் என்னவெனில்: பிராமணர் தலைமையை அங்கீகரித்து ஜாதிக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவர்கள் ஹிந்துக்கள், இவற்றை ஒப்புக்கொள்ளாதவர்கள் பூத பக்திக்காரர் எனத் தகும். வங்காளம், சென்னை, மத்திய மாகாணங்களிலுள்ள பீலர், கோண்டியர் ஜனங்களும், அஸ்ஸாம் நாட்டில் வசிக்கும் காரோவர், காஷியர், நாகர் ஜனங்களும், பர்மா தேசத்திலுள்ள சீனியர், கச்சினர், காரேனர் முதலியோரும், நீலகிரித் தொதுவர், மலையாளம் மலைப்பழியர், தெலுங்கு நாட்டுக் கோயிகள் முதலானோரும் பூத பக்திக்காரர். இவர்கள் தொகை 82 லக்ஷம். இவ்வகுப்பார் அநேகருக்குள் கிறிஸ்துமதம் அதிக விஸ்தாரமாய்ப் பரவியிருக்கிறது. சந்தாலியர், கரேனர் முதலிய ஜனங்களிலிருந்து ஆயிரமாயிரமானவர்கள் கிறிஸ்து சபையைச் சேர்ந்திருக்கிறார்கள்.

இந்தியாவின் ஜனத்தொகையில் சுயம்பான ஆரியர் இரண்டு கோடியென்றும், மீதி முப்பது கோடிப்பேர் ஹிந்துமதத்துடன் இத்தேசப் புராதன ஜனங்களின் பூத மதத்தைச் சேர்த்துக்கொண்டவர்களென்று சொல்லுகிறவர்களுளர். தென் இந்தியாவில் நூற்றுக்கு தொண்ணூற்றைந்துபேர் இப்படிப்பட்டவர்களென்கலாம். கிராமங்களுக்கு வெளியே குதிரை வாகனமேறி ஊரைக் காவல் காக்கும் ஐயனர், தென்னிந்திய ஆலயங்களில் பேர் வழங்கும் நெல்லையப்பர், சுப்பிரமணியர், குட்டன்தேவர், மீனட்சியம்மன்—இதற்கு அத்தாட்சி. மேலும் மாரியம்மன், கன்னியம்மை, காளி, பத்திரக்காளி, பிடாரி—முதலிய கிராமதேவதை வணக்கம் பூத பக்தியிலிருந்து தோன்றினவையே. கோழி, கடா முதலியவற்றைக் கொடை கொடுத்தல், பேயாட்டம், பேய் வணக்கம்—இவைகளும் அதற்கு அத்தாட்சியே. திருநெல்வேலி ஜில்லாவில் குறங்கணியில் வருஷாவருஷம் ஆயிரக்கணக்கான கடாக்கள் பலியிடப்படும் திருவிழா இதுதானல்லவோ? ஹிந்துமதத்தைவிட தென்னிந்தியாவின் கிராமங்களில் பலமாய் ஆளுகைசெய்யும் மதம் குலதெய்வ மதமென்ற பூத வணக்கமே.

காரியம் இவ்வாறிருக்க, தம் தம் குலதெய்வங்களைப் பூஜித்து, ஹிந்துமதக் குலபேதமற்று, பிராமண பக்தியில்லாத 82 லக்ஷம் பேர் நாளடைவில் ஹிந்துமதத்தையோ, கிறிஸ்து மதத்தையோ சேருகின்றனர் என்று ஜனசங்கைக் கணக்கினுல் நன்கு விளங்குகிறது. சில மாகாணங்களில் புராதன பூத பக்தர் தொகை எவ்வளவு குறைந்துள்ளதோ, அவ்வளவு ஹிந்து மதஸ்தர் தொகை அதிகரித்திருக்கிறது. மத்திய மாகாணங்களில் கோண்டியர் இலக்கத்தில் ஐந்து லக்ஷம் குறைந்திருக்கின்றனர்; அதே தொகை ஹிந்துக்களில் ஜாஸ்தியாயிருக்கின்றனர். இவற்றைக் கவனிக்குங்கால், இந்த ஜனங்களை அருள்நாதர் இயேசுகிறிஸ்துவின் திருப்பாதத்தண்டையில் சீக்கிரத்தில் கொண்டுவரவேண்டியது அவசியமென்பது தெளிவு. தற்சமயம் நாம் அசதியாயிருப்பின், பின்னல் இவ்வேலை அதிகக் கஷ்டமாகக் காணப்படும்.

'இந்தத் தொழுவத்திற்குரியவைக ளல்லாத வேறே ஆடுகளும் எனக்குண்டு; அவைகளேயும் நான் நடத்திக் கொண்டு வரவேண்டும்' என்று அருள்நாதர் திருவாய் மலர்ந்தருளினர் (பரி. யோவான் 10: 16). இதுவே அவரது ஓயாத பேராசை. ஈசனைப்போலத் தாசனும் இருக்கவேண்டும். இன்னும் கிறிஸ்துசபைக்குட் சேர்க்கப் படாத ஆடுகள் இந்தியாவின் காடுகளிலும், மலேகளிலும், கிராமங்களிலும் ஆயிரமாயிரமாய் அலேந்து திரிகின்றன. அவைகளேயும் கொண்டுவருகிறதற்கு ஊழியர் வேண்டும். பட்டணக்கரைச் சொகுசை வெறுத்துவிடவும், பட்டி தொட்டிகளில் தட்டாமல் தங்கவும் மனசுள்ளவர்களே இந்தச் சிதறுண்ட ஆடுகளேக் கொண்டுவரக்கூடியவர்கள். அவ்வித சுயவெறுப்பை, தேவா, எங்கள்பேரில் பொழிந் தருளும்!

6. புத்தமதம். — புத்தமதத்தை ஸ்தாபித்தவர் கௌதமமுனி. ஹிந்துமதத்தில் பிராமணர் ஏற்படுத்திய நானுவிதச் சடங்காச்சாரங்களே வெறுத்துத் தள்ளிச் சீர் திருத்தம் உண்டாக்குவதற்கு ஏற்பட்ட முயற்சிகளில் இதுவுமொன்று. சமணமத உற்பத்திக்கும் இதுவே காரணமென்று முன் கூறினேம். சமணமதம் இந்து தேசத்திலேயே நிலேத்துக்கொண்டது. புத்தமதமோ தன் ஜனன தேசத்தை விட்டுப் பூராவாய்ப் போய்விட் டது. பர்மாவிலும் அதைச் சேர்ந்த மலேநாடுகளிலும் மொத்தத் தொகையில் 100 க்கு 96½ ப் பங்கு புத்தர். இலங்கையிலும் இவர்கள் ஏராளம்; சிங்களவர் பெரும் பாலும் புத்த சமயத்தவரே.

காசிக்கு நூறு மைலுக்கு வடக்கேயுள்ள கபிலவஸ்து என்ற பூர்வ நகரில் கிறிஸ்துவுக்குமுன் சுமார் 560-ம் ஆண்டில் சித்தார்த்தன் எனப் பெயர்வஹித்த ஓர் க்ஷத் திரிய ராஜபிரபு பிறந்தான். இவனுக்கே பிற்காலத்தில் புத்தன் என்ற நாமதேயம் வந்தது. இவன் குடும்பப் பேர் கௌதமன். இவனுக்குப் பிராயம் வந்து விவாஹம் செய்யவே, ரஹூலன் என்ற ஓர் புத்திரனும் பிறந்தான். ராஜ அரமனேயில் சம்பிரமமாய்ச் சகல பவுசும் அனுப

வித்துச் சம்போகமாய் வாழ்க்கையாற்றி வந்த காலத்தில், ஓர்நாள் இரத சவாரி செய்துவருங்கால், வயோதிபம், ரோகம், மரணம் இவற்றைக் குரூர ரூபமாய்க் கண்டு, இவ்வித நிர்ப்பந்த நிலைமை தனக்கும் ஒருநாள் வருமே என்ற பயத்தினால் பீடிக்கப்பட்டுக் கலக்கமடைந்தவனாய், இல்வாழ்க்கையின்மேல் வெறுப்புற்று, தன் தந்தையின் கண்ணீர் புலம்பலைக் கவனியாது, வீடு வாசலையும் நிலங் கரைகளையும் மனைவி பிள்ளையையும் துறந்து, இருபத்தொன்பது வயதில் சந்நியாசிகோலமாய் அலைந்துதிரியப் புறப்பட்டான். முக்தியடையும் வழியைக் கண்டு பிடிக்கும்படி, அதாவது ஜன்மமீட்சி அடையும் வகையைக் கண்டுகொள்ளும்பொருட்டு, யோகாப்பியாசம் செய்யமேண்டுமென்பதே அவன் நோக்கம். சில வருஷங்களாய்த் தபசு செய்து நிஷ்டை அனுசரித்த பின்னர், இவ்விதப் பயிற்சியினால் லாபமில்லையென்று கண்டு, சுய சித்திரவதை செய்ய ஆரம்பித்தான். சிறிதுகாலம் சென்றபின், அன்னபானத்தைக் குறைத்து, கடைசியில் தினமொன்றுக்கு ஒரே ஒரு அரிசியைமாத்திரம் தின்னும் நிலைமைக்கு வந்து, சாகும் தறுவாயில் இன்னும் மெய்வழி புலப்படாதது கண்டு, இதிலும் காரியமில்லையென்று சொல்லி, இச்சித்திரவதையை நிறுத்திப் போஜனஞ் செய்ய ஆரம்பித்தான். இவனோடு சேர்ந்து தபசுசெய்ய வந்திருந்த ஐந்து சந்நியாசிகளும் இப்போது இவனை விட்டு நீங்கிக்கொண்டார்கள். அப்பால் மனதில் மிகுந்த போராட்டம் வந்ததாம். கடைசியாக ஓர் அரசுமரத்தின்கீழ் நாற்பத்தொன்பதுநாள் உட்கார்ந்து தியானிக்கவே, திடீரென்று ஒளி வந்தது; ஞானம் பிறந்துவிட்டது. இதுமுதல் இம்மகான் 'புத்தன்,' அதாவது 'புத்திமான்', 'தெளிவுற்றவன்' ஆனார்.

இந்த உன்னத இரகசியத்தை அறிந்த இம்மகான் இனிச் செய்யவேண்டியது என்ன? தான் மாத்திரம் முக்தியடைந்தது போதும் என்ற எண்ணம் முதலில் உண்டானபோதிலும், மானிடர்மீது தயைகூர்ந்து சர்வத்திராளுக்கும் இச்செய்தியைப் பிரசுரிக்கத் தீர்மானித்தார். அவருடைய உபதேசத்தின் சாராம்சம் பின்வருவதே:—

1. பிறப்பு சஞ்சலம்; வயோதிபம் சஞ்சலம்; வியாதி சஞ்சலம்; மரணம் சஞ்சலம்; லோகாசாபாசம் சஞ்சலம்.

2. பிறப்பும் மறுபிறப்பும் இடைவிடா புனர்ஜன்மமும், ஜீவன தாகத்தினுலும் இச்சையினுலும் உண்டாகிறதேயொழிய வேறல்ல.

3. இத்தாகத்தினின்று விடுதலைபெறும் வழி ஆசை நிக்ரகமே.

4. ஆசை நிக்ரகம் செய்வதற்கு அஷ்டமார்க்கமுள. அவையாவன:—

1. நல்லெண்ணம், அதாவது வீண்பக்தி மாயையைக் கடந்த யோசனை.

2. நல்லாசை, அதாவது அறிவுள்ளோர்க்கேற்ற உன்னத அபேக்ஷை.

3. நல்வாக்கு, அதாவது தயை, உண்மை நிறைந்துள்ள கபடற்ற பேச்சு.

4. நன்னடக்கை, அதாவது சமாதானமும் உண்மையும் சுத்தமுமுள்ள நடபடி.

5. நல்ஜீவனம், அதாவது உயிர்ப்பிராணி எதையும் வதைக்காத வாழ்க்கை.

6. நன்முயற்சி, அதாவது சுயபயிற்சிக்கும் தன்னடக்கத்திற்கும் வேண்டிய பிரயாசம்.

7. நன்மனம், அதாவது ஜாக்ரதையும் விழிப்புமுள்ள மனசு.

8. நல்தியானம், அதாவது ஜீவனத்தின் உன்னத இரகசியங்களைப்பற்றிய ஆழ்ந்த யோசனை.

புத்த முனிவரும் அவருடைய ஆதிச் சீஷரும் இச்சத்தியங்களை வெகு தாராளமாய்ப் போதித்தார்கள். புத்த முனிவர் தாமே பேஹார், அயோத்தியா மாகாணங்களில் அலைந்து திரிந்து இப்புது உபதேசத்தை எங்கும் பிரபல்யமாக்கினுர். பிராமணர் மதோபதேசம் இதுவரை ஜனங்கள் அறியாத சமஸ்கிருத பாஷையிலிருந்தது, இப்போதோ புத்தமதக் கொள்கைகள் சாதாரண ஜனங்கள்

பேசும் பாஷையில் முதல் முதல் தெரிவிக்கப்பட்டன. முனிவர் கி. மு. 477-ம் வருஷத்தில் காலஞ்சென்றார்.

புத்த முனிவர் மரணத்துக்குப் பின் புத்தமதம் விருத்தியடைந்தது அரசர் செல்வாக்கினாலேயே. கி. மு. 259-ம் வருஷத்தில் அசோகச் சக்கரவர்த்தி இம்மதப் பிரபல்யத்திற்காக எடுத்துக்கொண்ட பிரயாசம் மிகுதி. புத்தமதம் தன் ராஜ்யத்தில் ராஜ அதிகாரம் பெற்ற சமயமென்று விளம்பரஞ் செய்தான். புத்தமதச் சித்தாந்தங்களை உறுதிப்படுத்த ஓர் மஹா சபை கூட்டினான். இக்கோட்பாடுகளைப் பிரபலமாக்கும் கட்டளைகளைப் பிறப்பித்தான். இவற்றைத் துப்புரவாய்க் காத்துக் கொள்ள ஓராலோசனைச் சபையை ஏற்படுத்தி, அதை ராஜாங்கத்தில் ஓர் இலாக்காவாக நியமித்தான். இவ்வுபதேசங்களை எங்கும் பிரசித்தஞ்செய்வதற்காகப் போதகர்களை அனுப்பினான். புத்தமதநூல்களை அதிகாரபூர்வமாய்த் திருத்தி வெளியாக்க ஏற்பாடு செய்தான். இவ்விதமாய்ப் புத்தமதம் நிலைவரப்பட்டுப் பெலன்கொள்ளப் பேருதவிபுரிந்தவன் அசோகச் சக்கரவர்த்தி. தன் சொந்தக் குமாரனையும் குமாரத்தியையும் இலங்கைக்குப் போதகர்களாக அனுப்பினான். வலசைபோன துரானியரால் புத்தமதம் திபேத்துக்கும் சீனாவுக்கும் பரம்பினது. அங்கிருந்து கொரீயா, ஜப்பான் தேசங்களுக்குச் சென்றது. கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் பர்மாவில் பரம்பினது. ஏழாம் நூற்றாண்டில் அது சீயம் ராஜ்யத்தின் மதமாகி விட்டது. இந்தியாவிலோ இதற்குள்ளாக அது க்ஷீண தசையடைந்துவிட்டது. பன்னிரண்டாம், பதின்மூன்றாம் நூற்றாண்டுவரை கொஞ்சம் கொஞ்சம் அது இந்து தேசத்தில் ஆங்காங்கு நிலைத்திருந்ததுண்டு; அப்பால் பூராவாய் அற்றுப்போயிற்று. இப்பொழுது பர்மா, இலங்கை, திபேத்து, சீனா, ஜப்பான் தேசங்களில் புத்தமதம் வியாபித்திருக்கின்றது. இலங்கையில் சுமார் 30 லக்ஷம் புத்தமதஸ்தர் உளர்.

புத்தமார்க்கச் சித்தாந்தங்களை உற்றாராயுங்கால், அவற்றில் சில தவறுகள் உளவென விளங்கும். சர்வேஸ்வரர் ஒருவர் உண்டென்று புத்தர் நம்புகிறதில்லை.

கௌதமனுடைய கோட்பாட்டிற்குக் கடவுள் அவசியமில்லை. புத்தமதக் கோட்பாட்டின் ஆதியும் அந்தமும் மனுஷனே. மனுஷன்தானே தன் சுயசக்தியினால் முக்தி சம்பாதித்துக்கொள்ளவேண்டியதே விதி. ஆகிலும் புத்தமத ஆலயங்களில் போய்ப் பார்த்தால், புத்தனையே கடவுள் ஸ்தானத்தில் வைத்து, புத்த பிரதிமைக்கு புஷ்பாலங்காரம் செய்து, ஆராதனை நடப்பிப்பதைக் காணலாம். மானிடஜாதிக்குக் கடவுள் இல்லாமற் தீராதென்பது இதினால் தெளிவு. பர்மாவிலுள்ள ஆலயங்களில் நாம் காணும் புத்த சொரூபங்களைப்போல அத்தனை ஏராளமான சொரூபங்களை எந்த ஹிந்து ஆலயத்திலும் காண்பதரிது. ஓர் கைப்பிடிப் புஷ்பத்தைப் புத்த பிரதிமைமீது சாற்றி, தீவர்த்தி பொருத்திப் படைத்து, 108 மணிகளுள்ள ஜெபமாலையைக் கையில் வைத்து, அநித்தியம், துக்கம், சூனியம் என்று 108 தடவை சொல்லிவிட்டு, வாரத்திற் கோர்முறையும் திருவிழா தினங்களிலும் ஆலயம் தொழுவதுமே பர்மாதேசத்திலுள்ள புத்தர்களின் தேவதா பக்தி. பர்மர் பேய்பிசாசுக்குப் பயப்பட்டு, தங்கள் வீடுகளில் திருஷ்டிக்கழிப்புக் கழித்து, 'நத்' என்னும் பேய்வணக்கம் செய்து வருகிறார்கள். நத் வணக்கத்தைப் புத்தமதக் குருக்கள் கண்டனம் செய்த போதிலும், சாதாரண ஜனங்கள் வெகுவாய் அனுசரித்து வருகிறார்கள்.

புத்தசமயத்தின் நீதிநெறி உன்னதமும் சிரேஷ்டமுமானதென்பதை யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டியது. சர்வத்திராளும் சமானமென்று உபதேசிப்பதால் புத்தசமயத்தில் ஜாதிபேதத்திற் கிடமில்லை. ஸ்திரீகளுக்குப் பூரண சுயாதீனம் உண்டு. கல்வி, வித்தை, கலைக்ஞான நூல்கள் இவற்றைப் புத்தமதஸ்தர் வெகுவாய் விருத்திசெய்திருக்கின்றனர். தற்காலத்தில் ஹிந்துக்களைப்பார்க்கிலும், புத்த சமயிகளுள் வாசிக்க எழுதக்கற்றவர்கள் ஜாஸ்தி. ஆகிலும் புத்தமதம் நாஸ்தீக மதமே. ஆனதுபற்றி, பாவம், இரட்சிப்பு என்பதைப் பற்றிய அறிவு இம்மதஸ்தருக்குக் கிடையாது. மனுஷன் தன் சுய பிரயாசையினால் தனக்கு மீட்பைச் சம்

பாதித்துக்கொள்ளவேண்டுமென்பதே முக்கிய உபதேசம். புண்யம் சம்பாதிப்பதற்குப் பல வழிவகைகளைக் காண்பிப்பதினால், மனுஷன் தன் சுய நீதியின்மேல் சார்ந்து, தற்பெருமைகொள்ள ஏதுவுண்டாகிறது.

நிர்வாணதசை யடைவதே புத்தமதஸ்தர் நாடுகிற மோக்ஷ பதவி. 'நிர்வாணம்' என்றால், 'ஆசையின்மை' என்றர்த்தம். அதென்னவென்றால் தன்னறிவற்று, நன்மை தீமை ஆசையற்று, ஒன்றுமில்லாமற் போகும் பதவியே நிர்வாணமாம்! இது ஓர் உன்னத பதவியா?

புத்தமதத்தை ஹிந்துமதம் இத்தேசத்தைவிட்டுப் பூராவாய்த் துரத்திவிட்டபோதிலும், . புத்தமதத்திலிருந்து அநேக கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அது சேர்த்துக்கொண்டதென்று அறியவேண்டும். புத்த முனிவர் விஷ்ணு அவதாரங்களில் ஒன்றானார். ரத்தபலிகள் ஹிந்து மதத்தில் நின்றுபோயின. உயிர்வதை மட்டுப்பட்டது.

புத்தமதக் கோட்பாடுகளில் குறைவுகள் பல இருப்பினும், அதிலுள்ள சில சத்தியங்களைப் பிரபலமாக்குவதற்கு அம்மதஸ்தர் பட்ட பிரயாசத்தைக் கவனிக்கும்போது நாம் வியந்துகொள்ளவேண்டியதே. இந்தியாவில் பிறந்த இம்மதம் மானிட ஜாதியில் பாதிப்பங்குபேர் நம்பும் நம்பிக்கைக்கு ஆதாரமாகிவிட்டது.

நம் தேசத்தவர்கள் தங்கள் மதத்தை ஸ்தாபிப்பதற்குப் பூர்வத்தில் எத்தனை சிரத்தை எடுத்துக்கொண்டனர்! ஆசியாவின் கீழ்ப்பாகமுழுவதிலும் புத்தமதம் பரவும்படி செய்தது இந்தியர் முயற்சியல்லவா? இயேசு பெருமானின் சுவிசேஷத்தைப் பிரஸ்தாபிப்பதற்காக இந்திய கிறிஸ்தவர்கள் முயற்சிசெய்யச் சக்தியற்றவர்களா? ஐரோப்பியர் மாத்திரமல்ல, இந்தியரும் மிஷனெரி ஊழியஞ்செய்யக்கூடியவர்களென்பதற்குப் புத்தமதம் சாட்சி. மூன்றாம் நூற்றாண்டிலிருந்த இந்தியரைப் பிடித்த மத வைராக்கியம், இருபதாம் நூற்றாண்டிலிருக்கும் சுதேசக் கிறிஸ்தவர்களையும் பற்றிப்பிடிக்கும்படி கடவுள் தாமே தயை செய்வாராக!

அத்தியாயம் 4

இஸ்லாம்

வடமேற்கிலிருந்து இந்துதேசத்தின்மேல் படையெடுத்து வந்த சேனைகள் மூலமாய்க் கி. பி. 711-ம் ஆண்டில் இஸ்லாமிய மதம் இந்தியாவுக்குள் வந்தது. பட்டயத்தினாலும் சட்ட நிரூப ஆக்ஞையாலும் இம்மார்க்கம் நிலைவரம்பெற்று, பத்து நூற்றாண்டுகளாக அதிவிரைவில் வியாபித்தது. தற்காலத்தில் இந்தியாவிலுள்ள ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்குக்கு அதிகமானவர்கள் இஸ்லாமியர். உலகத்திலுள்ள இஸ்லாமியர் தொகை மொத்தம் சுமார் $23\frac{1}{2}$ கோடி. இவர்களில் சுமார் ஏழுகோடியே எழுபதுலக்ஷம் பேர் (7,70,00,000) இந்தியாவிலும் இலங்கையிலும் உண்டு. இந்தியாவிலுள்ள ஏழேமுக்கால் கோடி இஸ்லாமியரில் இரண்டேமுக்கால் கோடிப்பேர் வங்காளத்திலும், ஒரு கோடியே எண்பது லக்ஷம்பேர் பஞ்சாப்—வடமேற்கு எல்லை மாகாணங்களிலும், உத்தேசம் எழுபது லக்ஷம்பேர் ஐக்ய மாகாணங்களிலும், சுமார் ஐம்பதுலக்ஷம்பேர் பம்பாயிலும், நாற்பது லக்ஷம்பேர் தென்னிந்தியாவிலுமுளர். கடந்த பத்து வருஷத்தில் நூற்றுக்குப் பதிமூன்று வீதம் இவர்கள் பெருகியிருக்கிறார்கள்.

இந்தியாவில் வசிக்கும் இஸ்லாமியர் இரு பிரதான வகுப்பினர். ஒரு வகுப்பாருக்கு 'ஸுன்னிகள்' என்றும் மற்ற வகுப்பாருக்கு 'ஷீயர்கள்' என்றும் பேர். வட இந்தியாவிலுள்ள மகம்மதியர் பெரும்பாலும் மார்க்க வைராக்கியரான ஸுன்னி வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்துதேசம் முழுவதிலும் ஷீயர் வகுப்பினர் சுமார் எழுபத்து மூன்று லக்ஷம்பேர் மாத்திரம். மகம்மது சமயத்திற்கு இஸ்லாம் என்று பேர் வழங்குவதுண்டு. 'இஸ்லாம்' என்ற பதம் 'பக்தி,' அல்லது 'கையளித்தல்' என்று பொருள்படும். இப்பெயரையே வழங்கவேண்டுமென்பது இம்மதஸ்தர் விருப்பம்.

இஸ்லாமியர் யாவரும் தங்கள் மார்க்கம் இமான் என்னும் சித்தாந்தமும், தீன் என்னும் அனுஷ்டானமும் அமைந்துளதென்கிறார்கள். மார்க்க பக்தரான இஸ்லாமியர் விசுவாசிக்கவேண்டிய சித்தாந்தங்கள் எவையெனில், கடவுள், தூதர், ஆகமங்கள், நபிமார், நடுத்தீர்ப்பு நாள், நன்மை தீமை முன்விதித்தல் என்பவைகளே.

1. கடவுள்.—ஒரே கடவுள் உண்டென்றும், அவர் சர்வ வல்லவர் என்றும் இஸ்லாமியர் விசுவாசிக்கிறார்கள். கடவுளைத் தவிர வேறே கடவுளில்லை என்பதே அவர்களுடைய விசுவாசப்பிரமாணத்தின் மூலவாசகம். அல்லா என்பது 'கடவுள்' என்று பழைய ஏற்பாட்டு ஆகமங்களில் திருப்பியிருக்கும் 'எல்,' 'ஏலோகீம்' என்ற பதத்தின் அரபி ரூபமேயாம். கடவுள் ஏகர் என்ற ஏக கடவுள் வணக்கத்தைச் சாதிப்பதில் இஸ்லாம் புத்த இந்து மதங்களிலும் சிரேஷ்டமானது. என்றாலும், கடவுளைப் பற்றிய மெய்யறிவில் இஸ்லாம் குறைவுள்ளதென்றே சொல்லவேண்டும். 'மகம்மது மார்க்கத்தின்படி, சுயாதிபத்தியமும் கருணையற்ற சர்வ வல்லமையுமே கடவுளது லக்ஷணங்கள்; சிருஷ்டிகளின் நன்மை தீமைகளைப்பற்றிக் கடவுள் பட்சாதாபப்படுகிறவரல்ல; 'கடவுள் அன்பாகவேயிருக்கிறார்' என்னும் கிறிஸ்து மார்க்க சத்தியம் அறிவாளிகளான மகம்மதியர் பார்வையில் தேவதூஷணமாகவும், அறிவிலிகளின் புத்திக்கு எட்டாத மறைபொருளாகவும் விளங்குகின்றது' என்று மகம்மதிய நூல்களை உற்றாராய்ந்த ஜ்விமர் சாஸ்திரியார் பகர்ந்திருக்கிறார்.

2. தேவதூதர்கள்.—மூன்று வகுப்பான அசரீரி வஸ்துக்களுண்டென்பது இஸ்லாமியர் கோட்பாடு. அவைகளாவன:—தேவதூதர், ஆவிகள், சாத்தானும் அவன் கணங்களும்.

3. ஆகமங்கள்.—கடவுள் இவ்வுலகத்திற்கு 104 திவ்விய அதிகாரமுள்ள ஆகமங்களருளினரென்றும், அவற்றில் நான்கு நூல்கள் தவிர மற்றவையெல்லாம் காணமற்போயினவென்பதும் இஸ்லாமியர் கொள்கை. அந்த

நான்கு நூல்களாவன:—மோசேயின் நியாயப்பிரமாண மாகிய தௌராத், தாவீதின் சங்கீதங்களெனப் பேர் வழங் கும் ஜபூர், ஈசா நபியின் இஞ்ஜீல், மகம்மது நபி அருளின கோறான் என்பவைகளே. இவற்றில் கொரான் அநாதி யாய் எவராலும் சிருஷ்டிக்கப்படாத நூல் என்று இஸ்லா மியர் பாராட்டிக்கொள்வர். மற்ற மூன்று கிரந்தங்களையும் கொரான் புகழ்ந்து பேசினபோதிலும், அவை மூன்றி லும் தப்பறை உபதேசங்கள் நுழைந்துவிட்டனவென் றும், கடைசி நபியாகிய மகம்மது நபிக்கு அருளப்பட்ட கொரான் வந்தபோது, மற்றவற்றில் கண்ட கற்பனை யனைத்தும் தள்ளுபடியாகிவிட்டதென்றும் இஸ்லாமியர் சொல்வர்.

கொரான் ஓர் விசேஷித்த நூல் என்பதற்கையமில்லை. பரிமாணத்தில் புதிய ஏற்பாட்டைவிடச் சற்று சிறியது. அதில் 114 அத்தியாயங்கள் உண்டு. அத்தி யாயங்களில் வரும் ஒவ்வோர் விசேஷ பதங்களைக் கொண்டு, அத்தியாயங்களுக்குச் சிறப்பு நாமங்களிட்டி ருக்கிறார்கள். உதாரணமாக: பசு, தேனீ, ஸ்திரீ, எறும்பு, சிலந்திப்பூச்சி முதலிய விநோத நாமங்கள் அத்தியாயங் களுக்குண்டு. இதிற்கண்ட சரித்திரங்கள் காலக்கிரமப் படி ஒழுங்குபடுத்தப்படவில்லை. தவிரவும் இந்நூலின் நியாயதோரணை கண்டுபிடிப்பது அரிது; இதிலடங்கிய செய்யுட்களில் ஒன்றுக்கொன்று பொருத்தமற்ற பொருட் கள் துக்குடி துக்குடியாக வருவதுமன்றி, பொய்யும் மெய்யும், சரித்திரமும் கட்டுக்கதையும், பிரார்த்தனையும் சாபங்களும் ஒழுங்கின்றி கலந்துவருகின்றன. இஸ்லாமி யரோ பாஷை நடையிலும், சொல்லலங்காரத்திலும் கொரானுக்கு நிகரான நூல் கிடையாதென்றும், அதின் உற்பத்தி, பொருள், ஆக்ஞையாவும் அற்புத அதிசயமான தென்றும் சொல்லிக்கொள்வர்.

கொரானில் குறைகள் பலவுள:—(1) சரித்திரப் பிசகு கள் மிகுதி; (2) பிரமாண்ட கட்டுக்கதைகள் அனந் தம்; (3) உலக சிருஷ்டிப்பின் விவரம் தப்பு; (4) வீண் ஐதீகங்கள் ஏராளம்; (5) அடிமைத்தனம், பலதாரம் படைத்தல், இஷ்டப்படி மனையாளைத் தள்ளிவிடல்,

மார்க்க விஷயமான நிஷ்டூரம், ஸ்திரீ ஜனங்களை அந்தர்ப் புரத்தில் அடைத்து அறியாமையில் வளர்த்தல் முதலிய குரூர ஒழுங்குகளை கொரான் நிலைப்படுத்திவிட்டது.

4. நபிமார்.—'நபி' என்றால் 'தீர்க்கதரிசி' என்றர்த்தம். நபிமார் பலரை இஸ்லாமியர் ஒப்புக்கொள்ளுகின்றனர். அவர்களில் பெரும்பான்மையோர் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளே. நபிகள் எல்லோரையும் ஒன்றுபோல நேசித்து மதிக்கிறதாக இஸ்லாமியர் சொல்லிக்கொண்டபோதிலும், மகம்மது நபியையே உள்ளக் கனிவுடன் பாராட்டி, அவருடைய போதனை சாதனையையே தங்கள் நடக்கைக்குப் பிரமாணமாக வைத்து வருகிறார்கள்.

5. நடுத்தீர்வை நாள்.—இஸ்லாமியரின் விசுவாச சூத்திரத்திலும் கொரானிலும் நடுத்தீர்ப்பு நாளைப்பற்றிச் சவிஸ்தாரமாய்ச் சொல்லியிருக்கின்றது. உயிர்த்தெழுதலின் நாள் என்றும், பிரத்தியேகப்படுத்தும் நாள் என்றும், கணக்குப் பார்க்கும் நாள் என்றும் அந்நாளுக்குப் பேர். மார்க்க பக்தருக்கு இன்பங்களும் அவிசுவாசிகளுக்கு வேதனைகளும் நித்தியமாய் லபிக்குமென்பது மகம்மதியரின் நம்பிக்கை. 'இஸ்லாமியருடைய சுவர்க்கம் இரத்தினக் கம்பள மஞ்சங்களும், பளிங்கு ஜாடிகளும், திராட்சாசம் நிரம்பி வடியும் பாத்திரங்களும் நிறைந்துள்ள மனோஹர நந்தவனம் என்றும், அவ்விடத்திலிருப்போரின் கண்கள் இருளடைவதுமில்லை, புத்தி மயங்குவதுமில்லை என்றும், நித்திய கன்னிகைகளை அவர்கள் சதாகாலமும் அனுபவிப்பார்கள்' என்றும் கொரானில் வர்ணித்திருக்கின்றது.

6. முன்விதித்தல்.—இஸ்லாமியருடைய விசுவாச அறிக்கையின் கடைசி அம்சமாகிய இதுவே இஸ்லாமிய சமயத்தின் நெற்றிக்கல்போன்ற பிரதான உபதேசம். இதின் பலன் விதிவச நம்பிக்கையே. இஸ்லாமியரில் பல பிரிவினர் மனுஷன் சுயாதீன சித்தமுள்ளவனல்லவென்றும், கடவுளின் நித்திய ஆக்ஞைக்குக் கீழடங்கி நடக்க வேண்டியவனாயிருக்கின்றதால் தான் நடப்பிக்கும் பாவ

புண்ணிய கர்மங்களுக்கு அவன் உத்தரவாதியல்லவென்றும் சொல்லுகிறுர்கள். மகம்மதியரின் மார்க்கத்துக்கு இஸ்லாம் என்பது தகுந்த நாமதேயமே. விதிவசத்திற்கு ஒப்புக்கொடுத்துவிடுதல் என்பதே அதின் கருத்து. இக்கோட்பாடே இஸ்லாமியரின் நாகரீக விருத்திக்கு இடறு கட்டையாய் விளங்கி நிற்கின்றது. 'இவ்வுபதேசத்தைப் பற்றிக் கொரானில் கண்ட வியாக்கியானம் என்னமாயிருந்தாலும் சரி, இஸ்லாமிய தேசங்களிலெல்லாம் பிரதான பிரமாணம் விதிவசமே. இஸ்லாமிய சமயத்தையமைந்த ஜனங்கள் யாவரும் க்ஷீணதசை அடைவதற்குக் காரணம் இந்த உபதேசமே' என்று காலஞ்சென்ற கனோன் செல் பண்டிதர் பகர்ந்திருக்கின்றனர்.

தீன் என்னும் அனுஷ்டானங்கள் ஐந்து:—(1) கடவுளைத் தவிர வேறே கடவுள் இல்லையென்றும், மகம்மது நபியே கடவுளுடைய தீர்க்கதரிசி என்றும் சாட்சி பகர்வது; (2) ஜெபத்தில் திட்டவட்டமாயிருப்பது; (3) ஏற்பாட்டின்படி தர்மம் செய்வது; (4) ரம்ஸான் மாதத்தில் உபவாசமிருப்பது; (5) இயலுமானால் மெக்காவுக்கு ஸ்தலயாத்திரை செய்வது. தேவதீர்மானத்துக்குத் தன்னைக் கையளித்து, தேவசித்தத்துக்குக் கீழடங்கி, இப்பஞ்சானுஷ்டானங்களை நிறைவேற்றுபவனே இஸ்லாமியன் என்று மகம்மது நபி உரைத்திருக்கின்றனர். இந்த ஐந்து நியமங்களையும் அனுஷ்டிக்கிறவர்களுக்குப் புண்ணியமுண்டாம். இவைகள் மார்க்க ஆதாரங்களெனப் பெயர்பெறும். இவற்றைப் பக்திவிநயமாய் அநுசரிப்பதே உத்தம இஸ்லாமியனுக்கு அடையாளம். இவைகளில் ஒன்றில் தவறினாலும் ஆக்கினை லபித்துவிடுமாம். மகம்மது நபி மரித்து இரண்டு நூற்றாண்டுக்குப் பின்னர் இயற்றப்பட்ட பாரம்பரை நூற்றிரட்டில் இந்த அனுஷ்டானங்களை விஸ்தாரமாயும் திட்பநுட்பமாயும் கூறியிருக்கிறது.

1. அறிக்கை.—இஸ்லாமியரின் விசுவாச சூத்திரமே சகல மதஸ்தருடைய விசுவாச சூத்திரங்களினும் ரத்னச்சுருக்கமானது: 'லா—இலா ஹா—இல்லல்லா ஹு; மகம்மது—ரசூல்—அல்லா.' கடவுளைத் தவிர வேறே கடவுள்

இல்லை; மகம்மது அவருடைய தீர்க்கதரிசி என்பது அவ்வறிக்கையின் பொருள். இதுவே இஸ்லாம் சமயத்தின் சட்ட வாக்கியம். உலகத்தின் கண்ணுள்ள எத்தேசத்து இஸ்லாமியனும் எச்சமயத்திலும் இந்த ஏழு அரபிப் பதங்களையே தன் விசுவாச அறிக்கையாக உச்சரிப்பான்.

2. ஜெபம்.—கிழக்கு வெளுக்கும் நேரத்திலும், மத்தியானம் திரும்பும்போதும், சூரிய அஸ்தமனத்திற்கு இரண்டுமணி நேரமிருக்கும் வேளையிலும், அஸ்தமன சமயத்திலும், பொழுதுபோய் இரண்டுமணி நேரம் கழிந்த தருணத்திலும்—ஆகத் தினமொன்றுக்கு ஐந்துவேளை இஸ்லாமியன் ஒவ்வொருவனும் அரபிபாஷையில் ஜெபஞ் சொல்லவேண்டுமென்பது ஏற்பாடு. நோக்கி ஜெபிக்கவேண்டிய திசை, ஜெபத்திற்குத் தகுதியான அங்கநிலை, அவசியமான சரீரசுத்தம் யாவும் மகா முக்கியம். இவைகளில் தினையளவு தவறிவிட்டாலும் ஜெபத்திற்குப் பலிதமுண்டாகாதாம். பள்ளிவாசல் ஒவ்வொன்றிலேயும் பிரதிதினம் ஐந்துமுறை மூல்வி சத்தமிட்டுக் கூவி ஜெபத்துக்கு ஜனங்களை அழைப்பான். அரபி பாஷையில் அவன் வசனிக்கும் வார்த்தைகளின் பொருள் யாதெனின்: 'கடவுள் மகா பெரியவர்! கடவுள் மகா பெரியவர்! கடவுள் மகா பெரியவர்! கடவுளைத் தவிர வேறே கடவுளில்லை. மகம்மதுவே கடவுளது நபி! மகம்மதுவே கடவுளது நபி! ஜெபம் செய்ய வா! ஜெபம் செய்ய வா! நல்வாழ்வடைய வா! நல்வாழ்வடைய வா! கடவுள் மகா பெரியவர்! கடவுள் மகா பெரியவர்! கடவுளைத் தவிர வேறே கடவுளில்லை' என்பதே. கிழக்கு வெளுக்கும் சமயத்தில் அழைக்கும்போது, 'நித்திரையைவிட ஜெபம் சிரேஷ்டம்! நித்திரையைவிட ஜெபம் சிரேஷ்டம்!' என்று, 'நல் வாழ்வடைய வா' என்னும் வசனங்களுக்குப் பின் கூட்டிக்கொள்வதுண்டு. இது நல்ல காரியமென்றபோதிலும், செய்யப்படும் ஜெபம் அரபிபாஷையில் சொல்லப்படுவதால் அதை இருதயப் பிரார்த்தனையோடு சேர்க்க முடியாது. உலகத்திலுள்ள இஸ்லாமியரில் முக்கால்வாசிப் பேர் தாங்கள் அறியாத பாஷையிலேயே தினசரி ஐந்துதடவை ஜெபிக்கின்றனர். ஆகவே ஜெபம் அவர்

களுக்கு வீண் வாடிக்கையாகவும், கிளிப்பிள்ளைப் பாடமாகவுமே ஆகிவிடுகிறது.

3. உபவாசம்.—இஸ்லாமியருக்குப் பிரதான உபவாச காலம் ரம்ஸான் மாதம். இம்மாதத்தில் பிரதிதினமும் அருணோதயத்திற்கும் அஸ்தமனத்திற்கு மிடையில் ஒரு சொட்டுத் தண்ணீராவது, ஒருவாய் அன்னமாவது எவரும் தொடக்கூடாது. தவிரவும், இந்நாட்களில் அன்னபானம் மட்டுமல்ல, ஸ்நானம், சுருட்டு, மூக்குத் தூள் முதலியவற்றையும் கட்டோடே விலக்கவேண்டும். ஓர் புஷ்பத்தை முதலாய் முகர்ந்து பார்க்கக்கூடாதென்பது விதி. என்றாலும், மற்றெந்த மாதத்தைப் பார்க்கிலும் உணவுக்கென்று மகம்மதியர் இம்மாதத்திலேயே அதிகச் செலவு செய்கிறார்களென்பது வாஸ்தவம். இரா முழுவதையும் சிற்றின்பத்திலும் விருந்துகளிலும் சம்பிரம போஜனாதிகளிலுமே கழிப்பது சகஜம்.

4. தானதருமங்கள்.—'ஜக்காத்' என்னும் பதத்திற்கு 'சுத்திகரித்தல்' என்பது பொருள். ஏழைகளுக்கு வழங்கி ஆஸ்தியை அனுபவித்தால் மீதியெல்லாம் சுத்தமாகுமென்ற கொள்கைக்கு இசைய, விதிப்படி கொடுக்கும் தானதர்மங்களுக்கு 'ஜக்காத்' எனப் பேர் வந்தது. தர்மத்திற்காக வழக்கமாய்ப் பிரித்து வைக்கவேண்டிய பாகம் வருமானத்தில் நாற்பதிலொன்று. ஏழைகள், இல்லகமற்றோர், வரிதண்டுவோர், அடிமைகள், கடன்காரர், இஸ்லாம் மதப் போர்புரிவோர், பிரயாணிகள் முதலான ஏழுவகையாருக்கும் இதை ஈந்துவிடலாம். இவையாவும் தர்மமே!

5. ஸ்தல யாத்திரை.—மெக்கா ஸ்தலயாத்திரையை ஹஜ் என்றழைப்பார்கள். இது இஸ்லாம் சமயத்துக்கு ஒரு பலத்த தூண். தவிரவும் இஸ்லாமியரை ஒன்று சேர்க்கும் பலத்த கட்டும், இஸ்லாம் மார்க்கப் பிரபல்யத்திற்கு ஓர் முக்கிய சாதனமும் இதுவே. ஸ்தலயாத்திரை செய்யும் காலத்தில் உலகத்தின் நாலுபாகங்களிலிருந்தும் அறுபதினாயிரம், தொண்ணூறாயிரம் யாத்திரிகர் வருஷந்தோறும் மெக்காவுக்குப் போகிறார்கள். பிராயமான

இஸ்லாமியரில் ஸ்திதிபந்தரான புருஷர் ஸ்திரீகள் யாவரும் மெக்காவுக்கு யாத்திரை போகவேண்டுமென்பது சட்டம்.

மேற்காட்டிய அனுஷ்டானங்கள் தவிர, விருத்தசேதனம் இஸ்லாமியர் ஆசரிக்கும் ஓர் சடங்கு. இந்த அனுஷ்டானம் கொரானில் ஒரு தடவைகூடச் சொல்லப்படாவிடினும், இதுவே இஸ்லாமிற் சேரும் ஒவ்வொரு ஆணும் முதலாவதாக அனுசரிக்கவேண்டிய நியமம். சுன்னத்து செய்யத் தவறுதல் மார்க்கத்தை மறுதலிக்கிறதற்குச் சமானமாகப் பாவிக்கப்படும்.

கடவுளை உலகத்திற்கு வெளிப்படுத்தியிருக்கிறவரும், பாவங்களை நீக்கி ரட்சிக்கிறவரும், ஸ்திரீ ஜனங்களுக்கு சுயாதீனம் அளிப்பவருமாகிய இயேசுநாதர் இந்தியாவின் ஏழேமுக்கால்கோடி இஸ்லாமியருக்கும் அவசியம் தேவை. இஸ்லாமின் தூண்களென்று சொல்லப்படுகிற பஞ்சானுஷ்டானங்கள் நெரிந்த நாணல் தூண்களே. மத்தியஸ்தரும் பாவப் பரிகார பலியுமான ஒருவருக்காகத் தவனங்கொண்டிருக்கும் ஆத்துமாவை ஏக தேவ வணக்கம் மாத்திரம் திருப்திசெய்யமாட்டாது. இஸ்லாமியரின் ஜெபங்கள் வெளியாசாரக் கிரியைகளும் வெறும் வார்த்தைகளுமாவது சாத்தியம். ஜெபிக்கிறவர்களில் மனத்தூய்மை இருக்கவேண்டுமென்று அம்மார்க்கம் கற்பிக்கிறதில்லை. ஜெபத்தினுல் இருதய சுத்தமடைவதும் அசாத்தியம்.

இந்தியாவிலுள்ள இஸ்லாமியருக்காக நாம் என்ன செய்யக்கூடும்? (1) இஸ்லாமியரோடு அனுதாபத்தோடும் அறிவோடும் சம்பாஷிக்கத்தக்கதாகக் கொரானையும் இஸ்லாமைப்பற்றிச் சொல்லிய மற்ற நூல்களையும் படிப்பது நலம். (2) ஒரே தேவவணக்கமும் ஜாதி பேதமின்மையும் இஸ்லாமிய மார்க்கத்திலுள்ள சிரேஷ்ட குறிப்புகள் என்பதை உணர்ந்து, நம்பிக்கையோடு அவர்களுக்குள் சாட்சி பகரவேண்டும். (3) தேவ அன்பையும் பாவம் நீங்கும் வழியையும் பரிசுத்த வாழ்க்கையின் இரகசியத்தையும் அன்போடு அவர்களுக்குச் சொல்லவேண்டும்.

(4) இஸ்லாம் மதஸ்தரான ஏழேமுக்காற்கோடி ஜனங்களுக்காகவும், அவர்களுக்காக வேலைசெய்யும் மிஷனெரிமாருக்காகவும் விண்ணப்பம் பண்ணவேண்டும். தென் இந்தியாவில் அவர்களுக்காகச் செய்யப்படும் வேலை வெகு சொற்பம். சில ஜெனனா பாடசாலைகளும், ஆஸ்பத்திரி வேலையுமே தவிர வேறே வேலை கிடையாது. ஹிந்துஸ்தானி படித்து அவர்களுக்குள் வேலைசெய்யும் மிஷனெரி குருமார் ஒருவர் இருவரே. இவர்கள் தொகை பெருகும் படிக்கும் இஸ்லாமியருக்காக உழைக்கிறவர்கள் அதிகப் படும்படிக்கும் ஜெபிப்பது நமது கடமை.

Ur6.2
N42
109285

அத்தியாயம் 5

ஹிந்து மதம்

I

இந்துதேச மக்களில் மூன்றில் இரண்டுபங்குப்பேரின் மார்க்க சித்தாந்தங்கள், மதானுஷ்டானங்களுக்கு ஹிந்து சமயம் என்ற பேர் வழங்கிவருகிறது. மற்ற மதப் பெயர்களுக்கும் இதற்குமுள்ள வித்தியாசத்தைக் கவனித்துக்கொள்க. ஹிந்து மதம் என்பதற்கு இந்து தேச மதம் என்பதே பதப்பொருள். பஞ்சாப், வட மேற்கு மாகாணம், காஸ்மீர், பர்மா என்ற மாகாணங்கள் நீங்கலாக மற்றெல்லாவற்றிலும் ஹிந்து சமயத்தவரே ஜாஸ்தி. இவர்கள் தொகையோ ஜனசங்கைக்கு ஜனசங்கை சற்று குறைந்தே வருகிறது. 1891-ம் வருஷத்துக்கும் 1901-ம் வருஷத்துக்கும் இடையில் 100-க்கு ⅛ வீதம் குறைவு. 1911-ம் வருஷத்துக்கும் 1921-ம் வருஷத்துக்கும் இடையில் 100-க்கு ½ வீதம் குறைவு. 1931-ம் வருஷத்து ஜனசங்கையில் 100-க்கு 10 அதிகம்.

ஹிந்துமதம் ஒரே தன்மையான மார்க்கக்கொள்கையிலிருந்து பிறந்ததன்று. அது ஒரே தூரிலிருந்து தோன்றி வளர்ந்து பெருகியிருக்கும் ஆலாவிருக்ஷம் போன்றதல்ல. பெரிதும் சிறிதுமான நானுவகை மரங்கள் செடிகள் நின்று வளரும் ஓரிடத்தில், வெளியேயிருந்து சில புது மரங்களைக் கொண்டுவந்து நாட்டுங்கால், இவைகளனைத்தும் ஒன்ருய் வளரவே, ஓர் மரம் மற்றச் செடிகளைத் தன் மேல் படரவிட்டு, சிலவற்றை நசுக்கிக்கொன்று, வேறு சிலவற்றின் இலை காய்களைத் தனதாக்கிக்கொண்டு தழைத்ததானல், அப்பேர்ப்பட்ட மரத்துக்கு ஹிந்து மதத்தை ஒப்பிடலாம்.

அரபிக்கடலுக்கும் வங்காளக்குடாவுக்கும், இமாலய மலைக்கும் கன்னியாகுமரி முனைக்கும் மத்தியில் சர்வே

சுரனைக் கிட்டிச்சேர்வதற்கு மானிடர் என்னென்ன வழிகளை ஏற்படுத்திக்கொண்டார்களோ அவைகளனைத்தையும் சேர்த்தே ஹிந்துமதம் என்றழைக்கிறோம். கலைக் ஞான வித்வான்களும், முடிமன்னரும் ஆராதிக்கும் பெரிய ஆலயங்களும், சாதாரண ஜனங்கள் மூடத்தனமாய்க் கூட்டிவைத்து குங்குமப் பொட்டிட்டு மலர்தூவி நமஸ்கரிக்கும் ஒரு பிடி களிமண்ணும், ஏதோ ஒரு பூதம் நிற்பதாகப் பாவித்து வழியருகே இரண்டு கல் சேர்த்துத் தீபம் ஏற்றி அர்ச்சனை செய்யும் சமாதியும், எல்லாம் ஹிந்து சமயத்துக்குட் சேர்ந்ததே. இவற்றில் எதைக் கையாடுகிறவனும் ஹிந்து சமயத்தவனே. இதர மதங்களோடு சம்பந்தப்படும்பொழுதெல்லாம் அவ்வவற்றிலுள்ள சிற்சில அம்சங்களைத் தன் சித்தாந்தங்களோடு சேர்த்துக்கொண்டு, காலத்துக்குத் தக்கதாக மாறிக்கொள்வதே தொன்றுதொட்டு ஹிந்துமதவழக்கம்; இதுவே ஹிந்து மதத்தின் பெலன். பூர்வத்தில் இப்பாரத கண்ட வாசிகளான பூத வணக்கத்தாருடன் ஹிந்து மதஸ்தர் சம்பந்தப்பட்டபோதும், அப்பால் புத்தமதம் வந்தபொழுதும், இவைகளிலிருந்து ஹிந்து மதம் சில சித்தாந்தங்களைச் சேர்த்துக்கொண்டதென்று கவனிக்கலாம். இஸ்லாமிய மார்க்கக்கொள்கைகளுக்கும் கிறிஸ்து மத உபதேசங்களுக்கும் இசைவாய் மாற்றப்பட்ட ஹிந்து மதாசாரங்களும் வியாக்கியானங்களும் தற்காலத்திலுங்கூட பல உள.

ஹிந்துக்கள் தங்கள் ஆகமங்களை 'வெளிப்படுத்தல்' என்று பொருள்படும் 'சுருதி' என்றும், 'பாரம்பரியம்' என்று பொருள்படும் 'ஸ்மிர்தி' என்றும் இரண்டு வகுப்பாய்ப் பிரித்திருக்கின்றனர். இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்ற சதுர்வேதமே முந்தின வகுப்பைச் சேர்ந்தவை. இவை ஆயிரம் வருஷக்காலமாய் எழுதப்பட்டவை. கி. மு. 1500-ம் வருஷம் துவக்கி, கி. மு. 500-ம் வருஷம்வரை எழுதப்பட்டதாக சாஸ்திரிகள் நிதானிக்கிறார்கள். ஒவ்வொரு வேதத்திற்கும் மந்திரம், பிராமணம், உபநிஷதம் என மூன்று முக்கிய பிரிவுகளுள். இம்மூன்றும் மூன்று திட்டமான காலங்களில் ஒன்றன்பின்

ஒன்றாய் வெளியானவை. இந்நூல்களை ஆராயுங்கால் ஹிந்துசமய விருத்தியின் பற்பல பக்குவ தசைகளைக் காணலாம்.

முதலாவது: மந்திரங்கள் அல்லது சங்கீதங்கள் எழுதப்பட்ட காலம்.—மந்திரங்கள் தான் ஒவ்வொரு வேதத்திலும் அதி பூர்வ பாகம். கி. மு. 1500 வருஷத்துக்குப் பின்னும், கி. மு. 800 வருஷத்துக்கு முன்னும் இவை எழுதப்பட்டிருக்க வேண்டுமென்பது சரித்திரக்காரர் அபிப்பிராயம். இந்துஸ் நதிதீரத்தில் ஆரியர் குடியேறினபொழுது அவர்கள் பாடின பாடல்களும் உச்சரித்த ஜெபமந்திரங்களும் அவைகளில் அடங்கியிருக்கின்றன. இப்பாடற்றிரட்டுகளில் மகா முக்கியமானதும் அதி பூர்வீகமானதுமே இருக்கு வேதம். பற்பல தேவர்களின்பேரில் பாடிய பாடல்களும் ஸ்துதிகளும் இதில் உள. சாமவேதத்தில் பெரும்பாலும் இருக்கு வேத ஜெபமந்திரங்களே உண்டு. 75 பாடல்கள் மாத்திரம் புதியவை. சோமயாகம் செய்யும் சமயத்தில் எவவற்றை எப்போதெப்போது உச்சரிக்கவேண்டுமென்றும், அவவற்றை இன்னின்ன இராகத்தில் பாடவேண்டுமென்றும் இதில் ஒழுங்குபடுத்தியிருக்கிறது. யஜுர் வேதத்திலும் பெரும்பாலும் இருக்குவேதத்திலுள்ள மந்திரங்களே உண்டு. இத்துடன் வசனரூப மூலமந்திரங்களும் சில உள. பற்பல பலிகளைச் செலுத்தும் சமயத்தில் உபயோகிக்கவேண்டிய கிரமப்பிரகாரம் அவைகளை ஒழுங்குபடுத்தியிருக்கிறது. இந்த மூன்று வேதங்கள் மாத்திரம் மூலவேதங்களாக ஆரம்பத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டன. அதர்வண வேதமாகிய நான்காம் வேதம் பேய்களைக் கட்டும் மாந்திரிய வாக்கியங்கள் நிறைந்துள. வெகுகாலப் போராட்டத்திற்குப் பின்பே மற்ற மூன்று வேதங்களோடும் இது சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இந்தியாவில் குடியேறின ஆரியர்களுடைய பூர்வ மதம் அல்லது 'சதுர்வேத மதம்' எப்படிப்பட்டதென்று இப்புராதன பாடல்களைக்கொண்டு தீர்மானிக்கக்கூடும். இயற்கைச் சத்துவங்களைத் தெய்வங்களாக வழிபடும் மார்க்கமே சதுர்வேதமதம். சதுர்வேத மதாச்சாரம்

சுளுவானது. ஒவ்வொரு இல்லத்திலும் ஓர் குழியில் அக்னி எரிந்துகொண்டிருக்கும். அதில் சோமரசமும் நெய்யும் ஊற்றி, தேவர்களுக்குப் பலிகொடுப்பதே சாதாரண ஆராதனை. மிருக பலிகளும் இடைக்கிடையே சமர்ப்பிக்கப்பட்டனவென்று தோன்றுகிறது. இவ்வித அக்னி ஹோமம் வளர்க்கும்போது மந்திரங்கள் சொல்லி ஜெபிப்பது வழக்கம்.

இரண்டாவது: பிராமணங்கள் எழுதப்பட்ட காலம்.— இவை கி. மு. சுமார் 800 வருஷத்துக்குப் பின்னும், கி. மு. 500 வருஷத்துக்கு முன்னும் எழுதப்பட்டவையென்று சொல்லலாம். தேவர்களைச் சாந்திசெய்யப் புதுப் புது ஜெப மந்திரங்கள் ஓதும் காலம் நின்று போகவே, நவீன மந்திரங்கள் ஓதும் வேலை ஒழிந்த பூஜாரிகள் யாகத்திற்கு வேண்டிய சடங்காச்சாரங்களைப் பெருக்குவதில் காலம் போக்கினர்கள். இச்சடங்குகளை எற்றப்படி நிறைவேற்றத்தக்க பூஜாரிகளைப் பயிற்றுவிப்பதற்காகப் பாடசாலைகளும் இருந்தன. இவைகளில் பூஜாரி மாணவர் படித்த பாடப் புஸ்தகங்களே பிராமணங்கள். சதுர்வேத மந்திரங்களுக்கும் ஆசாரங்களுக்குமுள்ள சம்பந்தத்தையும், ஒவ்வோர் சடங்குக்குள்ள ஞானர்த்தத்தையும் இதில் வசனரூபமாக விவரித்திருக்கின்றது. நாலு வேதத்துக்கும் நாலு பிராமணம். யாகம் நிறைவேற்றும் வேளையில் பூஜாரிகள் தாம் தாம் செய்ய வேண்டியதைத் திட்டவட்டமாய் செய்யத்தக்கதாகக் குறிப்புகள் ஒவ்வொன்றிலும் உண்டு. இது தவிர தேவர் தேவதைகளின் புராதன சரித்திரமும் இலக்கிய இலக்கண விறையங்களும் மாந்திரிய மொழிகளுங்கூட அவைகளிலிருக்கின்றன. உலகத்திலுள்ள சகல கிரந்தங்களிலும் இவற்றைப்போல படிப்பதற்குச் சுவையற்றதும் கேட்பதற்கு ருசியற்றதுமான நூல்கள் எங்குமில்லை என்பது பொது அபிப்பிராயம்.

புனர்ஜன்ம உபதேசம் இக்காலத்திலேயே தலைகாட்டுகிறது. ஜாதிபேத ஏற்பாடும் இப்போதே உற்பத்தியானது. ஆரியர்கள் அலகபாத் வரையிலும் பரவிவிட்டார்களென்று தோன்றுகிறது.

மூன்ருவது காலம்: உபநிஷத காலம்.—இது பிராமண கலைஞானத்தின் பிந்தின காலத்து வளர்ச்சியைக் காட்டு கிறது. வெகு காலமாய்ப் பற்பல யாகங்களையும் நைவேத்தியங்களையும் அநுஷ்டித்து இளைத்துப்போன சிலர், பக்தியின் சாராம்ஸம் சடங்காசாரத்தில் அல்ல இருதய பக்தியிலே நிற்கிறதென்ற பெரிய சத்தியத்தைக் கண்டறிந்தார்கள். இதின் விபரமே யோகஞான விஷய மான நூல்களாகிய ஆரண்யகாசம் என்னும் கிரந்தங்களின் பொருள். காட்டில் ஏகாந்தத்திலிருந்து ஓதுவதற்கோ, கற்பதற்கோ எழுதப்பட்டவையாகையால் ஆரண்ய காசம் என்ற பேர் வந்தது. 'உபநிஷதம்' என்ருல், பக்கத் தில் உட்காருதல் என்றர்த்தம். குருவின் பக்கத்தில் உட் கார்ந்து கற்கும் இரகசியபோதனை என்ற கருத்துக் கொள்ளும். அவை பிரமாணங்களின் அந்தத்தில் சேர்க்கப் பட்டபடியால் 'வேதாந்தம்' என்றும் பேர் பெற்றன. வேதத்தின் கடைசி முடிவு என்று பிற்காலத்தில் இதை அர்த்தஞ்செய்துகொண்டனர். பரமாத்மாவின் தன்மை யைப்பற்றியும், பிறப்பு நீங்கி பரமாத்மாவோடு ஜீவாத்மா ஏகமாகி முக்தியடையும் வழியைப்பற்றியும் உபநிஷதத் தில் கூறியிருக்கிறது. உபநிஷதம் செய்யுள் அலங்காரமும் தர்க்க சம்பாஷணைகளும் அடங்கியுள. தத்துவசாஸ்திர விவாதங்கள் இவற்றில் காணப்படுகின்றன. சர்வமும் தெய்வம் என்ற உபநிடத மூலாதார சித்தாந்தம் பிற் காலத்தில் வேதாந்த சாஸ்திரமாக பெருப்பிக்கப் பட்டது.

மேலே கண்ட மூன்று நூற்கோர்வைகளே வேதம் என்றழைக்கப்படுகிறது. 'சுருதி' அதாவது கடவுளா லேயே அருளப்பட்ட கிரந்தம் என்பது இவற்றையே.

நான்காவது: சூத்திரங்கள் தோன்றின. இவை கி. மு. சுமார் 500 வருஷத்துக்குப் பின்னும், கி. பி. 200 வருஷத் துக்கு முன்னும் எழுதப்பட்டிருக்கலாம். பிராமணங்கள் சொல்விரிவும் வளவளப்பான பாஷை நடையுமுள்ளவை களா யிருந்தமையால், மனனம் செய்யக் கஷ்டமாய்க் காணப்பட்டன. ஆகவே, எளிதில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளத்தக்க சுளுவான சுலோகநடையாகப் பிராமண

விதிகளை எழுதுவது அவசியமாயிற்று. பூஜாரிச் சீடர் கற்கவேண்டிய அறிவெல்லாம் சுருக்கமான சூத்திரக் கோர்வைகளாகச் செய்யப்பட்டன. இவைகளைத் திரட்டிச் சேர்த்தபோது, சூத்திரங்கள் என்ற கிரந்தங்கள் உண்டாயின. தவிரவும், இக்காலத்தில் நூல்கள் எழுதியவர்களெல்லோரும் இவ்வித பாஷை நடையிலேயே எழுத ஆரம்பித்தார்கள். சடங்காச்சாரங்களை விளக்கிய ஷிரௌத சூத்திரம், இல்லறத்துக்குரிய கிரஹ சூத்திரம், ஜன ஒழுக்கத்தையும் நியாய சட்டங்களையும் கூறும் தர்ம சூத்திரம் என்று மூன்றுவித சூத்திரங்கள் உண்டாயின.

இந்தக் காலத்திலேயே வைஷ்ணவம், சைவம் என்ற இரு பிரிவுகளும் எழும்பின. யோகாப்பியாசங்களும், சந்நியாசி ஏற்பாடுகளும் உண்டானதும் இப்பொழுதே. மேலும் கலாசாலைகளில் தத்துவ சாஸ்திரக் கல்வியும் விருத்தியடைந்தது. செய்யுள் உபநிடதங்கள் ஐந்தும் எழுதப்பட்டன. சங்கியா யோக சாஸ்திரம் இப்போது முற்றுப் பெற்றது. சமணமதம், புத்தமதம் என்ற இருமதங்களின் உற்பத்தியும் இக்காலத்தில்தான்.

ஐந்தாவது: தர்மசாஸ்திர காலம்.—சூத்திரம் பிராமணத்திலிருந்து தோன்றினதுபோல, தர்ம சூத்திரத்திலிருந்து தர்மசாஸ்திரம் உற்பத்தியானது. அவற்றில் முக்கியமானது மனுதர்மசாஸ்திரம். ஹிந்துக்களுடைய அன்றாடக ஜீவிய பழக்க ஒழுக்கத்துக்குச் சட்டம் இந்நூலே. செய்யுள் நடையான இச்சட்டப் புஸ்தகம் கி. மு. 200 வருஷத்துக்கும், கி. பி. 500 வருஷத்துக்கும் இடையில் எழுதப்பட்டதாக சாஸ்திரிகள் எண்ணுகிறார்கள். மனுதர்ம சாஸ்திரம் கி. பி. 200 வருஷத்துக்கு முன்னமே தற்கால ரூபமமைந்துள்ளதென்று தோன்றுகிறது. இக்காலத்தில்தான் அதர்வண வேதத்தின் சுருக்க உபநிடதத்தில் முந்தியவை எழுதப்பட்டன. அவை (1) சுத்த வேதாந்தம், (2) யோகாப்பியாசம், (3) சந்நியாசி ஆசிரமம், (4) வைஷ்ணவ சிவப் பிரிவினைகள் ஆகிய நான்கு பொருட் பிரிவுள்ளவை. கடைசியில் சொன்ன பாகத்தில் சாதாரண ஜனங்கள் தெய்வங்களாக அர்ச்சனைசெய்த விஷ்ணுவையும், சிவனையும், பரமாத்மாவின் ரூபங்களென்று

பாவித்துப் பாடியிருக்கிறது. விஷ்ணுவின் பல அவதாரங்களைப் பரமாத்மாவின் அவதாரங்களாக மதித்துப் பேசியிருக்கிறது.

ராமாயணம், பாரதம் என்ற சரித்திரப் பாடல்கள் கி. மு. 500 வருஷத்துக்கும், கி. பி. 500 வருஷத்துக்கும் இடையில் உண்டாயின. சுமார் ஆயிரம் வருஷங்களாக இவை கொஞ்சங் கொஞ்சமாய் வளர்ந்து தற்காலத்திலிருக்கும் பிரபந்தங்களாயின. மகாபாரதத்தின் இடையில் சேர்த்திருக்கிற பகவத்கீதை தர்மசாஸ்திர காலத்தைச் சேர்ந்தது.

இதற்குப்பின் பதினெண் புராணங்கள் உண்டாயின. புராணங்கள் உபதேச தன்மை யுடையவை. வைஷ்ணவம் சைவம் என்ற பிரிவுகளை ஸ்திரப்படுத்தும் நோக்கத்துடன் இவை எழுதப்பெற்றன. அவைகளில் சில சிவ வணக்கத்தை அனுசரித்துப் பேசுகின்றன. பல விஷ்ணு வணக்கத்தைப் போதிக்கின்றன.

ஹிந்துமத புராதன நூல்களின் சரித்திரமும், அவைகளினின்று தோன்றின ஹிந்துமதச் சித்தாந்தச் சரித்திரமும் இதுவே. ஹிந்துமத வளர்ச்சியைக் கிரஹித்துக் கொள்வதற்கு இச்சரித்திரத் தொடர் அநுகூலமாயிருக்கும்.

II

ஹிந்து மதத்தின் உன்னத போதனை பகவத்கீதையிலடங்கியிருப்பதாக ஹிந்து பக்தர் சொல்வர். இது உண்மையென்று யாவரும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான்.

ஈராயிர வருஷக்காலமாக இந்துதேசத்தாரின் மனதையும் இருதயத்தையும் பலமாய்க் கவர்ந்துகொண்ட நூல் பகவத்கீதையே. கல்வியறிவுள்ள ஹிந்துக்கள் மத சம்பந்தமான வேறெந்த நூலைப்பார்க்கிலும் இதையே அதிகமாய் வாசித்து வருகின்றனர். ஆகையால் கிறிஸ்தவ ஊழியக்காரர் இதைக் கவலையோடு படிப்பது நல்லது.

கீதையின் உற்பத்தி வரலாறு இது:—கிறிஸ்தவ சகத்தின் ஆரம்பத்தில் அதிகக் கல்விமானும் அக்காலத்து மதசம்பந்தமான தத்துவசாஸ்திரத்தில் தேர்ந்தவனுமான கிருஷ்ணபக்தன் ஒருவன் ஸ்ரீகிருஷ்ணனுடைய

மேன்மையையும் கர்மயோகத்தின் கற்பனையையும் சம்பாஷணை முறையாக எழுதி, அதை மகாபாரதத்தின் மத்தியில் ஒரு கிளைக்கதையாகச் சேர்த்துச் சம்பந்தப் படுத்திவிட்டான். பாண்டவ கௌரவ சேனைகளுக்கு நடந்த யுத்த ஆரம்பத்தில் இருசேனையிலும் நேரிடும் சகோதர வதையைப்பற்றி அருச்சுனனுக்கு விசனம் மேலிட்டதாகவும், அச்சமயத்தில் அவனை ஆற்றி உபதேசிப்பதற்காகக் கிருஷ்ணமூர்த்தி அவனுக்குச் சாரதியாக வந்து இதைப் புகட்டினதாகவும் கதை. கிருஷ்ணனுடைய மேன்மையும், கர்மயோகக் கோட்பாடுமே இதில் காணப்படும் இரண்டு முக்கிய போதனைகள்.

உபநிஷதங்களிற் கூறப்பட்ட ரிஷிகள் நிஷ்டை நின்று எவரை நினைத்துத் தியானித்தாரோ அந்தப் பரப்பிரமம் கிருஷ்ணு என்று பகவத்கீதை பேசுகிறது. மேலும், யாகம் ஜெபமந்திரம் மூலமாய் மனுஷன் கிட்டிச் சேரக்கூடிய பரம புருஷர் இவர்தான் என்பதும் அதின் கொள்கை. இல்லறமும் தத்துவ ஞானமும் சேர்ந்த கலப்பே கர்மயோகமாம். அதாவது: வருணத்திற்கும் குலத்துக்குமுரிய சகல கடமைகளையும் சுயலாபம் கருதாமல், கடவுள்மேலுள்ள அன்பினிமித்தம் மாத்திரம் ஒருவன் நடப்பித்து, அக்கிரியைகளின் பலாபலன்களைச் சிஞ்சித்தேனும் கவனியாமல், கடமையை மாத்திரம் நிறைவேற்றுவது முக்தியடையும் மார்க்கம் என்பதே.

பகவத்கீதையை ஹிந்துமார்க்கத்தின் சாரசங்கிரகமென்கலாம். இந்து தேசத்தவரில் அதி சிரேஷ்டமானவரின் உன்னத நம்பிக்கையையும் மேலான நாட்டத்தையும் இது வெளிப்படுத்துகின்றது. கடவுள் சித்தத்தை வெளிப்படுத்தவும், மனுஷனைத் தெய்வத்தோடு ஐக்கியப் படுத்தவும் அவதார புருஷரான ரக்ஷகர் ஒருவர் தேவை என்ற உணர்வு ஹிந்துக்கள் மனதில் உற்பத்தியானதற்கு இது அத்தாட்சி.

1. அவதாரம் என்ற பதத்துக்கு இறங்குதல் என்பது பொருள். சர்வத்துக்கும் ஈஸ்வரரான கடவுள் மானிடர்க்குதவிபுரிய இறங்கிவருவதே அவதாரம். "பிறப்பாகிலும் இறப்பாகிலும் எனக்கில்லை; சர்வ சிருஷ்டிக்கும்

கர்த்தா நானே; என்னுடையதான இப்பிரபஞ்சத்தின் மீது நான் பீடம் வஹித்து, என் சுயசக்தியினாலேயே ஜன்மமாகிறேன்; தர்ம நெறி குன்றி அதர்மம் விருத்தி யடையும்போதெல்லாம் நான் என்னைச் சிருஷ்டித்துக் கொள்ளுகிறேன்; நல்லோரைக் காப்பதற்காகவும் பொல்லோரை அழிப்பதற்காகவும் ஏற்ற காலங்களில் நான் ஜனனமாகிறேன்" என்று ஸ்ரீ கிருஷ்ணன் சொல்லுவதாக நான்காம் அத்தியாயத்தில் கண்டிருக்கிறது.* ரூபமும் சாயலுமற்ற பரப்பிரம வஸ்துவைப் பூஜிப்பதற்கும் தன்னைப் பூஜிப்பதற்குமுள்ள பேதத்தை வேறொரு இடத்தில் விவரிக்கிறார்: "ரூபமற்ற ஓர் வஸ்துவின்மீது மனதைச் செலுத்தித் தியானிப்பது பிரயாசம்; சரீரத்திலிருப்பவர்கள் அசரீரிப் பொருளை நாடி, கண்ணுக்குப் புலப்படாத மார்க்கத்தில் நடப்பது அசாத்தியம். தம் கிரியைகளையெல்லாம் எனக்குச் சமர்ப்பித்து, மனதை என்மேல் நிலைநிறுத்தி, என்னையே தியானித்து, என்னையே பூஜிக்கிறவர்கள் யார் யாரோ அவர்களை நானே மரணசாகரத்தினின்று விடுவிக்கிறவனாவேன்" (12: 5, 6). அதாவது பரப்பிரமத்தின் மானிட அவதார ரூபம் கிருஷ்ணன், அசரீரியான கடவுளைத் தொழுதுகொள்வதைப் பார்க்கிலும், சரீரதாரியான ஒருவரைத் தியானித்துப் பூஜிப்பதே மானிட ஜன்மத்திலிருக்கிறவர்களுக்கு தற்போது மனசாந்தியையும், அப்பால் முக்தியையுமருளும் என்பதே இவ்வுபதேசத்தின் கருத்து. 'யாவர் என்னைப் பக்தியுடன் பூஜிக்கிறார்களோ, அவர்கள் என்னில் வாசம்பண்ணுகிறார்கள்: நானும் அவர்களில் வாசம்பண்ணுகிறேன்' (9: 29).

'மிகத் துராச்சாரமுள்ளவனானாலும் வேறொருபொருளையும் நாடாமல் என்னையே ஒருவன் பூஜிப்பானானால், அவன் நல்லவனென்று மதிக்கப்படத்தக்கவன். அவன் நன்றாக நிதானித்தவன்' (9: 30).

'அவன் சீக்கிரத்தில் தர்மாத்மாவாகி, சாஸ்வதசாந்தி அடைகிறான். பக்தன் ஒருபோதும் நசிந்துபோவதில்லை (9: 31).

---

*பகவத் கீதை சுலோகங்கள் பவர் ஐயர் மொழிபெயர்ப்பிலிருந்து எடுத்துள.

'பாவத்தில் பிறந்த—ஸ்திரீகளானாலும், வைசியரானாலும், சூத்திரரானாலும்—எவர்கள் என்னை அடுத்திருக்கிறார்களோ, அவர்கள் மூக்தி அடைவார்கள்' (9: 32).

'என்னிடத்தில் மனசு வை. என்னிடத்தில் பக்தி செலுத்து. என்னைப் பூஜை செய்; எனக்கு நமஸ்காரம் பண்ணு. என் அடைக்கலத்தில் சேர்ந்து என்னையே அடைவதற்கு இதே மார்க்கம்' (18: 65).

'சமஸ்த நேம நிஷ்டை கர்மங்களையும் விட்டு என்னையே சரணமடை. நான் உன்னைச் சகல பாவத்தினின்றும் விடுதலைசெய்வேன்' (18: 66).

ஆகிலும் சாமான்ய மனுஷன் ஒருவன்: இந்த ஸ்ரீ கிருஷ்ணன் யார்? அவர்மேல் என் மனதை நான் செலுத்துவதெப்படி? அவரது ஜீவியம் என்ன? அவர் திருஷ்டாந்தம் என்ன? நான் அவரை ஏற்றபடி தியானிக்கத் தக்கதாக அவர் எனக்காய்ச் செய்ததென்னவென்று கேட்பது நியாயம். ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றி இவ்வித சரித்திர விவரமில்லாததினாலேயே பிற்காலத்தில் தோன்றின புராணங்களில் கிருஷ்ணனைக்குறித்துத் தகாத பல கதைகளைக் கட்டிவிட்டார்கள். அவ்வித கதைகள் ஸ்ரீ கிருஷ்ணனுக்கும் தகுந்தவையல்ல, தெய்வாவதாரத்துக்கும் ஏற்றவையன்று.

திரு அவதார புருஷனான இயேசுகிறிஸ்துவைப்பற்றிச் சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருக்கும் சரிதைக்கும் இதற்கும் எவ்வளவு பேதம்! இயேசுபெருமான் நடக்கை, திருஷ்டாந்தம், போதனை, மரணம்—இவை எத்தனை பலமாய் மானிடர் மனதைக் கவர்ந்துகொள்ளச் சக்தியுள்ளது! "கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; எல்லாருக்காகவும் ஒருவர் மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்களென்றும், பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல் தங்களுக்காக மரித்து எழுந்தவர்க்கென்றே பிழைத்திருக்கும்படி அவர் எல்லாருக்காகவும் மரித்தார் என்றும் நிதானிக்கிறோம்" (2 கொரி. 5: 14, 15) என்று பரி. பவுல் சொன்னபடி, எத்தனையோ லக்ஷாதி லக்ஷம்பேர் சந்தேகமறத் திடச்

சாட்சியம் கூறுவர். உள்ளன்பையும் பக்தியையும் மானிடர் இருதயத்தில் தூண்டிவிடுவதற்குக் கிறிஸ்து சிலுவையைப் பார்க்கிலும் பலமுள்ள கருவி மற்றொன்றுண்டோ?

2. பகவத் கீதையின் மற்றொரு முக்கிய உபதேசம் கர்ம யோகம். அநேகருக்குக் கீதையின்மேல் பற்றுதையை உண்டாக்குவதற்கு இதுவும் காரணம். ஹிந்துமதத்தில் பாரம்பரியமாய் வந்த சித்தாந்தம் என்னவெனில்: மனுஷன் செய்யும் எந்தக் கிரியைக்கும் பலிதம் உண்டு; நற்கிரியை செய்தாலும் துற்கிரியை செய்தாலும் அதனதின் பலாபலனை அநுபவிப்பதற்காகத் திரும்பவும் ஜன்மித்தல் அவசியம்; பிறப்பும் மரணமும் இல்லாது சுகிக்க விரும்புவோன் எவனும் கிரியையற்றிருத்தல் வேண்டும் என்பதே. கீதையோ இதற்கு மாறாக, வேறொரு சித்தாந்தத்தை ஸ்தாபித்தது. முக்தியடைய விரும்புவோர் அனைவரும் எந்தக் கிரியையும் செய்யாது இப்பிரபஞ்ச வியவகாரங்களைத் துறந்து, வனவாசிகளாகப் போகத் தீர்மானித்த அக்காலத்தில், கீதை: "உன் கடமைப்படி நீ செய்யவேண்டிய கிரியை எதுவோ அதைச் செய்; கிரியையற்றிருப்பதைப் பார்க்கிலும் கிரியை செய்வது உத்தமம்; கிரியையற்றிருப்பதனால் உன் சரீரமுங்கூட பிழைக்க முடியாது; கிரியாபந்தத்தினால் இப்பூலோகமுங்கூட கட்டுண்டிருக்கிறது; தியாகக் கிரியை ஒன்றே இப்பந்தத்தினின்று நீங்கினது. நீயும் தியாகக் கிரியை செய்; பற்றற்று உன் வேலையை நிறைவேற்று" என்று போதித்தது.

"மனுஷன் கர்மங்களைச் செய்யாமலிருப்பதினால் நிஷ்கர்மியாகிறதில்லை; கர்மம் துறப்பதினால் பூரணமடைகிறதுமில்லை. உனக்கு ஏற்பட்ட கர்மத்தை எப்பொழுதும் செய்; கர்மம் செய்யாதிருப்பதைப் பார்க்கிலும் கர்மஞ்செய்வதே உத்தமம்...பற்றற்றவனாய் நீ செய்யவேண்டிய கர்மத்தைச் செய், பற்றற்றவனாய்த் தன் கடமையைச் செய்கிறவன் மேலான பதவியடைகிறான்" (கீதை 3: 4, 8, 19).

இவ்வாசகங்களைப் படிக்கும் சிஷன்: பற்றற்று நான் செய்யவேண்டிய கிரியை என்ன? அக்கிரியையைப் பற்றற்றுச் செய்வதெங்ஙனம் என்று கேட்பின், கீதை: "நீ எந்த வர்ணத்தில் பிறந்தாயோ அந்த வர்ணக் கிரியையே நீ செய்யவேண்டிய கிரியை. வேறொரு வர்ணத்துக்குரிய கிரியையை அதிகத் திறமையுடன் நீ செய்யக்கூடுமென்று நினைத்தாலும் அக்கிரியையை நீ செய்வது தகாது; செய்தால் அது பாவம்; அவ்வாறு செய்வது இப்பிரபஞ்ச சமுதாய நெறியைச் சீர்குலைத்துவிடும்" என்று விடை பகருகிறது.

இவ்வுபதேசத்தை ஒப்புக்கொள்வோமாகில், அவர்ண ஜாதிகளுக்கு மீட்புமில்லை; உலகத்துக்குச் சமாதானமுமில்லை. பஞ்சம ஜாதிகளில் பிறந்தவர்கள் கல்வி கற்கவுங் கூடாது, கல்வி கற்பிக்கவுங்கூடாது; வர்த்தகத்திலாவது கைத்தொழிலிலாவது பிரவேசிக்கவுங்கூடாது. அர்ஜுனனைப்போல க்ஷத்திரியர் யுத்தஞ்செய்து, ஏனையோரை உயிர் வதை செய்வதே அவர்கள் கிரியையாகுமன்றோ? இது நியாயமென்று அங்கீகரிக்கலாகுமா?

மேலும் இன்னுமோர் கேள்வியைப் பக்தன் ஒருவன் கேட்கலாம்: ஓர் கிரியை நற்கிரியையோ, துர்க்கிரியையோ என்று நான் அறிவதெங்ஙனம் எனலாம். கள்ள ஜாதியில் பிறந்தவன் தன் சுய இஷ்டத்தினால் அவ்வர்ணத்தில் ஜன்மிக்காததால், என் மனச்சாட்சிக்குவிரோதமாய் நான் திருடேன், கன்னமிடேன், ஜீவஹிம்சை செய்யேன் என்று சொல்லக்கூடாதா? இதைப்பற்றி எழுதும் ஹிந்து ஒருவர்: அர்ஜுனன் அதிர்ஷ்டம் நல்லதிர்ஷ்டமே; திரு அவதாரக்கடவுள் அவன் பக்கம் நின்று, அவன் கோழைத் தனத்தைக் கண்டித்து: உன் ஜாதிக் கர்மம் யுத்தஞ் செய்வதாகையால், எழுந்து உன் சிற்றப்பர்களையும் பெரியப்பர்களையும் அண்ணன் தம்பிகளையும் பாட்டனார்களையும் நாசனஞ்செய் என்று திருளம்பற்றி உபதேசித்துவிட்டார். அந்த நல்லதிர்ஷ்டம் எல்லாருக்கும் கிடைக்கவில்லையே. நாம் ஒவ்வொருவரும் நமது வெளிச்சத்துக்குத்தக்கதாக, இது சரியா தப்பிதமா, நீதியா, அநீதியா,

சுயப்பிரீதியினுல் செய்வதா சுயவெறுப்பினுல் செய்வதா வென்று விசாரித்து, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என் கடமை என்னவென்று தீர்மானிக்கவேண்டுமே; இதெப் படியாகும்?" என்று கேட்கிறுர்.

இவை நியாயமான கேள்விகள். செய்யும்படி கைக்கு நேரிடும் ஏதாமொரு கிரியைப்பற்றி இது சரியோ தப் பிதமோவென்று ஒருவன் எப்படி அறியக்கூடும்? ஒரு வன் தன் நடக்கையை ஒழுங்குபடுத்துவதற்குமுன், பார்த்துப் பின்பற்றத்தக்க அசல் நடக்கை ஒன்றுண்டா? அவதாரமெடுத்த கடவுள் தாமே பலவீன பாவிகள் பக்கத்தில் எக்காலும் நின்று, தினம் தினம் அவரவருக்கு வழிகாட்டி, நிமிஷந்தோறும் ஒவ்வொருவரையும் நடத்தி, தான் நீதியென்றறிந்த மார்க்கத்தைப் பின்பற்றுவதற்கு அவரவருக்குச் சக்தியளிக்கக்கூடுமா?

கிறிஸ்துமதம் இவ்வினுக்களுக்கு விடையளிக்கிறது. திரு அவதார மூர்த்தியாகிய ஸ்ரீ இயேசுபகவானின் வாழ்க்கையிலும் உபதேசத்திலும் மானிடர்க்கு வேண்டிய தவருத உத்தம சட்டம்—அசல் நடக்கை—உண்டு. கிறிஸ் துவின் ஆவியானவரில் சகல சத்தியத்துக்குள்ளும் வழி நடத்தும் வழிகாட்டியுமுண்டு. கீதை எழுப்புகிற சகல சந்தேக ஆக்ஷேபனைகளுக்கும் சமாதானத்தை ஸ்ரீ இயேசு பெருமானின் சுவிசேஷத்திற் காணலாம். பகவத் கீதையை நன்கு மதிக்கும் ஹிந்து பக்தருக்கு அன்புடன் இதைக் கூறுவது கிறிஸ்து தாசர் கடமை.

ஹிந்துசமய சரித்திரத்தைச் சுருக்கமாய்க் கவனித் தோம். மூவாயிரம் நாலாயிரம் வருஷக்காலமாய் இந்து தேசத்தார் ஆய்ந்தெழுதினதாக நாம் பார்த்த கிரந்தங் களிலிருந்தே தற்காலத்திலுள்ள ஹிந்துக்களின் மார்க்க சித்தாந்தங்களும் மதானுஷ்டானங்களும் பிறந்திருக் கின்றன.

III

தற்காலத்து ஹிந்துக்களை மூன்று வகுப்பாய் பிரிக்க லாம். முதல் வகுப்பார் ஹிந்துமதப் பக்தியுள்ளோர். இவர்களுக்குத் திருமறை பகவத்கீதையே. சமஸ்கிரு

தத்திலாவது, சுயபாஷையிலாவது, ஆங்கிலத்திலாவது தினந்தினம் கீதையைப் படிப்போர் உளர். கீதைத் தியானம் அவர்களுக்கு மனசாந்தியை யளிப்பதாக இவர்கள் சொல்லுவர். கீதை மனசாந்தியைக் கொடுக்குமாகில் ஸ்ரீ இயேசுபகவான் திருமொழி எவ்வளவு ஆனந்தத்தையும் ஆறுதலையும் கொடுக்கவேண்டியது!

இரண்டாவது வகுப்பினர் நவீன ஹிந்துமதஸ்தர் எனப்படுவோர். மேற்கத்திய சாஸ்திர நூல்களையும் சரித்திர பிரபந்தங்களையும் கற்றவர்கள் பலர் புராதன மத விதிகளையும் பாரம்பரிய பழக்க வொழுக்கங்களையும் பின்பற்ற மனம் ஒவ்வாமல், நடக்கையிலும் ஒழுக்கத்திலும் சுயாதீனராகியிருக்கின்றனர். தங்கள் புத்திக்கு நியாயமாய்த் தோன்றும் விதிகளைமட்டும் இவர்கள் கைக்கொள்வர். பூர்வ ஹிந்து நூல்களை இவர்கள் படிப்பின், தற்கால சாஸ்திரங்களுக்கும் நாகரீகமான மதக்கொள்கைகளுக்குமேற்க அவற்றை வியாக்கியானம் செய்வர். இவர்கள் தேவாலயங்களில் தொழுவது அரிது; ஸ்தல யாத்திரை செய்யார்; தீர்த்தங்களைத் தரிசியார்; இவை மெய்ப்பக்தருக்குத் தகாதென்பர். ஹிந்துமத சித்தாந்தங்களை நவீனமுறையாய் அர்த்தஞ்செய்யும் நூல்களை இவர் படிப்பர். ஹிந்துமதத்தில் சகல மத சத்தியங்களும் மறைந்திருக்கிறதென்று இவர் சாதிப்பர்.

இதற்கு மூலம் தேசாபிமானம் என்பதற்கையமில்லை. தங்கள் சாஸ்திர அறிவுக்கு ஒத்துவராததைத் தள்ளும் உத்தமமும் இவர்களில் உண்டு. இத்தேசாபிமானமும் உத்தமமும் சன்மானத்துக்குரியவைதான். எனினும், இது சம்பூரண உத்தமமன்று. புராதன நூல்களுக்கு நவீன அர்த்தஞ் செய்வது உத்தமமன்று. இந்நவீன அர்த்தங்களை எங்கிருந்து கற்றுக்கொண்டார்களோ அதை அறிக்கை செய்யாதிருப்பதும் நேர்மையன்று. என் தேசத்துக்குரியவை யாவும் மெய் என்று சாதிப்பதும் உத்தமமன்று. நம் தேசத்து வேத சித்தாந்தங்களாகிலும், சமுதாய விதிகளாகிலும், மதானுஷ்டானங்களாகிலும்—குறைவுள்ளவைகளாய்க் காணப்படுமாகில்

அவற்றை ஒழித்துக் களைந்துவிட்டு, சத்தியத்தைப் பின் செல்லுவதே உத்தமம். "நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்." இந்து தேசத்துக்குரிய நற்காரியங்களில் எவற்றையாவது அழிக்கிறதற்குக் கிறிஸ்துபெருமான் வரவில்லை. குறைவை நிறைவாக்கவே வந்தார்.

மூன்றாவது வகுப்பார் கற்றோரான ஹிந்துக்களில் எழும்பியிருக்கின்றனர். இவர்களுக்கு மதபக்தியென்பது கிடையாது. இக்கொள்கை இந்து தேசத்திற்கு நவீனமே. இந்து தேசத்தவர்க்குக் கடவுள் பக்தி தாய்ப்பாலுடன் ஊட்டப்படுகிறதென்கலாம். எனினும், தற்காலத்தில் பலருக்குத் தேசபக்தியே கடவுள் பக்திபோலாகிவிட்டது. இந்துதேச மதங்கள் இத்தேசத்தைச் சீர்குலைத்து விட்டதால், மதமே அவசியமில்லை யென்போர் பலர். இவர்கள்: கோவில் வேண்டாம், குளம் வேண்டாம், கடவுள் வேண்டாம், குருக்கள் வேண்டாம் என்கிறார்கள். பாடசாலை மாணாக்கர் பலர் பூணூலை எடுத்து விடுகிறார்களாம்; சந்தியாவந்தனம் சொல்லுகிறதில்லையாம். ஸ்திரீகளே மதமாளிகையைத் தாங்கும் தூண்கள். இதற்கு மாறாக கற்ற ஸ்திரீகளே ஹிந்துமத அநுஷ்டானங்களை விட்டுவிட்டதால், தங்கள் பிள்ளைகளை மதபக்தியில் வளர்க்கிறதில்லை என்கிறார்கள். எனினும், இது வெகுகாலம் நிலைநிற்காது. கடவுளில்லாது மானிடர் காலம் தள்ள முடியாது. தேச ஸ்திதியைக் கவனித்து, தேச நன்மைக்கு இடையூறாயிருக்கும் யாவற்றையும் தள்ளும் நம் சுயதேச நண்பர்—கடவுளில்லாமல் எத்தேசமும் மேன்மை யடையாதென்று சீக்கிரத்தில் கண்டறிந்து கடவுளண்டை திரும்பும்படி பிரார்த்திப்போமாக.

IV

பூர்வ காலத்தில் சமணமதம் புத்தமதம் என்ற பிரிவார் ஹிந்து மதத்தைச் சீர்திருத்துவதற்கு முயன்றது போல, தற்காலத்திலும் பல சீர்திருத்த சமாஜங்கள் எழும்பி ஹிந்துமதத்திற்கு உயிர்கொடுத்து நிற்கின்றன.

இவற்றில் சிலவற்றைச் சுருக்கமாய் இங்கு குறிப்பிடுவோம்.

1. பிரமோ சமாஜ்.—இது 1830-ம் வருஷத்தில் ராஜா ராம் மோஹன் ராய் என்பவரால் வங்காளத்தில் ஸ்தாபனமாயிற்று. 1931-ம் வருஷத்துக் கணக்கின்படி தற்காலத்தில் 5,378 பிரமோ சமாஜ் அங்கங்கள் உண்டு. தெய்வம் ஒருவர், அவர் சகல சுசீல சம்பன்னர். அவர் ஜெபத்தைக் கேட்கிறவர், ஜெபத்துக்கு உத்தரவு அருளுகிறவர். அவரை ஆவிக்குரிய முறையாய்மட்டும் பூஜை செய்யக்கூடும். மனுஷர் யாவரும் சகோதரர். கடவுள் அவதாரமெடுக்கிறவரல்ல. மனந்திரும்புதலே இரட்சிப்படைய வழி. எந்த கிரந்தமும் சர்வாதிகாரமுள்ளதல்ல—என்பவைகளே பிரமோ சமாஜத்தாரின் ஆதி சித்தாந்தங்கள்.

பிரமோ சமாஜத்தவர் பகிரங்க சீர்திருத்தக்காரர். இவர்கள் போதனைகளும் நூல்களும் கல்வி கற்ற ஹிந்துக்கள் பலர் மனதில் கிரியைசெய்திருக்கின்றன. ஆகிலும் 1911-ம் வருஷத்துக்கும், 1931-ம் வருஷத்துக்குமிடையில் இவர்கள் இலக்கம் 126 குறைவு.

2. ஆரிய சமாஜம்.—இது கத்தியவாரிலுள்ள ஸ்வாமி தயானந்த சரஸ்வதியினால் 1875-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. 1931-ம் வருஷத்தின் ஜனசங்கைக் காலத்தில் 9,90,233 பேர் ஆரிய சமாஜ் அங்கங்கள். கடந்த இருபது வருஷத்தில் இவர்கள் தொகை நாலுமடங்கு பெருகியிருக்கிறது.

ஆரிய சமாஜத்தின் முக்கிய சித்தாந்தங்கள் இவை:—

(1) சதுர்வேதங்களிலுள்ள சங்கீதங்களே தெய்வ அதிகாரம் பொருந்தியவை;

(2) நித்திய வஸ்துக்கள் மூன்று: கடவுள், ஆத்மம், ஜடப்பொருள்;

(3) கடவுள் வேறே, ஆத்மம் வேறே;

(4) ஆத்மம் ஜன்மத்துக்குக் கீழ்ப்பட்டது: அது நரஜன்மம், மிருக ஜன்மம், தாவர ஜன்மம் தரித்தல்கூடும்.

(5) முக்தி என்றால் விடுதலை: மரணம்—ஜனனம் என்ற கட்டிலிலிருந்தும் அவற்றில் நிகழும் வேதனையிலிருந்தும் விடுதலையடைந்து, கடவுளது சச்சிதானந்த சாகரத்தில் ஒன்றாகி முழுகிப்போவதே முக்தி.

ஆரிய சமாஜர் ஜாதிபேதம், விக்கிரபூஜை, சிசு விவாகம், ஸ்தல யாத்திரை முதலியவற்றைக் கண்டனஞ் செய்வர்.

தற்போதுள்ள சுமார் பத்து லக்ஷம் ஆரிய சமாஜர்களில் எட்டு லக்ஷம் பேர் பஞ்சாபிலும் ஐக்கிய மாகாணங்களிலும் உளர்.

1892-ம் வருஷத்தில் ஆரிய சமாஜம் இரு பிரிவானது. ஒரு பிரிவாருக்குக் கலாசாலைப் பிரிவார் என்றும், மற்றவர்களுக்கு மஹாத்மா பிரிவார் என்றும் பேர். முதற் பிரிவார் தற்காலக் கல்வியறிவு, போஜன சுயாதீனம்—இவற்றை அநுசரிக்கிறவர்கள். மற்றவர்கள் புராதனக் கல்வி, மரக்கறி முதலியவற்றை மாத்திரம் அநுசரிப்போர். முதற் பிரிவாரால் பல பிரசித்திபெற்ற கலாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. மஹாத்மா பிரிவார் ஹிந்தி பாஷையில் மட்டும் கல்வி கற்பித்து, ஹிந்து மதத்தையே பிரஸ்தாபித்து, ஆங்கில நாகரீகத்தைத் தள்ளுகிறவர்கள். ஹரித்வார் என்றவிடத்தில் இவர்கள் ஸ்தாபித்திருக்கும் குருக்களா மஹா வித்தியாலயம் பேர் பெற்றது.

3. தியாசபி.—ஆவிகளுக்கும் மனுஷருக்கும் சம்பந்தமுண்டென்று பிரஸ்தாபிக்கும் வகுப்பாரைச் சேர்ந்த பிளவத்ஸ்கி அம்மாளால் 1875-ம் வருஷத்தில் அமெரிக்காவில் தியாசபி சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அங்கு நேர்ந்த சங்கடங்களால் சங்கத்தின் தலைவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, இந்தியாவுக்கு வந்து, முதலில் பம்பாயில் 1879-ம் வருஷத்திலும், அப்பால் 1882-ம் வருஷத்தில் அடையாற்றிலும் தங்கள் சங்கத்தை ஸ்தாபித்தனர். இதில் பிரபலமானவர்கள் எவரெனின், பிளவத்ஸ்கி மாது, ஆல்கட் துரை, பெசந்து மாது, லெட்பீட்டர் துரை என்பவர்களே. சகல மதங்களிலும் சத்யமுண்டென்றும், சகல மதத்தையும் தாண்டினதாய்

சகல ஆத்மீய சத்தியங்களையும் தியாசபி அடக்கியுள்ள தென்றும் இச்சங்கத்தவர் போதிக்கின்றனர்.

இந்துக்களது மதபக்தியைக் காப்பாற்றும்படி காலா காலத்தில் வெளிப்பட்டு, ஒவ்வோர் சத்தியத்தை வற் புறுத்தும் சமாஜங்களும் சீர்திருத்த சபைகளும் இன் னும் பலவுள. இவற்றில் சிலவற்றின் பேரைமட்டும் குறிப்பிட்டால் போதும்.

4. மாதவ சபை.—ஸ்ரீ மாதவ சுவாமிகள் பதின்மூன் ரும் நூற்ருண்டில் மேல் இந்தியாவில் கிருஷ்ண பக்தியை வளர்ப்பதற்காகச் சீஷர்களைச் சேர்த்தனர். இவ்வடியார் 1877-ம் வருஷத்தில் ஓர் சபைகூடி மாதவ நூல்களைப் படிப்பதற்காகவும், மாதவ ஆலயங்களைப் பாதுகாப் பதற்காகவும் இச்சங்கத்தை ஏற்படுத்தினர்.

5. சைத்தன்ய சபை.—பதினைரும் நூற்ருண்டில் பங் காள மாகாணத்தைச் சேர்ந்த நடியா ஜில்லாவில் இது பிறந்தது. கிருஷ்ணனைத் துதித்து சங்கீர்த்தனம், நகர கீர்த்தனம் செய்து, கேட்போரிலும் கீர்த்தனம் செய் வோரிலும் பக்தியை எழுப்பிவிடுவது இவர்கள் கொள்கை.

6. சைவ சித்தாந்த சபை.—தமிழ் நாட்டில் கடந்த முப்பது வருஷங்களாய் இதின் பேர் அதிகமாய் வெளி யேறியிருக்கின்றது. 1896-ம் வருஷத்தில் பாளையங் கோட்டையில் முதல் மஹாசபை கூடினது. சைவ சித் தாந்த நூல்களை அச்சிட்டு வெளியேற்றுவதும், சைவ சித்தாந்தக் கொள்கைகளைப்பற்றி உபந்நியாசங்கள் செய் வதும் இவர்கள் வேலை.

கடைசியாக,

7. ராம கிருஷ்ண பரம ஹம்ஸா: (1834–1862). இவர் விவேகானந்த சுவாமியின் குரு. வங்காளத்தில் பிறந்து வளர்ந்து ஞானேபதேசமடைந்து குருபதேசம் செய் தவர். கடவுள்மீது நாட்டமும் வாஞ்சையும் வளரும்படி காரணராயிருந்தவர். சமஸ்கிரதமாவது இங்கிலீஷாவது தெரியாவிட்டாலும் பல மதங்களையும் ஆராய்ச்சி செய்து தெய்வஞானம் போதித்தார். இயேசுநாதரை இவர்

தரிசனத்தில் கண்டதாகவும், மூன்று நாளாக அவர் பேச்சுத் தவிர வேறே பேச்சற்றிருந்ததாகவும் சரித்திரமுண்டு. இயேசுபெருமானின் அன்பை அவருள்ளத்தில் ஊற்ற மனுஷர் இல்லாதே போயினரோ? அவர் சொன்ன ஞான வாக்கியங்களில் சிலதை இங்கு எழுதுவோம்.

'மகனே, பூலோக முழுவதும் பித்தங்கொண்டலைகிறது. சிலர் ஆஸ்திக்காகவும், சிலர் சிற்றின்பத்துக்காகவும், சிலர் கீர்த்தி பிரஸ்தாபத்திற்காகவும், சிலர் கல்விக்காகவும், சிலர் பேருக்காகவும் பித்தங்கொண்டலைகிறார்கள். கடவுளைத் தேடி பித்தங்கொள்ளுகிறவன் பாக்கியவான். இப்பேர்ப்பட்டவர்கள் சிலர்தான்.'

'பிள்ளாய், ஓரறையில் பை நிறைய பசும்பொன் இருக்க, அடுத்த அறையில் திருடன் ஒருவன் இருப்பின், அத்திருடன் தூங்குவானோ? அந்த அறைக்குள் எவ்வாறு செல்லலாம், எவ்வாறு அந்தப் பொன்னைக் கைப்பற்றலாம் என்பதே அவன் ஓயாத நினைவாயிருக்குமன்றோ? மெய்ப்பொருளான தெய்வம் ஒருவர் உண்டென்றும், அவரே சதா நித்திய பாக்கியத்துக்கு ஊற்றும் உறைவிடமுமானவரென்றும் அறிந்த ஒருவன் அவரைக் கண்டடையுமுன் அமர்ந்திருப்பானோ? அவன் பிரயாசத்தை க்ஷணப்பொழுதாகிலும் தளரவிடுவானோ? இப்பேராசையினால் பித்தங்கொண்டவனாகானோ?'

'தாயே, நான் பெரியவன், நான் பிராமணன், அவன் பறையன் என்று எண்ணும் சகல கர்வத்தையும் என்னில் சங்காரஞ்செய்யமாட்டீரா? அவர்கள் யார்? பல பல ரூபமாயுள்ள உம் திருச்சாயல்தானே.'

இவ்வாறு நினைக்கவும் உபதேசிக்கவும் கூடியவர்களை இந்து தேசம் எழுப்பியிருக்கிறது. கடவுள்பேரில் எவ்வளவு பேராவல்! கடவுளைக் கண்டடைவதற்காக எவ்வளவு சுயத்தியாகம்! கடவுளை அறியும்படி எவ்வளவு முயற்சி! எவ்வளவு தியானம்! எவ்வளவு ஆராய்ச்சி! இந்த நம்தேசம் இயேசுசுவாமியின் ராஜ்யமாகவேண்டாமா?

மொத்தமாகச் சொல்லின், ஹிந்து மதத்தில் பல நற்குறிப்புகளிருப்பதாக அறியலாம்:—

1. கடவுள், ஆத்மா, முக்தி என்றவைகளே சிரேஷ்டம் என்னும் எண்ணத்தை இந்து தேசத்தவர்கள் மனதில் இந்து சமயம் உண்டாக்கியிருக்கிறது. வேறெந்தத் தேசத்திலுமில்லாத வண்ணம் ஹிந்துக்கள் தேவதா பக்தியுள்ளவர்கள்.

2. சாத்வீகம், அகங்கார நிக்ரகம், பொறுமை முதலிய சுபாவங்களை விசேஷமாய்ப் பாராட்டப் படிப்பித்திருக்கிறது.

3. தினசரி ஜீவியத்தில் மதபக்தியைச் சேர்த்திசைத்திருக்கிறது. ஹிந்து மதஸ்தருடைய தந்த சுத்தியும், ஸ்நானமும், போஜனமும், பானமும், பிறப்பும் இறப்பும், கல்வியும் கல்யாணமும் மதச்சட்டப்படியே நடக்க வேண்டுமென்பது விதி.

இத்தேசத்து மக்கள் இரட்சாபெருமான் இயேசுநாதரை ஏற்றுக்கொண்டு, அவர் மூலமாய்க் கடவுளிடம் சேரும் மார்க்கத்தை அறிந்துகொள்வார்களாகில், இந்த நற்குறிப்புகள் அவரால் புது உயிரடைந்து ஜொலித்து விளங்குமென்பதற் கையமில்லை.

ஹிந்து மார்க்கத்தில் காணும் தப்பறைகளையும் சுருக்கமாய்ச் சொல்லுவோம். (1) அதின் ஜாதிக்கட்டும் வேதாந்தக் கொள்கையும் தம்தம் உத்தரவாதத்தையும், பொறுப்பையும் மக்கள் உணராதபடி செய்துவிட்டன. (2) அதின் விக்கிரக ஆராதனை 'கடவுள் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்' என்ற சத்தியத்தை ஜனங்கள் உணரக்கூடாதபடி செய்கிறது. (3) அதின் வர்ணாச்சாரம் சகோதர சிநேகத்தைக் கெடுத்து, மனுஷனை மனுஷனுக்கு அடிமையாக்கிப் பிரித்துவிட்டது. அந்தந்த ஜாதிக்கு அந்தந்தத் தொழில் என்ற ஏற்பாட்டினால் கைத்தொழிலை ஹீனமென்றெண்ணச்செய்து, தேசத்தின் வறுமைக்குக் காரணமாயிற்று. (4) சிசுவிவாகம், கட்டாய கைமையிருப்பு

முதலிய வழக்கத்தினால் ஸ்திரீகளைக் கீழ் ஸ்திதியில் வைத்துவிட்டது. (5) கோவில் தாசிகள், சக்திபூஜை முதலிய மதஏற்பாடுகள் நம் தேசத்தின் சன்மார்க்க நிலையைச் சீர்குலைக்கின்றன.

மேலே கண்ட தப்பறைகளை நீக்குவதற்குக் காலா காலத்தில் நானாவித சீர்திருத்த சமாஜங்கள் ஏற்பட்டு, சட்டங்களைப் பிறப்பித்தோ, பிரஜைகளின் மனதைத் திருப்புவதற்குப் பிரயாசை எடுத்தோ, தேச முன்னேற்றத்திற்காகப் பாடுபடுகின்றன. சிசு விவாகத்தை நிறுத்தும்படி நிரூபிக்கப்பட்ட சாதா ஆக்டைப்பற்றி முன்னே சொல்லியிருக்கிறோம். கோவில் தாசிகளை அகற்றுவதற்கு அங்கங்கே செய்யும் முயற்சிகளையும் குறிப்பிட்டிருக்கிறோம். மற்றும் சில சீர்திருத்தங்களை இங்கு சுருக்கி வரைவோம்.

1. ஹரிஜனர் முன்னேற்றம். — 'ஹரிஜனர்' என்றால், 'ஹரி புத்திரர்' அதாவது கடவுள் பிள்ளைகளெனப் பொருள்படும். தீண்டா ஜாதிக்காரர் என்னப்பட்டோருக்கு இடக்கரடக்கலாக 1932-ம் வருஷத்தில் மஹாத்மா காந்தி இப்பேரிட்டார். ஹரிஜனர் சேவை சங்கம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது. கீழ் ஜாதிக்காரருக்கு ஹிந்து தேவாலயங்களைத் திறந்துவிடவேண்டுமென்பதும், இராப்பள்ளிக்கூடங்கள் திறந்து இவர்களுக்கு அறிவைப் புகட்டவேண்டுமென்பதும், இந்த ஜனங்கள் குடியிருக்கும் சேரிகளைச் சுகாதார விதிகளுக்கேற்க சுத்திசெய்யவேண்டுமென்பதும் இவர்கள் கோட்பாடு. இவ்வித பிரயத்தனங்கள் தேசமெங்கும் இன்னம் வியாபிக்காவிடினும் இவை நியாயமென்பதற்குச் சந்தேகமில்லை.

2. தேவாலயப் பிரவேசம். — ஹிந்து தேவாலயங்களைச் சகல வகுப்பாருக்கும் திறந்துவைக்கவேண்டுமென்று சில காலமாய்ப் பலத்த போராட்டம் நடந்துவருகிறது. பம்பாய்நகரில் 1930-ம் ஆண்டில் எட்டு தேவாலயங்கள் இவ்வாறு திறக்கப்பட்டதாக வதந்தி. திருவாங்கூர் ராஜ்யத்தில் சர்க்கார் ஆதீனத்துக்குட்பட்ட தேவாலயங்கள் சகலருக்கும் பொதுவென்ற விளம்பரம் 1936-ம்

ஆண்டில் செய்யப்பட்டது. இவைகளும் இக்காலத்து அபிவிருத்திக்கு அடையாளங்களே.

3. வேசி வர்த்தகத்தை நிறுத்தல்.—வேசிகளை வைத்து வியாபாரம் பண்ணுவதை நிறுத்தச் சட்டம் பிறப்பித்திருக்கிறது. 'விழிப்பு சங்கங்கள்' ஏற்பட்டிருக்கின்றன; வேசித்தொழிலைவிட்டுத் தப்ப விரும்பும் பெண்களை அடைக்கல ஸ்தானங்களில் சேர்த்துத் திருத்தி, உத்தமர்களாக்குவதற்கு யத்தனங்கள் நடைபெறுகின்றன. இதுவும் புகழ்ச்சிக்கேதுவான சீர்திருத்தமே.

இவற்றையும் இவைபோன்ற மற்றும் நன்முயற்சிகளையும் கண்ணுறும் கிறிஸ்தவர்கள் இச்சீர்திருத்தங்களுக்காக அகமகிழ்ச்சிகொள்ளவேண்டியதே நியாயம். கிறிஸ்துநாதரிடமிருந்து புறப்பட்ட ஒளியே இம்மாறுதல்களுக்கு மூலகாரணம். ஆகிலும், வெளியரங்கமான எப்பேர்ப்பட்ட சீர்திருத்தங்களும் எந்த ஜனத்தையும் இரட்சிக்கப் போதுமானவையல்ல. உள்ளத்தை மாற்றி, புது சிருஷ்டியை அதில் நாட்டி, தேசத்தவரின் சகல சீர்கேடுகளையும் நீக்கக்கூடிய இரட்சா பெருமானை உயர்த்திக் காட்டக் கிறிஸ்தவர்கள் இக்காரணங்களையிட்டுப் பின்வாங்கவேண்டியதில்லை.

பல்லாயிரம் ஆண்டுகளாய் நம் தேசத்தவர்கள் கடவுளைத் தடவியாகிலும் கண்டுபிடிக்க முயன்றிருக்கின்றரென்பதற்குச் சந்தேகமில்லை. எனினும், சகல தத்துவ சாஸ்திரங்களாலும் வேதாந்த உபதேசங்களாலும் அவர்கள் இன்னம் அவரைக் கண்டுபிடிக்கவில்லை. இயேசு ரட்சகரே ஹிந்துக்களின் சகல வாஞ்சையையும் தேட்டத்தையும் திருப்தி செய்கிறவர். 'வழியும் சத்தியமும் ஜீவனும் நானே' என்றவர் அவரே. கடவுள் எல்லார் மேலும் இருக்கிறவர், எல்லாவற்றின் மூலமாயும் தம்மை வெளிப்படுத்துகிறவர், எல்லாருக்குள்ளும் வாசம்பண்ணுகிறவர் என்ற சத்தியம் சகல உபநிஷதத்திற்கும் மிஞ்சினதல்லவா? கடவுள் நமது பிதா என்றும், மானிடர் யாவரும் சகோதரர் என்றும் வெளிப்படுத்தினவர் இயேசு கிறிஸ்து என்ற திரு அவதார மூர்த்தியே. தெய்வத்

துவத்தின் சம்பூரணம் அவரில் பிரத்தியட்சமாகியிருக்கிறது. ‘கடவுள் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்’ என்று போதித்தவரும், ‘கடவுள் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை’ என்று புகட்டினவரும், ‘கடவுள் அன்பாயிருக்கிறார் அன்பில்லாத எவனும் அவரைக் காணமாட்டான்’ என்று வெளிப்படுத்தினவரும் இவரே. இவராலேயே இவ்வுலகத்திலும் முக்தி, மறு உலகத்திலும் முக்தி. இவராலேயே மனுஷனுக்கு விடுதலை, ஸ்திரீகளுக்கு விடுதலை, பிள்ளைகளுக்கு விடுதலை. இவராலேயே நித்தியானந்த மூர்த்தியாகிய கடவுளுடன் சதாகாலமும் பேரின்ப பதவியும் அடைவோம். இவரை நம் சுயதேசத்தார் கண்டுகொள்ளும்படி ஜெபிப்போமாக; உழைப்போமாக. இயேசுகிறிஸ்துவே இந்து தேசத்துக்கு முக்திநாதர்.

அத்தியாயம் 6

இந்தியாவில் கிறிஸ்துமத வியாபகம்

இந்துதேசத்தில் கிறிஸ்து சபை வியாபகமான சரித்திர வரலாற்றை நான்கு காலப் பகுதிகளாக வகுத்து இங்ஙனம் கூறுவோம்.

1. சூரியானிக் காலம்.—இப்பாரதகண்டத்தில் புராதன கிறிஸ்துசபை திருவாங்கூர் கொச்சி ராஜ்யங்களிலுள்ள சூரியானிக் கிறிஸ்தவச் சபைகள். 1931-ம் வருஷ ஜன சங்கைப்பிரகாரம் இவர்கள் தொகை 11,80,546. இத்தேசமெங்குமுள்ள கிறிஸ்தவர்களில் ஆறிலொரு பங்கு இவர்களே. பரி. தோமா அப்போஸ்தலன் தென் இந்தியாவுக்குவந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்ததின் பலனாய் இப்பாகத்தில் கிறிஸ்துசபை ஸ்தாபகமாயிற்றென்பது பாரம்பரிய அபிப்பிராயம். இதை மறுக்கச் சரித்திர ரூபகாரமில்லை. பூர்வ பாரம்பரியம் உண்மையாயிருக்கலாம் என்று தற்காலச் சரித்திரக்காரர் எண்ணுகிறார்கள். கி. பி. 345-ம் ஆண்டில் எடஸா அத்தியக்ஷரான தோமா என்பவர் இச்சபையை ஸ்தாபித்தாரென்றும் எண்ணப்படுகிறது. பிரபலமான பெரிய கிறிஸ்துசபை ஒன்று ஆறும் நூற்றாண்டில் இங்கிருந்ததென்பதற்கையமில்லை.

உத்தேசம் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ஜனத்திரட்சியிலும் செல்வாக்கிலும் கிறிஸ்தவர்கள் மிகுத்திருந்தமையால், அந்நாட்டு அதிபதிகள் கிறிஸ்தவருக்கு சுயாதிபத்திய சிலாக்கியங்களை அருளினதுமன்றி, அதற்கு அத்தாட்சியாக இரு செப்பு சாஸனங்களையும் அளித்தனர். இச்சாஸனங்களில் கி. பி. 774-ம், 824-ம் ஆண்டுகள் தீட்டியிருக்கின்றன. இதற்குப் பின்னான அறுநூறு வருஷ சரித்திரத்தைப்பற்றி யாதுமறிய மார்க்கமில்லை. அந்நாட்டுச் சரித்திர சம்பந்தமாய்

என்ன மாறுதல் நேர்ந்திருப்பினும், இக்கிறிஸ்தவர்கள் ஏதும் பிரிவினையின்றி, சிரியா சபையின் ஆராதனை முறைகள் சடங்காசாரங்களை அனுசரித்தவர்களாய்க் காலம் கடத்தினார்களென்று தெரிகிறது. ஆவிக்குரிய அனலும், சுவிசேஷ பிரபல்ய முயற்சியுமோ அக்காலத்தில் சுத்த சூனியம்.

பதினைந்தாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயருக்கு இந்தியாவில் கால்வைக்க இடம் கிடைத்தபோது, இப்பூர்வ கிறிஸ்தவர்கள் ரோமைச் சபையின் சிரேஷ்ட அத்தியக்ஷரான போப்புவின் ஆட்சியை ஒப்புக்கொள்ளவும், தாங்கள் வழங்கிவந்த சிரிய ஆராதனை முறைகளையும் சடங்காசாரங்களையும் தள்ளி ரோமைச் சபை முறைகளையும் மார்க்கக் கொள்கைகளையும் அனுஷ்டிக்கவும் போர்த்துக்கேயர் கட்டாயம்பண்ணினார்கள். சிரியா சபை முற்றும் அற்றதுபோல் தோன்றிற்று. ஆனால், பதினாறும் நூற்றாண்டின் மத்தியில் டச்சுக்காரரின் அமலால்போர்த்துக்கேயரின் செல்வாக்கு க்ஷீணதசையடைந்து ஜனங்களுக்குச் சுயாதீனமுண்டாகவே, சூரியானிக் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையோர் போப்புவின் நுகத்தடியை முறித்துத்தள்ளி, அந்தியோகியா மேற்றிராணியாரால் அபிஷேகம்பெற்ற ஓர் சுதேச அத்தியக்ஷரைத் தங்களுக்குத் தலைவராகத் தெரிந்துகொண்டு, இவ்விதமாய்த் திரும்பவும் சிரிய சபையைச் சேர்ந்துகொண்டார்கள். ஆகிலும் எல்லாரும் இவ்வாறு திரும்பிவிடவில்லை. பலர் இன்னம் ரோமைச்சபை அரசாட்சிக்குள்ளேயே யிருந்தனர். இப்படியாக, ரோமைச் சபை அதிகாரத்தை ஒப்புக்கொண்ட சூரியானி ரோமைச் சபை ஒரு பிரிவு, அந்தியோகியா அத்தியக்ஷாதீனத்தை ஒப்புக்கொண்ட சூரியானிச்சபை ஒரு பிரிவு, ஆக இரண்டு சபையாய் இப்பூர்வ சபை பிரிந்தது. 1931-ல் ரோமைச் சூரியானியர் தொகை ஆறரை லக்ஷம்.

1816-ம் வருஷத்தில் சர்ச்சு மிஷன் சங்கத்தார் திருவாங்கூர் ராஜ்யத்துக்குத் தங்கள் மிஷனெரிமாரை அனுப்பி, இப்பூர்வ சபையைச்சேர்ந்த பாலருக்கு ஆங்

கில கல்வி கற்பிக்க ஆரம்பித்தார்கள். அறிவு பெருகவே சூரியானிச் சபையார் தங்கள் தப்பறைகளைக் கண்டு கொள்ளத் தொடங்கினுர்கள். சிலர் தங்கள் ஆசிரியருடைய சபையாகிய இங்கிலாந்து திருச்சபையைச் சேர்ந்துகொண்டார்கள். தங்கள் சபையையே சீர்திருத்திக்கொண்டு சூரியானிச் சபை ஐக்கியத்தை விடப்படா தென்றெண்ணின பலர்: 'சீர்திருத்த சூரியானிச் சபை' என்ற பெயர் வஹித்துப் பிரிந்துகொண்டார்கள். ஆகவே, சூரியானிச் சபையிலேயே இதுமுதல் இரண்டு பிரிவார் உண்டாயினர். ஒன்று பூர்வ சூரியானிச் சபை. இவர்களுக்கு யாக்கோபு சபைச் சூரியானியர் எனப் பெயர். இவர்கள் ஆராதனை சிரிய பாஷையில். தேவதூதர்களுக்கு விண்ணப்பம், கன்னிமரியம்மாள் வணக்கம், படங்கள் பூஜை முதலியவை இவர்களுக்குண்டு. மற்றது சீர்திருத்த சூரியானிச் சபை. இவர்கள் பரி. தோமா சபையார் என்று தங்களை அழைத்துக்கொள்ளுகின்றனர். இவர்கள் தங்கள் சுயபாஷையாகிய மலையாளத்திலேயே ஆராதனை நடத்துவர். மலையாள வேதாகமம் பிரயோகிக்கின்றனர். பூர்வ சூரியானி ஜெபகிரமத்திலுள்ள தப்பு உபதேசங்களை நீக்கிவிட்டு, ஜெபபுஸ்தகத்தைத் திருத்தி வழங்குகின்றனர். புரொட்டெஸ்டாண்டு சபைகளோடு இவர்கள் பல விஷயங்களிலும் சேர்ந்துகொள்வர். தேவ பக்திக்குரிய ஞான போதனைகளைச் சந்தோஷமாய் எற்றுக் கொள்ளுவர். கன்னட தேசத்தில் சுவிசேஷ பிரபல்ய ஊழியம் நடப்பிக்கவும் இப்போது ஆரம்பித்திருக்கின்றனர்.

இவ்விரு சபைகளும் சுதேச அத்தியக்ஷர்கள் கண்காணிப்புக்குள்ளிருந்து வருகின்றன. ஆதிமுதல் இதுவரை ஒரு காலத்திலாவது சூரியானிச் சபைகளை ஆதரிப்பதற்குப் புறதேசங்களிலிருந்து எவ்வித பொருட் சகாயமும் வந்திருப்பது கிடையாது. குருமார் ஆதரவுக்குக் கொடுக்கவேண்டியதை இயற்கையான ஓர் வரி போல ஜனங்களே கொடுத்துவிடுகிறுர்கள். ஆராதனை சமயத்தில் காணிக்கை வாங்குகிற பழக்கம் கிடையாது. ஞானஸ்நானம் ராப்போஜனத்திற்குத் தலைக்கு இவ்வளவு

என்ற ஏற்பாட்டுக்குக் குறையாமல் காணிக்கை படைக்கிறார்கள். கலியாண சமயத்தில் கொடுக்கும் ஸ்திரீதனத்தில் இருபதிலொன்றைக் குருவுக்கும், இருபதிலொன்றைக் கோவிலுக்கும் கொடுக்கிறார்கள். அத்தியக்ஷர் சபைசந்திப்புக்குப் போகும்போது, அவருக்கு தக்ஷணை படைத்து சந்தித்துக்கொள்வார்கள். இவர்கள் சுய ஆதாவு இவ்வாறு நடந்தேறுகிறது. சூரியானிக் கிறிஸ்தவ சபை ஒன்றைத்தவிர, வேறு சபை இல்லாதிருந்த காலப் பகுதிக்குச் சூரியானிக் காலம் என்று பெயரிட்டோம்.

2. ரோமான் காலம்.—இக்காலப்பகுதி கி. பி. 1500-ம் வருஷமுதல் ஆரம்பித்ததென்கலாம். 13-ம், 14-ம் நூற்றாண்டுகளிலேயே ரோமைச் சபை மிஷனெரிமார் இந்தியாவுக்கு வந்திருந்தபோதிலும், 1498-ம் வருஷம் போர்த்துக்கல் தேசத்து வாஸ்கோடிகாமா கால்வைத்த பின்னர்தான் ரோமைச் சபை விருத்தியடைந்து பிரஸ்தாபமுற்றது.

ரோமைச் சபையில் பிரக்யாதை பெற்ற மிஷனெரி பிரான்ஸிஸ் சவேரியார். இவர் 1506-ம் வருஷம் எப்பிரல்மீ 7உ யில் உயர்ந்த அந்தஸ்துள்ள குலத்தில் பிறந்தவர். கல்வியில் சமர்த்தரெனப் பிரக்யாதியடைந்தவர். ரக்ஷா பெருமான்மீதுள்ள அன்பினால் மானிடர் ஆத்ம ஈடேற்றத்தின் பொருட்டு, பூமியின் கடையாந்தரமட்டும் போகும்படியாகத் தமக்கு அருமையான யாவற்றையும் துறந்தனர். 1541-ம் வருஷம் எப்பிரல்மீ 2உ போர்த்துக்கல் தேசத்திலுள்ள லிஸ்போன் பட்டணத்திலிருந்து பாய்க்கப்பலேறி, 1542-ம் வருஷம் மேமீ 6உ கோவை வந்திறங்கினார். சாதாரணமாய் ஆறுமாசம் செல்லும் பிரயாணம் இச்சமயத்தில் பதிமூன்று மாசம் சென்றது. வழியில் அவர் பட்டபாடு மெத்த. இக்கஷ்டங்களினிமித்தம் மனஞ்சலித்துப்போகாமல், பாடுகள் எவ்வளவாய் அதிகரித்தனவோ அவ்வளவாய் அவருடைய உள்ளம் அவைகளில் களிகூர்ந்தது. மிஷனெரி ஊழியத்திற்குத் தம்மைப் பிரதிஷ்டை செய்யுமுன்னாக ஓர்நாள் நித்திரை

யில்: 'சிலுவையினிமித்தம் ஊழியங்களும் கஷ்டப்பாடுகளும் இன்னும் தாரும், சுவாமீ! இன்னும் அதிகம் தாரும்!' எனப் புலம்பினாராம். இவ்வார்த்தைகளே அச்சாதுவின் மரண பரியந்தம் அவரது நடக்கைப்பிரமாணம்.

கோவை வந்து சேர்ந்தவுடன் அவர் எழுதின கடிதமொன்றில்: 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவைச் சிநேகிதர் யார் யாரோ அப்படிப்பட்டவர்களுக்கு இக் கஷ்டம் நிறைந்த ஜீவியம் பாக்கியமான ஜீவியமாகத் தென்படும்' என்று எழுதுகிறார். இன்னோர் கடிதத்தில்: 'அஞ்ஞானிகள் நிறைந்த இத்தேசத்தில் சுவிசேஷ விதையை விதைப்பதற்கு அயோக்கியனான என்னை இரட்சாபெருமான் தெரிந்துகொண்டாரே. சாம்பலுக்கும் தூளுக்கும் சமானமான இந்த நீசனைக் கடவுள் இவ் வேலையில் உபயோகித்தாரென்றால் என்னிலும் அறிவாளிகளானவர்கள் வெட்கப்பட்டு இங்கே வரமாட்டார்களா? ஆ! ஆண்டவருடைய திராட்சத்தோட்டத்தில் யார் வேலை செய்ய வந்தபோதிலும் என் ஜீவகாலமெல்லாம் சந்தோஷமாய் அவர்களுக்கு நான் அடிமையாயிருப்பேன்' என்றெழுதுகிறார்.

சவேரியார் கோவையிலிருந்து கன்னியாகுமரிவரை கால்நடையாய் நடந்துசென்று, நதிகளைத் தன்னந்தனிமையாய்க் கடந்து, மனுஷதடம் பட்டிராத அடர் காடுகளை ஊடறுத்து, கிராமங்கள்தோறும் பிரசங்கித்து, கடற்கரை யெங்குமுள்ள மீன் பிடிக்கிற ஜாதியாரைக் கிறிஸ்தவர்களாக்கின சரிதை மகா விசித்திரம். பாஷை தெரியாவிட்டாலும், விசுவாச மந்திரம், கர்த்தருடைய ஜெபமந்திரம்—இன்னும் சில ஜெப மந்திரங்களை அந்தந்தப் பாஷையில் மொழிபெயர்த்து, மனனஞ்செய்து, அவற்றையே எங்கும் போதிப்பாராம். தரித்திர வாழ்க்கை, ஒருசந்தி போஜனம், எப்போதும் கால்நடை. பிரயாணம் செய்யும்போது அவல் வாங்கித் தின்பாராம். நாலுமணி நேரத்துக்கதிகம் நித்திரை செய்கிறதில்லையாம். மீந்த நேரத்தை ஜெபத்திலும் வியாதியஸ்தரைச்

சந்திப்பதிலும் பின்னிடுவாராம். தலையணை ஓர் கல்லே. ஒவ்வோர் ஊரிலும் ஓர் கைமணி அடித்துக்கொண்டு தெருவில் நடப்பார். பிள்ளைகள் பெரியோர் வந்து கூடவே அவர்களுக்கு விசுவாச மந்திரம் படிப்பிப்பார். மார்க்கத்தில் சேர விரும்புகிறவர்களுக்கு ஞானதீட்சை யளிப்பார். ஒரே நாளில் அநேக ஜனங்களுக்கு தீட்சை யளித்ததினால், 'அடிக்கடி என் கை திமிர்பிடித்துப் போகும்; விசுவாச மந்திரத்தையும் ஞானஸ்நான வார்த்தைகளையும் மாறி மாறிச் சொல்வதினால் குரல் கம்மிப் போவதுண்டு' என்கிறார். ஏராளமான ஜனங்கள் போதனை கேட்பதற்கு வந்து கூடும்பொழுது, தாமே அவர்களுக்குப் போதனை சொல்லுவது அசாத்யமாகையால் ஓர் உபாயம் செய்தார். பள்ளிப்பிள்ளைகளை முதலாவது பிடித்து, அவர்களுக்கு இப்பாடங்களைப் படிப்பித்து, அப்பால் அவர்கள் தங்கள் பெற்றோருக்கும் மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுக்கும்படி செய்தார். அவர்கள் இவரது சிலுவை, ஜெபமணிமாலை முதலியவற்றை எடுத்துக் கொண்டு, முதலில் ஆலயத்தில்கூடி ஜெபம்செய்து, அப்பால் வீதிகள்தோறும் சென்று வியாதியஸ்தர்களைச் சந்தித்து ஜெபிப்பார்களாம். யாராகிலும் கிறிஸ்து மார்க்கத்திற்கு வருகிறோமென்றால் அவர்களுக்கு விசுவாச மந்திரம் படிப்பிப்பார்கள். பெற்றோரில் அல்லது ஊரிலுள்ள மற்றப் பெரியோரில் யாராகிலும் குடித்தால், அல்லது கெட்ட வார்த்தை பேசினால், அல்லது விக்ரக பூஜைசெய்தால், பயமின்றி இப்பிள்ளைகள் அதைக் கண்டிப்பார்களாம்.

அப்பால் ஜப்பான் தேசம் சென்று அங்கு கிறிஸ்து மார்க்கத்தை ஸ்தாபித்துத் திரும்பிவரும் வழியில் பல போர்த்துக்கல் தீவுகளைத் தரிசித்து, 1552-ம் வருஷம் டிசம்பர்மீ 2-ம் தேதி தன்னந்தனிமையாய் மரித்தார். 1553-ம் வருஷம் மார்ச்சுமீ 15-ம் தேதியில் வெகு மரியாதையாய் அவர் சரீரம் கோவையில் க்ஷேமிக்கப்பட்டது.

சுமார் 200 ஆண்டுகளாக ரோமைச் சபையின் அதிகாரமே தென் இந்தியாவின் மிச்சமான பாகங்களில் சென்று

வந்தது. பிரான்ஸிஸ் சவேரியாரின் சகோதரி மகனை கிரோனிமோ சவேரியார் அக்பர் சக்கிரவர்த்தியின் அரமனைக்குட் சென்று, கிறிஸ்துமார்க்கச் சம்பாஷணை செய்யும் சலாக்கியம் பெற்றதுமன்றி, மொகலாய ராஜ்யத்தின் தலைநகராகிய ஆக்ராவிலும் சுவிசேஷப் பிரசங்கம் செய்தனர். இந்தியாவில் ரோமைச் சபையை ஸ்தாபித்து அதை ஊன்றக் கட்டும்படி முயற்சித்து கீர்த்திப்பிரஸ்தாபம் பெற்ற ஐரோப்பிய மிஷனெரிமார் பலரில் வீரமாமுனிவரேன்ற பெஸ்கியும், தத்துவ போதகர் என்ற ராபர்ட் டீ நோபிலியும் தென் இந்தியாவில் சிரேஷ்டமானவர்.

1700-ம் வருஷம் தெலுங்கு தேசத்தில் பிரான்சிலிருந்துவந்த சுவாமிமாரால் சுவிசேஷம் முதல் முதல் பிரசங்கிக்கப்பட்டது. புங்கனூரே அக்காலத்தில் அவர்கள் பிரதான ஸ்தானம். 1931-ம் வருஷ ஜனசங்கை மதிப்புப்படி ரோமைச் சபையைச் சேர்ந்த கிறிஸ்தவரின் தொகை 21,13,000. சென்னை, பம்பாய், வங்காளம், மத்திய இந்தியா, பேஹார், ஒரிஸ்ஸா மாகாணங்களில் இச்சபைக் கிறிஸ்தவர்கள் ஏராளம். மதுரை ஜில்லாவில் மூன்றில் இரண்டு பங்குக் கிறிஸ்தவர்களும், திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள கிறிஸ்தவர்களில் அரைவாசியும் ரோமான் சபையார். தெலுங்கு தேசத்தில் இச்சபை சுருக்கம். மொத்தம் சுமார் பத்து லக்ஷம் தெலுங்குக் கிறிஸ்தவர்களில் பத்திலொரு பங்கு மாத்திரம் ரோமைச் சபையார்.

3. லூதரன் காலம்.—இந்து தேசத்திற்குச் சுத்த சுவிசேஷத்தைக் கொண்டுவந்த முதல் மிஷனெரியின் சரித்திரத்தோடு இப்பிரிவு ஆரம்பிக்கின்றது. டென்மார்க்கு தேசத்தில் அரசுபுரிந்த நாலாம் பிரெட்ரிக் அரசன் இந்தியாவிலுள்ள தன் நாடுகளிலுள்ளவர்கள் அஞ்ஞான இருளால் மூடப்பட்டிருப்பதைக் கேள்வியுற்று, மெய்ஞ்ஞான ஒளியை அவர்களுக்குப் புகட்டும்படி, ஜர்மனி தேசத்தவரான சீகன்பால்க் ஐயரையும், பிளிச்சோ ஐயரையும் அனுப்பினார். அவர்கள் நவம்பர் மீ 29வ கொப்பனேகன் நகரில் கப்பலேறி, 1706-ம் வருஷம் ஜூலை மீ 9வ தரங்கன்பாடி கரை வந்து சேர்ந்து, கர்த்தருடைய

வேலையை மிக்க ஊக்கமாய் நடப்பித்தனர். இத்தேவ தாசரே சுத்த சுவிசேஷச் சபைகளிலிருந்து இந்தியாவுக்கு வந்த முதல் மிஷனெரிமார். இவர்களுக்குப் பின் கிரண்ட்லர், சூல்ட்ஸ், கீர்நாந்தர், கேரிக், சுவார்ச் முதலிய உத்தம மிஷனெரி சேனையார் இவ்வேலையை உற்சாகமாய்க்கொண்டு செலுத்தினர். கிரண்ட்லரும், சூல்ட்ஸும், சீகன்பால்க் ஐயர் துவக்கின தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பை 1727-ம் வருஷம் முடித்துப் பிரசுரித்தனர். இதுவே இந்தியாவின் பாஷைகளெல்லாவற்றிலும் முதல் மொழிபெயர்ப்பு. கீர்நாந்தர் வங்காள மாகாணத்தில் சுத்த சுவிசேஷ வேலை நடப்பித்த முதல் மிஷனெரி. தமிழ் ஞானப்பாட்டை முதல் முதல் இயற்றினவர் பெப்ருசியஸ்ஐயர். அந்நூலின் சொற்சுவை பொருட்சுவையை நினைத்து, அதை 'நெஞ்சுருக்கி நூல்' என்று சொல்வதுண்டு.

இவர்களெல்லாரிலும் அதிகக் கீர்த்தி பிரஸ்தாபம் பெற்றவர் கிறிஸ்தியான் பிரெட்ரிக் சுவார்ச் ஐயர். இவரே தஞ்சாவூர், திருச்சினுப்பள்ளி ஜில்லாக்களில் சபையை நாட்டி, 'தகப்பன்' என்னும் செல்லப் பட்டப்பேரையும் சுதேசிகளால் பெற்றவர். இவர் 1750-ம் ௵ ஜூலை௴ 16௳ கூடலூரில் வந்திறங்கி தரங்கன்பாடி சேர்ந்தார். நாலு மாதத்தில் தமிழில் பிரசங்கம் செய்தார். அப்பால் திருச்சினுப்பள்ளியில் 1767-ம் வருஷம் முதல் 1783-ம் வருஷம் வரைக்கும், அதற்குப்பின் தஞ்சாவூரிலும் வசித்து சபைகளை ஸ்தாபித்தார். ராஜாங்க விஷயமாயும் பல உதவிகள் புரிந்தார். தமக்குக் கிடைத்த சர்க்கார் சம்பளத்தை மிஷன் வேலைகளுக்குச் செலவிட்டு, தாமோ வெகு எளிமையாய்ப் பிழைப்பாராம். சாப்பாடு கறியும் சோறுந்தான். சீட்டித் துணியைக் கருப்புச் சாயமேற்றி தமக்கு வேண்டிய உடுப்புத் தைத்துக்கொள்வாராம்.

இப்படி அரைநூற்றாண்டு காலமாக விடாமுயற்சியுடன் சுவிசேஷ ஊழியஞ்செய்து, 1798-ம் வருஷம் தேகவியோகமானார். இம்மகான் மரித்தபோது சுதேச சபைக்கு லக்ஷம் ரூபாய் வைத்துப்போனார்.

ஜர்மனி டென்மார்க்கு தேசத்தவரான மேற்கூறிய மிஷனெரிமார் டென்மார்க்கு அரசனால் அனுப்பப்பட்ட போதிலும், இங்கிலாந்து சபையிலிருந்து மிகுதியான உதவி பெற்றனர். அன்றியும், இறுதியில் இம்மிஷனெரிமாரும் அவர்கள் நாட்டிய சபைகளும் கிறிஸ்தவ கல்வி அபிவிர்த்தி சங்கத்தார் ஆதரவுக்குள்ளும், ஜர்மன் தேசத்து லேப்சிக் மிஷனெரி சங்கத்தார் ஆதரவுக்குள்ளும் வந்தன. 1825-ம் வருஷம் கிறிஸ்தவ கல்வி அபிவிருத்தி சங்கத்தார் தங்கள் வேலையைச் சுவிசேஷ அபிவிருத்தி சங்கத்தாருக்குக் (S. P. G.) கையளித்தனர். 1914-ம் ஞூல யுத்தத்துக்குப்பின் லேப்சிக் மிஷன் ஊழியம் முழுவதையும் சுவேதன் சபை மிஷன் ஏற்றுக்கொண்டது.

1919-ம் வருஷம் லூதரன் ஐக்கியத்தைச்சேர்ந்த தமிழ்ச் சபைகள் 'தமிழ்ச் சுவிசேஷ லூதரன் சபை' ஒன்றை ஸ்தாபித்தனர். 1934-ம் வருஷம் இச்சபையின் தொகை 31,400 பேர்.

தமிழ் நாட்டில் மாத்திரமல்ல, தெலுங்கு தேசத்திலும் சோட்ட நாகப்பூரிலும், சாந்தாலியாவிலும் அமெரிக்கா ஐரோப்பாக் கண்டங்களிலிருந்து லூதரன் மிஷன்கள் வந்து சபைகளை ஸ்தாபித்திருக்கின்றன.

இந்துதேசத்திலிருந்த சீர்திருத்த சபை மிஷனெரிமார் எல்லோரும் லூதரன் சபை ஒழுங்கைச் சேர்ந்தவர்களானதால் இப்பிரிவை லூதரன் காலப்பகுதி யென்றோம்.

அத்தியாயம் 7

பத்தோன்பதாம் நூற்றுண்டு மிஷன்கள்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் மிஷனெரி விருத்தாந்தத்திற்கு ஆங்கில காலம் எனப் பெயரிடலாம். ஏனெனில் இக்காலத்திலேயே ஆங்கில மிஷன்கள் திரள் திரளாய் வந்தன. ஆங்கில மிஷன்கள் என்றதில் அமெரிக்கன் மிஷன்களும் சேர்ந்துள.

இந்நூற்றுண்டு சரித்திரத்தை இரண்டு பாகமாக வகுக்கலாம்:—ஒன்று, சிப்பாய் கலகத்துக்கு முன்னுள்ள காலம்; மற்றது, சிப்பாய் கலகத்துக்குப் பின்னுள்ள காலம். இந்து தேசத்தில் தற்காலம் சுவிசேஷ பிரபல்ய வேலை நடப்பிக்கும் மிஷன்களில் மிச்சமானவை ஆரம்பமானது 1857-ம் வருஷத்துக்குமுன்; அவை ஸ்திரப்பட்டு பெலன் கொண்டு விஸ்தார வேலை நடப்பித்தது அதற்குப்பின்.

முதல் சுத்த சுவிசேஷ மிஷனெரி இந்து தேசத்தில் கால்வைத்து சுமார் நூறு வருஷக்காலமாய் மிஷனெரி வேலை மெத்த மந்தகதியாய் நடந்தேறினது. இதற்கு இரண்டு முகாந்தரம் உண்டு. மேல்நாட்டுக் கிறிஸ்தவர்களுடைய நிர்விசாரம் ஒரு காரணம்; கம்பெனிக்காரர் குதாவிடை மற்ற காரணம். கம்பெனிச் சம்பளத்தில் ஐரோப்பியருக்குக் குருக்களாய் ஏற்பட்டிருந்த பக்தர் சிலர் சுதேசிகளையும் மறவாது, சுதேசப் பிள்ளைகளுக்குத் தர்மப்பள்ளிகள் ஏற்படுத்தி, சுதேச பாஷையில் வேதாகமப் பங்குகளைப் பிரபல்யமாக்கி, இவ்வாறு சுதேசிகளுக்காகவும் கொஞ்சம் நல் வேலை செய்தார்கள். இவர்களில் டேனியேல் பிரௌன், கிளாடியஸ் புக்கேனன், ஹென்றி மார்ட்டின், தாமஸ் தாமேசன், டேனியேல் காரீ என்பவர்கள் பிரக்யாதி பெற்றவர்கள். பாளையங்கோட்டையில் கம்பெனி பட்டாளக் குருவாயிருந்த ஹப் ஐயரும் இது விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டவர்களில் ஒருவர். திருநெல்வேலி ஜில்லாவில் சி. எம். எஸ். சங்கத்

தார் வந்து வேலை செய்யும்படி அவர்களை வரவழைத்தவர் இவரே.

இந்து தேசத்திற்கு முதல் ஆங்கில மிஷனெரி உல்லியம் கேரி என்னும் கோனே. இவர் 1793-ம் வருஷம் நவம்பர் மீ 13உ கல்கத்தாவில் வந்திறங்கினுர். கம்பெனிச் சம்பளம் வாங்காத எந்த ஐரோப்பியராவது விசேஷித்த அநுமதியின்றி கம்பெனி அதிகாரத்துக்குட்பட்ட பூமியில் கால்வைக்கப்படாதென்பது சட்டம். டென்மார்க்கு தேசக் கப்பலொன்றில் வந்த கேரி நீலத்தொட்டிவேலை செய்பவராகப் பேரெழுதிக்கொண்டு, கல்கத்தாவுக்கு 150 மைலுக்கப்பாலுள்ள மதனுபட்டி என்ற இடத்தில் மாசம் ஒன்றுக்கு ரூபாய் 75 சம்பளத்தில் நீலத்தொட்டி மேற்பார்க்கும் துரையாக வேலையமர்ந்து, அங்கே ஆறு வருஷம் கழித்தார். மிஷனெரி ஊழியம் செய்ய ஆசை கொண்டு இங்கிலாந்து தேசத்திலிருந்து புறப்பட்டு இத்தேசத்துக்கு வந்த முதல் மிஷனெரியின் கதி இது தான்! மார்ஷமன், உவார்ட் என்பவர்கள் அப்பால் அவரோடு வந்து சேர்ந்தனர். இவர்கள் மூவரும் 1810-ம் ஆண்டில் கல்கத்தாவுக்கு 15 மைலுக்கு வடக்கே சேராம்பூர் என்ற இடத்தில், டென்மார்க்கு ராஜாங்கத்தாருடைய பூமியில் குடியேறினர். கம்பெனி அதிகாரம் இங்கே செல்லமாட்டாதாகையால் இப்படிச் செய்தனர். இவ்விடத்தில் இவர்கள் மூவரும் ஒரே சிந்தையாய்த் தங்கள் சுகம், பெலன், ஆஸ்திபாஸ்தி, சொத்து சுதந்தரம், மனைவி பிள்ளைகள் யாவற்றையும் ஆண்டவருக்குச் சமர்ப்பித்து இந்து தேசத்தின் ஈடேற்றத்துக்காய் இரவுபகல் உழைத்தனர். 36 பாஷைகளில் வேதாகமப் பாகங்கள் பாஷாந்தரம் செய்து அச்சிடப்பெற்றன. கலாசாலை ஸ்தாபித்துத் தேசிகரைப் பயிற்றுவித்தனர். பெண்பாடசாலை ஏற்படுத்திப் பெண்கள் கல்வியை அபிவிருத்தி செய்தனர். சமாச்சாரப் பத்திரிகை இயற்றி, அதின் வாயிலாய் இந்துமதத் துர்அப்பியாசங்களைக் கண்டித்தனர். உடன் கட்டை யேறுதல் என்ற குரூர வழக்கத்தைச் சட்டமுறையாய் நிறுத்திவிடும்படி முயற்சித்தோர் இவர்களே. சுவிசேஷ பிரபல்யத்திற்காகவும் வேதாகம மொழி

பெயர்ப்பு அச்சடிப்புக்காகவும் ஏராளமான சொந்தப் பணங்களைச் செலவு செய்தனர். கடவுளிடமிருந்து பெரிய காரியங்களை எதிர் பார்; கடவுளுக்காகப் பெரிய காரியங்களைச் செய்யப் பார்' என்ற சட்டத்தை நியமித்துக் கொண்ட இம்மகான்கள் கடவுளுக்காகப் பெரிய காரியங்களைச் செய்ய எத்தனித்தது மாத்திரமல்ல, மெய்யாகவே செய்து முடித்தார்களென்றும் சொல்லத்தகும்.

1813-ம் வருஷத்தில் கம்பெனிக்காரருடைய அதிகாரப்பத்திரம் புதுப்பிக்கப்பட்டபோது, மிஷனெரிமாருக்கு விரோதமான சட்டங்கள் நீக்கப்படவே, மிஷன்களும் மிஷனெரிமாரும் ஒருவர்பின் ஒருவராய் இத்தேசத்தில் வந்திறங்கினர். 1822-ம் வருஷத்தில் கடப்பையில் லண்டன் மிஷன் ஸ்தாபகமானது. சித்தூரில் உவாட்டர்ஸ் என்ற ஓர் ஜட்ஜும், குண்டூர் மசூலிப்பட்டணத்தில் கோல்டிங்காம் என்ற கலெக்டரும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துச் சபையை ஸ்தாபித்தனர். கோல்டிங்காம் கலெக்டர் பிரயத்தனத்தினாலேயே சி. எம். எஸ். சங்கத்தார் தெலுங்கு நாட்டுக்கு மிஷனெரிமாரை அனுப்பத் தீர்மானித்தனர்.

கீழே கண்ட ஜாபிதாவைக் கவனித்தால் தேச முழுவதும் மிஷனெரி எல்லைக் கற்கள் போடுவதற்காக, கிறிஸ்துவுக்கென்று எவரெவர், எப்போதெப்போது, எங்கெங்கே முளையடித்தனரென்று தெரியவரும்.

1793 பங்காளத்தில்—இங்கிலீஷ் பாப்திஸ்து மிஷன், உல்லியம் கேரி.
1806 திருவாங்கூரில்—லண்டன் மிஷன், ரிங்கல்டாப்.
1812 பம்பாயில்—அமெரிக்கன் மிஷன்.
1813 பர்மாவில்—அமெரிக்கன் பாப்திஸ்து மிஷன், ஜட்சன்.
1814 சென்னையில்—சர்ச்சு மிஷன்.
1816 தென் இந்தியாவில்—உவெஸ்லியன் மிஷன்.
,, காசியில்—இங்கிலீஷ் பாப்திஸ்து மிஷன்.
,, திருவாங்கூர் ராஜ்யத்தில்—சர்ச்சு மிஷன்.

1818 டில்லியில்—இங்கிலீஷ் பாப்திஸ்து மிஷன்.
1820 திருநெல்வேலியில்—சர்ச்சு மிஷன், ரேனியுஸ்.
1822 ஒரிஸ்ஸாவில்—பாப்திஸ்து மிஷன்; கடப்பாவில்—லண்டன் மிஷன்.
1825 தென் இந்திய மிஷன்களைக் கிறிஸ்தவ கல்வி அபிவிர்த்தி சங்கத்தாரிடமிருந்து எஸ். பி. ஜி. ஏற்றுக்கொண்டது.
1830 கல்கத்தாவில்—ஸ்காட்லந்து சபை மிஷன், டாக்டர் டப்.
1833 கான்பூரில்—எஸ். பி. ஜி. மிஷன்.
1834 மதுரையில்—அமெரிக்கன் மிஷன்.
,, லூடியானாவில் — அமெரிக்கன் பிரஸ்பிற்றீரியன் மிஷன்.
,, வட மலையாளத்தில்—பாசல் ஜர்மன் மிஷன்.
1835 தெலுங்கு அமெரிக்கன் பாப்திஸ்து மிஷன்.
1836 அஸ்ஸாமில்—அமெரிக்கன் பாப்திஸ்து மிஷன்.
1837 சென்னையில்—இங்கிலீஷ் பாடசாலை, அண்டர்சன்.
1841 குஜாராத்தில்—ஐரிஷ் பிரஸ்பிற்றீரியன் மிஷன்.
,, அஸ்ஸாமில்—உவெல்ஷ் மிஷன்.
,, தெலுங்கு நாட்டில்—சர்ச்சு மிஷன்.
1842 செக்கந்தராபாத்தில்—எஸ். பி. ஜி. மிஷன்.
,, குண்டூரில்—அமெரிக்கன் லூதரன் மிஷன்.
1844 நாக்பூரில்—ஸ்காட்லந்து பிரீ சர்ச்சு மிஷன்.
1846 ராஞ்சியில்—காஸ்னர் ஜர்மன் மிஷன்.
1852 ஜெனனா வேதாகம வைத்திய மிஷன்.
1854 டில்லியில்—எஸ். பி. ஜி. மிஷன்.
,, பெஷாவரில்—சர்ச்சு மிஷன்.
1855 அமெரிக்கன் ஆர்க்காட் மிஷன், ஸ்கடர்.
,, சியால்கோட்டில்—அமெரிக்கன் ஐக்கிய பிரஸ்பிற்றீரியன் மிஷன்.
1856 பரேய்லியில்—மெதடிஸ்ட் எப்பிஸ்கோப்பல் மிஷன்.

மேற்கண்ட ஜாபிதாவைக் கவனிப்பின், தற்காலம் இந்து தேசத்தில் விஸ்தார வேலை நடப்பிக்கும் மிஷன்கள் அனைத்திற்கும் அஸ்திபாரம் 1857-ம் வருஷத்துக்கு முன்னமே போடப்பட்டது என்று விளங்கும். மிஷனெரிமாரோ அக்காலத்தில் சுருக்கம். நடைபெற்ற வேலையும் சொற்பம். விருத்தியும் கொஞ்சம்.

இருவித விசேஷித்த வேலை இக்காலத்தில் ஆரம்பமானது. ஒன்று ஜெனனு மிஷன் வேலை. 1822-ம் வருஷத்தில் கல்கத்தாவில் சர்ச்சு மிஷனைச் சேர்ந்த கூக்மிசியம்மாள் அங்குள்ள ஸ்திரீகள் வீடுகளுட் சென்று அந்தர்ப்புர வேலைசெய்ய ஆரம்பித்தார்கள். அந்தர்ப்புர வேலையை முதல் முதல் ஆரம்பித்தது இந்த மாதுசிரோமணியே.

மற்றது கலாசாலை வேலை. இதன் உற்பத்தியும் கல்கத்தாவிலேயே. ஸ்கொத்லாந்து சபை மிஷன் டப் பண்டிதர் 1830-ம் வருஷத்தில் ஹிந்து பிள்ளைகளுக்கு இங்கிலீஷ் பாடசாலை ஸ்தாபித்தார். மிஷன் கல்லூரிகள் தேசமெங்கும் ஏற்பட்டது இதன் பின்னரே.

டப் சாஸ்திரியாரின் சுயவெறுப்பும் அன்பும் ஆச்சரியமானது. அவரது ஜெபத்தினாலும் பிரயாசத்தினாலும் உயர்குலத்தோரான பலர் கல்கத்தாவில் இக்காலத்தில் கிறிஸ்து சமய அநுசாரிகளாயினர். சுவிசேஷ பிரபல்ய வேலையின்மீது அவருக்கிருந்த அவாவும், இந்து தேசத்தின்பேரில் அவருக்கிருந்த பாசமும் மகா விசேஷம். ஸ்கொத்லாந்துக்கு ரஜாவில் போயிருந்த ஒரு சமயம், அவர் செய்த உபந்நியாஸம் ஒன்று மறக்கத்தக்கதல்ல. சுமார் நடுராத்திரி வரை பேசினாராம். சமீபத்திலிருந்த ஓர் சிநேகிதர், மீதியான சரித்திரத்தை மறுநாள் சொல்லும் என்றாராம். கூடியிருந்த சபையோ, 'பேசும்', 'பேசும்' என்று சத்தமிட்டார்களாம். டப் அப்பால் இரண்டு மணிநேரம் பேசினாராம். இவ்வுபந்நியாஸத்தின் கடைசிப் பாகத்தை இங்கே மொழிபெயர்த்தெழுதுகிறோம்:—

"கடந்த பன்னிரண்டு மாசங்களாய் நான் இந்தியாவெங்கும் பிரயாணஞ்செய்யுங்கால், பிரிட்டிஷ் போர்ச்

சேவகர் சமாதிகளைத் தேசமெங்கும் பார்த்துப் பிரமை கொண்டேன். தெற்கே ராமநாதபுரம் என்ற இடத்தில் என் சொந்த வீட்டுக்குச் சமீபத்திலிருந்துபோன என் சுயதேசத்தான் ஒருவன் சமாதியைக் கண்டு என் உள்ளங் கனிந்தது. போர்க்களத்தில் கீர்த்தி பெறும்படி அவன் பெற்றோர் அவனைத் தடையின்றி அனுப்பியிருந்தனர். கிறிஸ்துவுக்காக ஓர் எளிய மிஷனெரியாகப் போக அவன் இஷ்டப்பட்டிருந்தால் அவர்கள் அவனை அனுப்பியிருப் பார்களோ, சந்தேகம்! இந்தியாவின் ஒரு திசையிலிருந்து மறுதிசை வரைக்கும் ஸ்கொத்லாந்தின் மக்களின் எலும்பு கள் புதைக்கப்படாத பள்ளத்தாக்குமில்லை, மலையுமில்லை; அவர்கள் இரத்தத்தினால் கறைபடாத ஆறுமில்லை ஏரியு மில்லை. பிதாக்களே, மாதாக்களே, நீர்க்குமிழிபோல் சொற்பக்காலமுள்ள கீர்த்திக்காகவும், நிலையற்ற பணத் திற்காகவும், வீண் பிரஸ்தாபத்திற்காகவும் உங்கள் மக்களை மனங்குவிந்து ஆயிரமாயிரமாய் அனுப்புகிறீர் களே! இம்மானுவேலின் மிஷனெரி சேனையில் அவர்கள் சேர்ந்து அழிவில்லாத நித்திய மகிமைக் கிரீடத்தைப் பெறும் மகத்துவமான பணிவிடைக்கு மாத்திரம் தடை செய்வீர்களோ?" என்று சொல்லி முடித்தாராம்.

இந்தியாவைவிட்டுப் போகும் சமயத்தில் அவர் சொன்ன வார்த்தைகளையும் எழுதுவோம்:—

'என் மீதியான நாட்கள் அற்பமாயினும் அதிகமா யினும், என் விருத்தாப்பிய காலத்தில் நான் கைகால் முடங்கிக் கிடந்தாலும் கைகால் ஆடித்திரிந்தாலும்— இந்தியா, இந்தியா என்றே என் உள்ளம் துடிக்கும்! நான் காடுமேடு அலைந்துதிரிய நேரிட்டாலும் ஸ்திர மான தொழில் துறை செய்தாலும், ஜோலியிலிருந்தா லும் சரி, சும்மா இருந்தாலும் சரி,—என் உள்ளம் இந் தியா இந்தியாவென்றே அடிக்கும். இந்த மண் பாண்ட மான கூடாரத்தில் கடவுள் என்னை வைக்குங் காலமள வும், நான் இந்தியாவின் நன்மைக்காகவே உழைப்பேன். இந்தியாவின்மேலும் அதின் ஜனங்கள்மேலும் தேவாசீர் வாதம் பொழியப் பிரார்த்தித்து என் கடைசி மூச்சை விடுவேன். சாவுக்கினமான இந்தச் சரீரத்தைக் கடைசி

யில் ஓர் சமாதியில் வைத்து, அதின்மேல் ஞாபகக் கல் சமர்ப்பித்தால், அதில்: "அலெச்சான்டர் டப்—சுபாவத்திலும் பழக்கத்திலும் நீசப்பாவி—கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ரத்தத்தினாலும் புண்ணியத்தினாலும் விசுவாசத்தைக்கொண்டு கிருபையினால் மீட்கப்பட்டவன்" என்று எழுதுவதே போதும்; இன்னும் அதிகமாய் எழுதும்படி என் சிநேகிதர்கள் எண்ணங்கொள்வார்களாகில், "வேலை—மிஷனெரி வேலை; தன் ஜீவியத்தினாலும் ஊழியத்தினாலும் இந்தியாவுக்கு உத்தம சிநேகிதன்" என்று என் அருமை இந்திய நண்பர் இப்பொழுது தம் அன்பினால் சொன்னதை வரையக் கோருகிறேன். இவ்வுலகத்தில் எனக்குக் கிடைக்கக்கூடிய மகா கண்ணிய விருது அதுதான் என்றெண்ணுவேன்' என்றார். இதைப்போலொத்த அன்புள்ள மிஷனெரிமார் அநேகரைக் கடவுள் நம் தேசத்துக்கு அநுக்கிரகித்ததற்காக அவருக்கே ஸ்தோத்ரம்!

சிப்பாய் கலகத்தோடு நல்ல காலம் பிறந்தது. கலகக்காரர் கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினபடியால் கிறிஸ்தவர்களுடைய உத்தமம், மனஉறுதி, விசுவாசம் இவ்வளவென்று விளங்க ஏதுவாயிற்று. மேலும் இத்தேசத்தாருக்குக் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைத் தக்கபடி அறிவியாமலிருப்பது தப்பிதம் என்று பிரிட்டிஷ் கிறிஸ்தவர்களுடைய மனதில் இப்போதுதான் பட்டது. ஆகவே முன்னில்லாத ஊக்கமும், தைரியமும், உற்சாகமும் ஒவ்வொரு மிஷனெரி சங்கத்திலும் காணப்பட்டது. மேலும் சிப்பாய் கலகத்தோடு கம்பெனிக்காரருடைய அதிகாரமும் முடிவடைந்தது. விக்டோரியா ராணியார் விளம்பரத்தின்படி சகல மதஸ்தர்களும் தடையின்றி வசிக்க, வணங்க, வேலை செய்ய இடம்பெற்றார்கள். ஆகவே, பழைய மிஷன்களனைத்தும் பெலன்கொண்டெழும்பின. சில புது மிஷன்களும் வந்தன.

1860 ராஜபுதனத்தில்—பிரீ சர்ச்சு மிஷன்.

1874 கோதாவரி ஜில்லாவில்—கனடியன் பாப்திஸ்து மிஷன்.

1874 இங்கிலீஷ் பிரன்ட்ஸ் மிஷன்.
1877 டில்லியில்—கேம்பிரிட்ஜ் மிஷன்.
1880 கல்கத்தாவில்—ஆக்ஸ்வோர்ட் மிஷன்.
1889 பம்பாயில்—அலையன்ஸ் மிஷன்.

இன்னும் அநேக மிஷன்களும் கடந்த நாற்பது ஐம்பது வருஷங்களில் எழும்பி, தேசத்தில் பற்பல பாகங்களில் சுவிசேஷ வேலை நிகழ்த்துகின்றன.

சகல மிஷன்களுக்கும் பொதுவில் வேலைசெய்யும் சங்கங்களும் பலவுள. சிப்பாய் கலகத்துக்கு ஸ்தோத்திர ஞாபக சின்னமாக 1857-ம் வருஷத்தில் கிறிஸ்தவ புஸ்தக சங்கம் ஏற்பட்டது. சென்னை மிமோரியல் ஹால் அதற்கே ஞாபக சின்னம். வாலிபர் கிறிஸ்தவ ஐக்கிய சங்கம், வாலிப ஸ்திரீகள் கிறிஸ்தவ ஐக்கிய சங்கம், பால்யர் பக்தி முயற்சி சங்கம், ஞாயிறு பாடசாலை ஐக்கியம் முதலிய பொதுச் சங்கங்களும், எல்லாவற்றிற்கும் மேலாக, வேதாகம சங்கமும் சகலவித மிஷன்களுக்கும் அநுகூலமாகவும், சுவிசேஷ பிரபல்ய வேலைக்கு வலக்கைபோலும் நின்று சிறந்த சகாயம் செய்து வருகின்றன.

1940-ம் வருஷக் கடைசியில் இந்து தேசத்தில் சுமார் 160 புறதேச மிஷன்களும், 34 சுதேச மிஷன்களும் சுவிசேஷ பிரபல்ய வேலைசெய்து வந்தன. இவற்றில்—மிஷனெரிமார் மனைவிகள் நீங்கலாக—4247 மிஷனெரிமார் பணிவிடை செய்தனர். சுதேச ஊழியர் தொகை சுமார் 50,000. இது தவிர, பாடசாலைகள், கலாசாலைகள், வைத்தியசாலைகள், கைத்தொழிற் சாலைகள்—முதலிய எத்தனையோ சாலைகள் கிறிஸ்துமத சம்பந்தமாய்த் தேசத்தின் பொதுஜன நன்மைக்கென்று பாடுபடுகின்றன. மத துவேஷமற்றோர் யாரும் இவ்வரிய பணிவிடையை நன்கு மதிக்காதிரார். 1940-ம் வருஷத்தில் 34 கிறிஸ்தவ கலாசாலைகளிருந்தன; அவற்றில் 13,180 பேர் சர்வகலா சாலைப் பட்டங்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டனர். இவை போக, தேசத்தில் கிறிஸ்துமத சம்பந்தமான 301 ஹைஸ்கூல்களும், 464 மிடில் ஸ்கூல்களும், 107 கைத்

தொழில் பயிற்சிசாலைகளும் உண்டு. மேலும், வியாதியஸ்தர், அங்கஹீனர், அநாதர் ஆஷிரய ஸ்தலங்கள் பல தேசமெங்கும் கிறிஸ்தவ மிஷன்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. 510 கிறிஸ்தவ ஆஸ்பத்திரிகள், 55 குஷ்டரோக வைத்தியசாலைகள், 10 க்ஷயரோக ஆஸ்பத்திரிகள், 14 கபோதர்—செவிட்டூமையர் பாடசாலைகள், 41 விதவை ஆஷிரய ஸ்தலங்கள், 99 அநாதப் பிள்ளைகள் பள்ளிக்கூடங்களும் மிஷனெரிமாரால் பொதுஜன நன்மையைக் கருதி நடைபெறுகின்றன. 61 இடங்களில் விவசாயப் பாடசாலைகளும் குடியேற்றுகளும் உண்டு. இவ்வித பாடசாலைகள் நம் தேசத்துக்குச் செய்துவரும் பரோபகார ஊழியத்தை அளவிட முடியாது.

எனினும், மேற்கூறிய பணிவிடைகளனைத்தும் விதேச மிஷன்களால் நடைபெற்று, விதேச சகாயத்தால் பரிபாலிக்கப்பெறும் காரணத்தால், அவை தேஷீய கிறிஸ்தவர்கள் பணிவிடையாகவாவது, தேஷீயசபை சுயதேசத்திற்காக நடத்தும் ஊழியமாகவாவது மதிப்புப்பெற வழி இல்லை. இவ்வேலை யாவும் தேஷீயசபை ஆதீனத்துக்குட்பட்டு நடைபெறுவதாகவும், இவற்றை முன் நின்று நடத்தும் முதல்வர் இந்தியாராகவும், அவற்றின் காரிய நிர்வாஹ சபைகளில் தேஷீயசபைப் பிரதிநிதிகள் வார்த்தை பலமாகவுமிருக்கும்போதுதான், இவை தேஷீய சபையின் சாட்சிப் பணிவிடைகளெனத்தகும். தேஷீய சபையின் பக்திக்கும், சுவிசேஷப் பிரபல்ய வாஞ்சைக்கும் தேச சேவைக்கும் இவை சின்னங்களாக மதிப்புப் பெறும். விதேச திரவியம் இவற்றிற்கு அவசியமாயிருப்பதனால் இவை விதேசப் பணிவிடை யென்று இவை பேர்பெற அவசியமில்லை. விதேச திரவியம் சுதேச சபைக்கு நன்கொடை ஈவாகும்போது, இவ்வூழியங்கள் கிறிஸ்து சபையின் பணிவிடைகள் என்றும், விதேச-சுதேச-ஐக்கிய முயற்சிகளென்றும் பேர்பெற்று இரட்சாபெருமானுக்குச் சிறந்த சாட்சிகளாய் ஜொலிக்கும். அக்காலம் சீக்கிரமாய் வர விதேச மிஷன்களும், விதேச மிஷனெரிமாரும், சுதேச சபைகளும், சுதேச சபைத்தலைவரும் ஒன்றுகூடி முயற்சிப்பதவசியம்.

அத்தியாயம் 8

தற்கால மிஷன் சரித்திரம்

1910-ம் வருஷமுதல் இதுவரையுமுள்ள காலத்தைத் "தற்காலம்" என்று குறிப்பிடுகிறோம். 1910-ம் வருஷத்தில் எடின்பரோ நகரில் மிஷனெரி மகா சபை ஒன்று கூடினது. ரோமான் சபை ஒன்று தவிர பூலோகமெங்குமுள்ள மற்றெல்லா மிஷன்களும் அதற்குப் பிரதிநிதிகளை அனுப்பின. இம்மகா சபைத் தலைவர் லோகப் பிரக்யாதி பெற்ற ஜான் மாட் என்பவர். எடின்பரோவில் கூடின அம்மகா சபையின் பலிதமாக சர்வதேச மிஷனேரி கவுன்சல் என்று பெயர் வழங்கிய ஆலோசனைக் கமிட்டி ஒன்று ஏற்பட்டது. பின்னர் ஒவ்வொரு தேசத்திலும் அந்தந்தத் தேசத்துக்குரிய தேஷீய மிஷனேரி கவுன்சல்கள் ஸ்தாபகமாயின. இந்திய தேஷீய மிஷனெரி கவுன்சல் 1912-ம் வருஷத்தில் உண்டானது. இதற்குப் பதினொரு வருஷத்துக்குப்பின், அதாவது 1923-ம் வருஷத்தில், மிஷனேரி என்ற பதத்துக்குப் பதிலாக கிறிஸ்தவ என்ற பேரை வைத்தார்கள். தேஷீய சபைப் பிரதிநிதிகளுக்கும் அவ்வாலோசனை சங்கங்களில் தகுந்த ஸ்தானம் கொடுத்ததினால், இனி தேஷீய கிறிஸ்தவக் கவுன்சல்கள் என்றழைக்கத் தீர்மானித்தார்கள். இவ்விதக் கவுன்சல்கள் இந்தியாவில் மாத்திரமல்ல, சீனா, ஜப்பான், கொரீயா, சீயம், பிலிப்பியத் தீவுகள் முதலிய தேசங்களிலும், மொத்தம் இருபத்துநாலு கவுன்சல்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அந்தந்தத் தேசத்தின் சகல கிறிஸ்தவ முயற்சிகளையும் ஒருங்குசேர்த்து, அவவை பலமாய் நடந்துவரும் வழிவகைகளை ஆய்ந்தறிந்து ஆலோசனை சொல்லுவதே தேஷீயக் கவுன்சல்களின் நோக்கம்.

இந்திய தேஷீயக் கிறிஸ்தவக் கவுன்சலார் ஆபீஸ் நாகப்பூரிலிருக்கிறது. மூன்று வருஷத்துக்கோர் முறை

மிஷன்களையும் சபைகளையுஞ் சேர்ந்த பிரதிநிதிகள் அங்கு கூடி, இந்துதேச சுவிசேஷ பிரபல்யத்துக்கு அவசரமான விஷயங்களை ஆலோசிப்பர். இக்கவுன்சல் மூலமாய்ப் பல நன்மைகள் பிறந்துள. கிராமப் பாடசாலைகள் ஸ்திதியை விசாரித்து அவற்றை முன்னேற்றத்துக்குக் கொண்டுவரும்படி ஆலோசனை சொன்ன பிரேசர் கமிஷன் இக்கவுன்சலார் ஏற்பாடே. கிறிஸ்தவ கலாசாலைகள் ஸ்திதியைப் பரீட்சித்து அவற்றை முன்னிலும் அதிகப் பிரயோஜனமாக்குவதற்கேற்ற ஆலோசனை அளித்த லின்ட்சே கமிஷனும் இவர்கள் முயற்சியால் வந்ததுதான். கிராம ஜனங்கள் கும்புகும்பாய் கிறிஸ்துமார்க்கத்திற் சேருமிடங்களைத் தரிசித்து அவ்வேலையின் நற்குறிப்புகளையும் பலவீனங்களையும் சுட்டிக்காட்டின டாக்டர் பிக்கட் என்பவரின் ஆராய்ச்சியும் இந்திய தேஷீய கிறிஸ்தவக் கவுன்சலாரின் ஆதீனத்துக்குள்ளேயே நடைபெற்றது. இவர்கள் முயற்சியினலேயே சுதேசக் கிறிஸ்தவர்கள் ஐந்துபேர் மித்திர அப்போஸ்தலராக சில வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து தேசத்துக்கு அனுப்பப்பட்டார்கள். ஐந்து வருஷ சுவிசேஷ பிரபல்ய முயற்சியைச் சபைகளெங்கும் ஆரம்பித்தது இக்கவுன்சலார் ஆலோசனையே. நம் தேசத்து மிஷன்கள் யாவும் இவ்வாறு ஒன்றுசேர்ந்து செய்யும் முயற்சிகள் தற்காலத்துக்குரிய விசேஷ குறிப்புகளில் ஒன்று.

2. பல மிஷன்கள் ஒன்றுகூடி திரவியத்தை ஒரே பண்டில் போட்டு நடப்பிக்கும் ஐக்கிய ஊழியங்களும் இக்காலத்துக்குரியவைகளே. சென்னை ஸ்திரீகள் கிறிஸ்தவ கலாசாலை, வேலூர் ஸ்திரீகள் வைத்திய கலாசாலை, லாகூர் ஸ்திரீகள் கிறிஸ்தவ கலாசாலை, மதனப்பல்லி க்ஷய ரோக ஐக்கிய வைத்தியசாலை—இதற்குத் திருஷ்டாந்தங்கள். புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும் அங்கங்கே ஸ்தாபிக்கப்படும் ஐக்கிய போதனை பயிற்சி சாலைகளும் இவ்வித பிரயத்தனங்களே. சீமை தேசத்துப் பணங்கள் குறைவதும், சர்க்கார் பாடசாலைகளும் சுயாதீனப் பாடசாலைகளும் பெருகுவதும் இவ்வித ஐக்கிய முயற்சிகளுக்கு

மூலகாரணங்கள். மிஷன்கள் நடப்பிக்கும் ஊழியங்கள் இனி வருங்காலத்தில் பெலன்கொண்டு நிற்கவேண்டுமாகில், இவ்வித ஐக்கிய முயற்சிகள் அவசியம்.

3. கடந்த முப்பது வருஷங்களின் கிறிஸ்தவ வேலையின் இன்னொரு விசேஷ லக்ஷணம் என்னவென்றால், தேசத்தின் பல பாகங்களிலும் கிறிஸ்து மார்க்கத்தை அநுசரிக்கும்படி கிராமங்களில் உண்டாகிற கூட்ட அசைவுகளே.

சுதேசக் கிறிஸ்தவர்கள் தொகை சுமார் எழுபது லக்ஷம். இதில் முக்கால்வாசிப் பேர் கூட்டம் கூட்டமாய் மார்க்கத்தைச் சேர்ந்தவர்களும் அவர்கள் பின்னடியாருமென்று ஐயமறச் சொல்லலாம். அநேக நூற்றாண்டுகளுக்குமுன் தோன்றின இவ்வித அசைவினாலேயே மலையாள தேசத்தில் கிறிஸ்தவர்கள் உண்டானார்கள். திராவிட தேசக் கடற்கரையோரத்துக் கிறிஸ்தவ சபைகள் பிரான்சிஸ் சவேரியார் காலத்தில் கூட்டங் கூட்டமாய் மார்க்கத்தை அநுசரித்தவர்களின் பின்னடியாரே. தென் திருவிதாங்கூர், திருநெல்வேலி, மதுரை ஜில்லாக்களிற் காணும் கிறிஸ்தவர்கள் சுமார் நூறு நூற்றைம்பது வருஷத்துக்குமுன் இப்பாகங்களிற் தோன்றின கூட்ட அசைவின் பலன்கள்தான். புராதன ஜனங்களாகிய மூண்டாக்கள், ஓராவனர், சாந்தாவியருக்குள் இரண்டு மூன்று தலைமுறைக்குமுன் ஆரம்பித்த கூட்ட அசைவின் பலனாகவே, இப்பொழுது அவர்களில் ஆயிரமாயிரமானபேர் கிறிஸ்தவர்கள். தெலுங்கு நாட்டிலும் பஞ்சாபிலும் ஐக்கிய மாகாணங்களிலும், திருவாங்கூரிலும் சமீபகாலத்தில் இவ்வித கூட்ட அசைவு தாழ்ந்த ஜாதி என்றெண்ணப்பட்டவர்களுக்குள் ஆரம்பித்து மேலான ஜாதிகளுக்குள்ளும் வியாபிக்கின்றது.

காரியம் இவ்வாறிருப்பினும், கடந்த முப்பது வருஷமாகத்தான் கூட்டம் கூட்டமாய் ஜனங்கள் கிறிஸ்து மார்க்கத்துக்கு வருவதின் பலாபலன்களையும், உத்தரவாதத்தையும் மிஷன்கள் சரிவர கிரஹித்தறிந்துளர்

என்று சொல்லத்தகும். தெலுங்கு, தமிழ் நாடுகளில் நடைபெறும் கூட்ட அசைவுகளின் முக்கியத்தை ஞானமாய்க் கண்டு, அவைகளுக்காக தன் எழுத்தினலும் உபந்நியாசங்களினலும் போராடினது மகா கனம் உவைட்ஹேட் அத்தியக்ஷர். சிறிது காலத்துக்குமுன், டாக்டர் பிக்கேட் என்பவர் தேஷீய கிறிஸ்தவ கவுன்சலார் ஆதீனத்துக்குள் அரும் பிரயாசத்துடன் ஆராய்ச்சி செய்து எழுதின "கிறிஸ்தவ கூட்ட அசைவுகள்" என்ற நூலினல் வந்த லாபம் மெத்த. கூட்ட அசைவுகள் உண்டாயிருக்கும் பல பாகங்களையும் அன்னவர் தரிசித்து, அவற்றின் பலாபலன்களைச் சரிவர ஆராய்ச்சி செய்து, அவற்றைப்பற்றிய தம் அபிப்பிராயத்தை இந்நூலில் வெளியிட்டிருக்கிறார். அவையாவன:—

1. ஒவ்வொருவராய்க் கிறிஸ்துவை அங்கிகரிப்பது மேல்தேச ஜாதியாருக்கு இதமான முறையாயினும், ஓர் கிராமத்திலோ, அல்லது ஓர் குலத்திலோ சேர்ந்த பலர் கூடி ஒரு கூட்டமாகக் கிறிஸ்துநாதரைக் கிட்டுவதே இந்து தேசத்தில் மிச்சமானவர்களின் சுபாவத்துக்குப் பொருந்தியது.

2. கிராமம் கிராமமாகவும் ஜாதி ஜாதியாகவும் குடியிருந்து வழக்கமுள்ளவர்களுக்கு அவரவர் கிராமத்துக்கும் அவரவர் குலத்துக்குமுரிய சிற்சில கட்டுகளே சன்மார்க்க நன்னெறியில் ஒருவாறு அவர்களைக் காப்பாற்றி வந்தது. இவ்வித பழக்கமுள்ளவர்கள் ஏகமாய்க் கிறிஸ்தவர்களாகும்போதுதான் கிறிஸ்துமத பழக்கவொழுக்கத்தில் அவர்கள் வளர்ந்தேறுவதற்கும், அதில் நிலைநிற்பதற்கும் ஏதுவுண்டாகிறது.

3. தன்னந்தனிமையாய்க் கிறிஸ்தவனுகும் ஒருவன் மிஷனெரிமார் பாதுகாப்புக்குள்ளிருந்து ஆங்கில பழக்கங்களில் வளருவது சகஜம். கூட்டமாய்த் திருச்சபையில் சேருகிறவர்களுக்கு அவ்வித சோதனை இல்லை. இவ்வாறு வருகிறவர்கள் தங்கள் பழைய தொழில் துறைகளிலேயே இன்னம் நிலைத்து, தங்கள் புராதன பழக்க

வழக்கங்களையே பின்பற்றுவதால் இந்து தேசத்துக்குரிய சுயம்பான தேஷீய சபையாக அவர்களைப் பயிற்றுவிப்பது கூடிய காரியம்.

4. தன்னந்தனிமையாய் ஒருவன் கிறிஸ்தவனாகும்போது இந்து தேசத்து வர்ணாச்சாரத்தினால் அவன் இனஜனத்தார் அவனைக் குலத்திலிருந்து தள்ளிவிடுகிறார்கள். இனி அவனுக்கும் அவன் இனஜனத்தாருக்கும் சம்பந்தமற்றுப்போவதால் தன் ஜனங்களை அவன் மார்க்கத்துக்குக் கொண்டுவரக் கூடாதவனாகிறான். கூட்டமாகக் கொஞ்சப்பேர் கிறிஸ்தவர்களானாலோ அப்படியல்ல, தங்கள் ஜனத்தின் நடுவிலேயே அவர்கள் வாசம் பண்ணுவதால் தங்கள் ஜனத்துக்கு நன்மாதிரிகளாயும் நற்சாட்சிகளாயும் விளங்குவது அவர்களுக்குக் கூடியது.

ஆயினும் திரள் ஜனம் ஜாதிஜாதியாகக் கிறிஸ்தவர்களாவதில் சில பலவீனங்கள் தலைப்படக்கூடும்.

1. சபையிற் சேரும் ஒவ்வொருவரும் தனித்தனியாய்க் கிறிஸ்துநாதரை நம்பிப் பற்றியிருக்கிறார்களாவென்று பார்ப்பது கஷ்டம். ஆனதுபற்றி, ஓர் கூட்டத்தார் கிறிஸ்தவர்களாகச் சம்மதிக்கும்போது, அவர்களைப் பரீட்சையில் வைத்து, அவர்களை வெகு சிரத்தையாய்ப் பயிற்றுவித்து, ஒவ்வொருவரும் விக்கிரக பூஜையைப் பூராவாய் ஒழித்துவிட்டார்களோவென்றும், கிறிஸ்துநாதர் புண்ணிய பெலத்தால் தங்கள் பூர்வ பாவவழிகளை அவர்கள் விட்டு மனந்திரும்பியிருக்கிறார்களோவென்றும், குடும்பம் குடும்பமாகவும் தனித்தனியாயும் அவர்கள் வாழ்க்கை மாறுதலடைந்திருக்கிறதோவென்றும் பரீட்சிப்பது அவசியம்.

2. ஜாதிக்கட்டு சபைக்குள் நிலைப்பதும் கூடிய காரியம். தன் இனத்தையும் ஜனத்தையும் விட்டுப் பிரிந்து தனிமையாய்க் கிறிஸ்தவர்களாகிறவர்கள் தங்கள் குலப்பற்றுகளை விட்டுக் கட்டாயம் பிரியவேண்டியதுதான். கூட்டமாய்ச் சிலர் ஒரே வகுப்பிலிருந்து வரும்போதோ இவ்வவசியம் அவர்களுக்கில்லை. அதினால் இப்படிப்பட்ட

வர்கள் தங்கள் தங்கள் பிரிவாருடனேயே புழங்கிக்கொள்வதும் போஜனம் செய்வதும் விவாக சம்பந்தம் வைத்துக்கொள்வதும் இயற்கை. சபையின் தலைவர்கள் இதைக் கவனித்து, தேவாலயம், ஆராதனை, சாக்கிரமெந்துக்கள், போதகன்மார் முதலிய விஷயங்களில் கிறிஸ்தவர்கள் எள்ளளவேனும் குலபேதம் பாராட்டாதபடி விழிப்பாயிருக்கவேண்டும்.

3. கூட்ட அசைவினால் கிறிஸ்தவர்களான பாகங்களில் இரண்டாம் மூன்றாந் தலைமுறையாரைப் பக்தியில் பயிற்சிக்காவிடில் பேர்க்கிறிஸ்தவர்களே பெருகிப் போகக்கூடும். முதலாந் தலைமுறையார் கிறிஸ்துமதச் சத்தியத்தை விசாரித்தறிந்து விசுவாசிகளானவர்கள். அவர்கள் பிள்ளைகளோ அப்படியல்ல. ஆதலின், சிறுவரைப் பக்தியில் வளர்க்கும் பிரயத்தனங்களை விடாது வழங்குவதவசியம். சிறுவர் பக்தியைக் கவனியாது விட்டால், திருச்சபைக்குப் பெருத்த நஷ்டமுண்டாகும்.

4. ஏதாமொரு சமயத்தில் ஒரு கூட்டத்தில் அசைவுண்டாகி பலர் கிறிஸ்தவர்களானபின், அச்சமயத்தில் கிறிஸ்தவர்களாகாதவர்கள், பின்னால் கடினங்கொண்டு பூர்வ ஸ்திதியிலேயே உரங்கொண்டுபோவது கூடிய காரியம். முன்னொருகாலத்தில் கிறிஸ்துமார்க்கத்துக்குக் கூட்டம்கூட்டமாய் வந்த அதே வகுப்பாரில் இன்னம் கிறிஸ்தவர்களாகாதவர்கள் லக்ஷக்கணக்காயுண்டென்று டாக்டர் பிக்கட் சொல்லுகிறார். தெலுங்கு தேசத்தில் இன்னம் கிறிஸ்தவர்களாகாத $4\frac{1}{2}$ லக்ஷம் மாளமாதிகர் உண்டு. சோட்ட நாகப்பூரில் $3\frac{1}{2}$ லக்ஷம் ஓரானர், மூண்டவர் முதலிய புராதன ஜனங்கள் உளர். தமிழ் நாட்டிலும் அவ்வாறே லக்ஷக்கணக்கான பஞ்சமர், மறவர், நாடார்கள் இன்னும் கிறிஸ்தவர்களாகவில்லை.

மேலே கண்ட விஷயங்களைக் கவனிக்குங்கால், இதுவரை கிறிஸ்துமத அநுசாரிகளானோர் நடுவில் இன்னஞ் செய்யவேண்டிய ஊழியம் அதிகமென்பது தெளிவு. இனி கிறிஸ்துவின் ராஜ்யம் பரம்புவது இப்பொழுது கிறிஸ்தவர்களென்று பேர் பெற்றோரது பக்திக்கும் சாட்சியத்

துக்கும் தக்கபடித்தானிருக்கும். ஆனதுபற்றி, பழைய கிறிஸ்தவ சபைகளுக்கவசியமான போதனுபதேசம், பாலியர் பயிற்சி, சபைசிக்ஷை முதலியவற்றைச் சிரத்தையுடன் நடத்துவதற்கவசியமான குருவிசாரணை ஏற்படுவது இன்றியமையா அவசியம். இவற்றை அலக்ஷியம் செய்வோமாகில் கிறிஸ்துசபை விருத்தியாவது அரிது.

5. தெலுங்கு நாட்டில் சிறிது காலமாய்த் தோன்றும் இன்னொரு பலாபலனை இங்கு சொல்லுவது தகுதி. பஞ்சமர் எனப்படுவோர் நடுவில் நல்வேலைசெய்து, அவர்களில் கிறிஸ்தவர்களானோருக்குச் சிரத்தையாய் மார்க்க போதனை யளித்து, அவர்கள் நடக்கையைக் கவனமாய்த் திருத்தி, திருச்சபையில் அவர்களை உத்தம அங்கங்களாய்ப் பயிற்சிக்கும் பாகங்களில், கிறிஸ்தவர்கள் திருஷ்டாந்தமே உயர்ந்த ஜாதிகளைக் கிறிஸ்துவினிடம் இழுக்குங் கருவியாய் விளங்குகின்றது. இவ்வாறு சுமார் 40,000 உயர்குலத்தோர் இருபது முப்பது வெவ்வேறு குலத்திலிருந்து கிறிஸ்தவர்களாகியிருக்கிறார்கள். நீங்கள் எது காரணத்தினால் கிறிஸ்து மார்க்கத்தை விரும்பி வந்தீர்களென இவர்களைக் கேட்டால்: பஞ்சமக் கிறிஸ்தவர்களிற் காணும் ஜீவிய மாறுதலால் என்போர் அநேகர்; கிறிஸ்தவர்கள் அளித்த சுவிசேஷப் பிரதிகளால் என்போர் சிலர்; கிறிஸ்தவப் பாடசாலையில் கற்ற கல்வியினால் என்போர் வேறு சிலர்; மிஷன் ஆஸ்பத்திரிகளில் பெற்ற நன்மையினால் என்று விடை பகருவோர் சிலர்; முதற்காரணம் சொல்லுகிறவர்களே ஏராளம். உயர்குலத்தோரான கிறிஸ்தவர்களிருந்த 187 கிராமங்களை டாக்டர் பிக்கட் தரிசித்தபோது, இவற்றில் 170 கிராமங்களில் பஞ்சம குலங்களிலிருந்து வந்த கிறிஸ்துசபை ஏற்கனவே இருந்திருந்ததாகக் கண்டார். பழைய கிறிஸ்தவர்களில்லாத இடங்களில் உயர்குலத்தோர் கிறிஸ்தவர்களாவது அபூர்வம்.

"உயர்குலத்தோர்" என்பதில் இருபது முப்பது குலத்தோர் அட[illegible]கியிருக்கின்றனரென்றோம். அதிகமானவர்கள் ஒட்ட[illegible] குறவர் முதலியவர்கள்: அதற்கப்பால்

ஏனாதிகள், இடையர், செட்டிமார். இவர்களை ஏற்றவிதமாய்த் தற்காலத்தில் பயிற்றுவித்தால் இவர்கள் பலத்த சுவிசேஷப் பிரசங்கிகளாவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

தமிழ் நாட்டில் இவ்வித அசைவு இன்னம் தோன்றவில்லை. காரணமென்ன? இதுவரைக்கும் சபையிற்சேர்ந்த ஏழைக் கிறிஸ்தவர்களைப் பக்தியிலும் அறிவிலும் சரிவரப் பயிற்றுவிக்காதது ஒரு காரணமாயிருக்குமோ? பழைய கிறிஸ்தவர்கள் இதுவிஷயத்தில் சிரத்தை எடுத்துக் கொள்ளாதது இன்னொரு காரணமோ? சுயநயம் சபைகளை மேலிட்டதினால் சுவிசேஷப் பிரபல்ய வாஞ்சை குன்றினதோ? காரணம் எதுவானாலுஞ்சரி, சகல குலத்தவரும் தம்மண்டை வரவேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். தெலுங்கு நாட்டில் நடைபெறும் அசைவு தமிழ் நாட்டிலும் உண்டாவது கூடும். அதற்காக ஜெபித்து உழைப்பது கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவர் மேலும் விழுந்த கடமை.

அத்தியாயம் 9

இந்துதேசக் கிறிஸ்தவ சபை

முந்தின அத்தியாயங்களிற் கண்ட சுவிசேஷ முயற்சியினால் வந்திருக்கும் கைகண்ட பலன் என்னவெனில், இந்துதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கிறிஸ்தவ சபையே. இச்சபையின் பரிசுத்தம், தேற்சி, சுவிசேஷ வாஞ்சை இவைகளே இத்தேசம் கிறிஸ்துவின் ராஜ்யமாவதற்கு பலத்த கருவிகள்.

"இந்துதேச சபை" என்றோம். ஐயோ! அப்படிப்பட்ட ஒரே சபை கிடையாது. ஒருமையிலல்ல, பன்மையிலேயே சொல்லவேண்டியதாயிற்று. நமக்குச் சுவிசேஷ செய்தியைக் கொண்டுவந்த மிஷனெரிமாருடைய சுய தேசங்களில் எத்தனை சபைப் பிரிவினைகளுண்டோ அத்தனை சபைப் பிரிவுகளும் நம் தேசத்திலுண்டு. "இந்திய சபை" என்று நாம் சொல்லும்போது, இந்து தேசம் முழுவதிலும் இவ்வாறு ஸ்தாபகமாயிருக்கும் சபைகளில் சேர்ந்துள்ள சுதேச கிறிஸ்தவக் கூட்டமனைத்தையும் சேர்த்து சொல் வசதிக்காக இந்திய கிறிஸ்தவ சபை என்கிறோம்.

இச்சபையில் தற்சமயம் சுமார் எழுபது லக்ஷம் பேருண்டு. இந்த எழுபது லக்ஷம் பேர் இத்தேசத்திலுள்ள மூவாயிரத்து எண்ணூறு லக்ஷம் இதர மதஸ்தருக்குள் எம்மாத்திரம்! எனினும், பிசைந்த மாவுக்குள் வைக்கப்பட்ட புளித்தமாப்போலவும், முள்ளில் தோன்றும் ரோஜா புஷ்பம்போலவும், சேற்றில் ஜொலிக்கும் தாமரைபோலவும் இப்பிரமாண்ட தேசத்தில் இது விளங்குகிறது. இது கிறிஸ்துவின் சரீரம்; ஆவியானவர் இதில் வாசம்பண்ணுகிறார். இந்தியா முழுவதையும் புளிப்பாக்கவேண்டிய புளித்தமா இதுவே. தெய்வப் பிரகாசம் பெற்று, ஜீவஒளியாய் இலங்கவேண்டிய சந்திர ஜோதி இதுவே. இது ஒரே இந்திய சபையாயில்லாதிருப்பது துக்கம், நஷ்டம், பலவீனம்.

இச்சபையைப்பற்றிய சில குறிப்புகளை இங்கு எடுத்துரைப்போம்.

1. **கிறிஸ்தவர்கள் தொகை.—1931-ம் வருஷ ஜனசங்கைப்படி** கிறிஸ்தவர்கள் மொத்தம் 62,96,763 பேர். இவர்களில் 27,68,598 பேர் ரோமான் சபையார். 5,25,607 பேர் சூரியானிச் சபைகளைச் சேர்ந்தவர்கள். மீதிப்பேர், அதாவது 30,02,588 பேர் மற்ற சீர்திருத்த சபைகளைச் சேர்ந்துளோர்.

இதில் சுதேசக் கிறிஸ்தவர்கள் மொத்தத் தொகை அறுபது லக்ஷம். இவர்களில் மூன்றில் இரண்டுபாகத்தார் சென்னை ராஜதானி, ஐதராபாத், மைசூர் ராஜ்யங்களிலுண்டு. திருவாங்கூர் ராஜ்யத்தின் ஜனத்தொகையில் மூன்றிலொரு பங்குப் பேர் கிறிஸ்தவர்கள். குண்டூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் ஒன்பதிலொருவர் கிறிஸ்தவர்.

இச்சபையின் வளர்ச்சி கவனிக்கப்படத்தக்கது. பத்து வருஷத்துக்கோர்முறை எடுக்கும் ஜனசங்கைக் கணக்கைப் பார்க்கின், கிறிஸ்தவர்கள் ஜனசங்கைக்கு ஜனசங்கை பெருகிக்கொண்டே வருகிறார்களென விளங்கும்.

1872-ல்	தொகை	15,06,098			
1881-ல்	,,	18,62,634	100 க்கு	22	வீதம் ஜாஸ்தி
1891-ல்	,,	22,84,380	,,	22	,,
1901-ல்	,,	29,23,241	,,	32	,,
1911-ல்	,,	38,76,203	,,	32	,,
1921-ல்	,,	47,54,064	,,	22½	,,
1931-ல்	,,	62,96,763	,,	34	,,

சுதேசக் கிறிஸ்தவர்களை மட்டும் கணக்கிட்டால், 1872-ல் சுதேசக் கிறிஸ்தவர்கள் தொகை 12,46,288. 1931-ல் சுமார் 60 லக்ஷம்; அதாவது அறுபது வருஷத்தில் கிறிஸ்தவர்கள் ஐந்து மடங்கு பெருகியிருக்கின்றனர்.

கடந்த பத்து வருஷத்தில் கிறிஸ்தவர்களே மற்றநேக வகுப்புகளைப் பார்க்கிலும் அதிகமாய்ப் பெருகியிருப்பதாகக் காணப்படுகிறது.

ஹிந்துக்கள்	100-க்கு	$10\frac{1}{2}$	ஜாஸ்தி
மகம்மதியர்	,,	13	,,
புத்தர்	,,	$10\frac{1}{2}$	,,
கிறிஸ்தவர்கள்	,,	$32\frac{1}{2}$	,,

கிறிஸ்துமார்க்கம் ஜீவனுள்ளதென்பதற்கும், அது நாளடைவில் ஜெயமடைந்து வருகிறதென்பதற்கும் இது ஒரு அத்தாட்சி.

1931-ம் வருஷத்துக்கு முந்தின பத்து வருஷத்தில் அதிக ஜாஸ்தியான வளர்ச்சி ஐதராபாத் சமஸ்தானத்தில் 100-க்கு $141\frac{1}{2}$ வீதம். அப்பால் அஸ்ஸாம் 100-க்கு $88\frac{3}{4}$ வீதம். திருவாங்கூர் 100-க்கு $36\frac{3}{4}$ வீதமும், சென்னை 30 வீதமும் பெருகியிருக்கின்றன.

2. கிறிஸ்தவர்கள் கல்வி அபிவிருத்தி.—கணக்கின்படி கிறிஸ்தவர்கள் தொகை சொற்பமாயினும், கல்வியில் இவர்கள் பின்னே நிற்பவர்களன்று. அறுபது லக்ஷம் சுதேசக் கிறிஸ்தவர்களில் சுமார் பத்துலக்ஷம் பேர் வாசிக்கக்கூடியவர்கள். அதாவது நூற்றுக்குப் பதினெட்டு வீதம். ஹிந்துக்கள், இஸ்லாமியர், சீக்கியர்களைப் பார்க்கிலும் கிறிஸ்தவர்கள் வித்யாபிவிருத்தி அதிகம். வாசிப்பறிந்த கிறிஸ்தவர்களில் 100-க்கு 14 பேர் இங்கிலீஷ் கற்றவர்கள். ஸ்திரீகள் கல்வியில் பார்சீகள் தவிர, மற்றெல்லா வகுப்பினரிலும் கிறிஸ்தவ ஸ்திரீகளே முன்னுக்கு நிற்பவர்கள். சென்னை ராஜதானியில் 100-க்கு 22 சுதேச கிறிஸ்தவ புருஷரும், 11 சுதேச கிறிஸ்தவ ஸ்திரீகளும் கற்றவர்கள்; சுதேச கிறிஸ்தவ ஸ்திரீகள் ஆயிரம் பேரில் 29 பேர் இங்கிலீஷ் அறிந்தவர்கள்; ஹிந்துக்கள் மகம்மதியரில் ஆயிரத்துக்கொருவரே.

கடவுள் கிறிஸ்தவர்களுக்குக் கொடுத்திருக்கும் இக்கல்வி இத்தேச பொதுஜன நன்மைக்கென்று நாம் உப

யோகிக்கவேண்டிய தாலந்து. நாம் அவ்வாறு பிரயோஜனமாயிருக்க இப்பொழுதே ஆரம்பித்திருக்கிறோமென்று இரண்டொரு குறிப்பினால் நிதானிக்கலாம். கிறிஸ்தவர்கள் தொகை மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு $1\frac{1}{2}$ யாயிருந்தபோதிலும், இத்தேசத்துப் பாடசாலை உபாத்திமாரில் நூற்றுக்கு ஏழுபேர் கிறிஸ்தவர்களென்று தெரிகிறது. விஸ்தாரமான நம் தேசத்தில் வாசிப்பறியாத லக்ஷாதிலக்ஷம் பேருக்குக் கல்வி புகட்டும் ஊழியத்தில் நாம் இவ்வாறு முன்னுக்கு நிற்பது சந்தோஷம். இன்னு மதிகமாய் முன்னேற இடமுண்டு. கிறிஸ்தவ புருஷரும் ஸ்திரீகளும் போதனா பயிற்சியடைந்து, தேசமெங்கும் மிஷன் பாடசாலைகளிலோ, சர்க்கார் பள்ளிக்கூடங்களிலோ, சுயாதீன பாடசாலைகளிலோ சிரத்தையோடும் ஆசையோடும் பாலியருக்கு அறிவைப் புகட்டுவார்களாகில், நம் தேசத்தாருக்குப் பெருத்த சேவை செய்கிறவர்களாவோம்.

3. தேச அரசாட்சியில் கிறிஸ்தவர்கள் ஸ்தானம்.—கிறிஸ்தவர்கள் தங்கள் மதத்தின் தன்மையினாலும் பால்யப் பயிற்சியினாலும் தேச அரசாட்சியில் மிக்கப் பிரயோஜனமாயிருக்கக்கூடியவர்கள். பல வகுப்புகளாய்ப் பிரிவுபட்டிருக்கும் பிரஜைகள் நடுவில் கிறிஸ்தவர்கள் பொது ஸ்தானத்தில் நின்று, அனைவரையும் சமமாய் நடத்தக்கூடியவர்கள்; ஹிந்துக்களுக்கும் இஸ்லாமியருக்கும் ஒன்றுபோல நீதிசெலுத்தக்கூடியவர்கள். ஐரோப்பிய ஒழுங்கின்படி ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலைகளில் பெரும்பான்மையோர் வசித்துப் புசித்துப் பயிற்சியடைந்திருப்பதால், நானாவிஷயத்திலும் தக்க கிரமசிக்ஷையடைந்தவர்கள். ஆனதுபற்றி, சர்வகலாசாலைக் கல்வி கற்ற கிறிஸ்தவ வாலிபர் சர்க்கார் உத்தியோகங்களில் உத்தம ஊழியஞ்செய்யவேண்டியவர்கள். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. சிறிதுகாலத்துக்கு முன் தென் இந்தியாவிலுள்ள கிறிஸ்தவ சபைகளைப் பார்த்துப் பேசின ஐரோப்பியரான ஓர் கலெக்டர்: உத்தமரும் திறமையுள்ளவர்களுமான அநேக உத்தியோ

கஸ்தரை நீங்கள் சர்க்கார் உத்தியோகங்களுக்கும் இதர பொது வேலைகளுக்கும் கொடுத்திருக்கிறீர்கள்; அவர்கள் அங்கங்கே சிரத்தையுடன் தேச நன்மைக்காக உழைத்து வருகிறார்கள் என்று பகிரங்கமாய்ச் சாட்சி பகர்ந்தார். பல முனிசிப்பாலிட்டிகளுக்குக் கிறிஸ்தவர்கள் முக்கிய உத்தியோகஸ்தராயிருப்பதும், சில பெருத்த ஜமீன் சமஸ்தானங்களின்மீது கிறிஸ்தவர்கள் திவான்களாக நியமுகம் பெற்றிருப்பதும் இதற்குச் சாட்சி. காரியம் இவ்வாறிருப்பதால், கலாசாலை வித்தையில் தேறின கிறிஸ்தவர்களான வாலிபர் மிஷன் வேலையில் மாத்திரமல்ல, எந்த வேலையிலும் உத்தம பக்தராய் நடந்து, கிறிஸ்துவை மகிமைப்படுத்தக் கடன்பட்டிருக்கிறார்கள்.

4. கிறிஸ்து சபையின் ஆளுகை ஏற்பாடு.—கடந்த முப்பது வருஷமாய் இந்துதேச சபையில் உண்டாயிருக்கும் ஓர் பெரிய மாறுதல் என்னவெனில், சபை ஆட்சி இத்தேசத்திலேயே நிர்மாணிக்கப்படுவது. சபைகளல்ல, பெரும்பாலும் மிஷன்களே பூர்வகாலத்தில் சபை ஆளுகை செய்துவந்தன. மிஷன்களோ இந்தியாவிலல்ல, அவைகளை எந்தெந்தத் தேசத்துச் சபைகள் அனுப்பினவோ அந்தந்தத் தூரதேசச் சபைகளாலேயே ஆளப்பட்டன. இப்பொழுதோ வரவர இந்துதேசச் சபைகளில் பலவற்றிற்குச் சுயாதிபத்தியம் ஏற்பட்டிருக்கிறது.

1907-ம் வருஷத்தில் பிரஸ்பித்தர் ஆளுகைக்குள்ளும் சங்க ஆளுகைக்குள்ளும் ஆரம்பமுதல் வளர்க்கப்பட்ட சபைகள் ஒன்றுசேர்ந்து தென் இந்தியா ஐக்கிய சபையை நிர்மாணித்தார்கள். லண்டன் மிஷன், அமெரிக்கன் மதுரை மிஷன், ஸ்கொத்லாந்து சபை மிஷன், அமெரிக்கன் சீர்திருத்த பிரஸ்பிற்றீரியன் மிஷன் என்பவைகள் இதின் அங்கங்கள். மலையாளத்திலுள்ள பாசல் மிஷனும் இதிற் சேர்ந்துள்ளது. இக்கூட்டத்தாரை மேல் விசாரணை செய்யும் மஹாசபைக்கு ஜெனரல் அஸெம்ளி என்று பேர். இம்மஹா சபை இரண்டு வருஷத்துக் கோர்முறை கூடும். இதின் தலைவருக்கு மாடரேட்டர் என்று பேர்.

இந்திய கிறிஸ்தவர் பலர் இம்மேலான உத்தியோகத்திற்குப் பலதடவைகளிலும் தெரிந்துகொள்ளப்பட்டதுண்டு. இச்சபையின் தொகை 1940-ம் வருஷத்தில், 2,87,000. இவர்களில் 53,000 பேர் ராப்போஜனம் சேர்ந்தவர்கள். இவர்களை மேய்க்கும் போதகன்மார் தொகை 239.

இதற்கு இணையான வடஇந்தியா ஐக்கிய சபையும் ஒன்றுண்டு. அமெரிக்கா, ஸ்கொத்லாந்து, கானடா, ஆஸ்திரேலியா தேசங்களிலிருந்து வந்த பற்பல பிரஸ்பிற்றீரியன் மிஷன்களிலுள்ள சுதேச கிறிஸ்தவர்களனைவரும் இச்சபையைச் சேர்ந்தவர்கள். இது 1924-ம் வருஷத்தில் இவ்வாறு ஸ்தாபிக்கப்பட்டது. 1931-ம் வருஷத்தில் இச்சபையின் தொகை 1,45,572. இவர்களைப் போஷிக்கும் குருமார் 444 பேர். இச்சபையின் முதல் மாடரேட்டர் (தலைவர்) ஓர் சுதேச பெருமான்.

சுவிசேஷ லூதரன் இந்திய சபைகளின் ஐக்கியம் 1926-ம் வருஷத்தில் உண்டானது. லூதரன் சபைகளிற் காணும் நற்குறிப்புகளை இந்து தேச சபைகளுக்காகப் பாதுகாப்பதும், லூதரன் சபைகளனைத்துக்குமுரிய ஆவிக்குரிய ஒற்றுமையை வெளிப்படக் காட்டுவதுமே இவ்வைக்கியத்தின் நோக்கம். தமிழ், ஆந்திரா, சந்தாலியா, காஸ்னர், ஜெய்ப்பூர், டேனிஷ் சுவிசேஷ லூதரன் சபைகள் இவ்வைக்கியத்தின் அங்கங்கள்.

இந்துதேச மெங்குமுள்ள அங்கிலேய சபைகள் 1927-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேச சபை ஆளுகையினின்று சுயாதீனம் பெற்று, இந்தியா, பர்மா, இலங்கை திருச்சபை என்ற பேர் தரிக்கப்பெற்றன. 1930-ம் வருஷம் மார்ச்சு மாதம் 1-ம் தேதி முதல் இவ்வேற்பாடு ஊர்ஜிதத்துக்கு வந்தது. இதற்குமுன், இத்தேசத்தில் ஓர் அத்தியக்ஷரை அபிஷேகம்பண்ணவேண்டுமென்றாலும், ஓர் அத்தியக்ஷ கண்டத்தின் எல்லைகளை மாற்றவேண்டுமானாலும், ஓர் புதுக் கண்டத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்றாலும் பிரிட்டிஷ் பார்லமெந்தென்னும் மகா சபையிடம் அநுமதிபெறாமல் செய்ய முடியாது. இப்போதோ இவையனைத்தையும் இந்தியா பர்மா இலங்கை திருச்

சபையின் மஹா சபை செய்யக்கூடும். இங்கிலீஷ் ஜெப புஸ்தகமே இதற்குமுன் இந்தியாவுக்கும் ஜெப புஸ்தகம். அப்புஸ்தகத்திலுள்ள ஒரு ஜெபத்தைக் கூட்டவாவது குறைக்கவாவது இந்தியாவிலுள்ளவர்களுக்கு அதிகாரமில்லை. இப்போதோ, இந்துதேச அத்தியக்ஷர்களும் பிரதிநிதிகளும் கூடின மஹா சபையார் இத்தேசத்து அவசியத்துக்குத்தக்கபடி ஜெப புஸ்தகத்தைப் புதுப்பிக்கலாம். இச்சபையில் இப்போது (1937-ம் வருஷத்தில்) பதினாலு அத்தியக்ஷ கண்டங்களும் கண்ட அத்தியக்ஷர்களுமுளர். இவர்களில் ஒருவர் சுதேசி. மூன்று கண்டங்களுக்கு உப அத்தியக்ஷர்கள் மூவர் உளர். இவர்களில் இருவர் சுதேசிகள். 1940-ம் வருஷத்தில் இந்தியா முழுவதிலும் இச்சபை அங்கத்தார் தொகை 8,72,000 குருமார் 1151 பேர்.

5. சுதேச கிறிஸ்தவர்கள் தலைமை வஹித்தல்.—மேலே கண்டபடி கடந்த முப்பது வருஷங்களிலும் சுதேசிகள் பலர் தேஷீய சபைகளில் முக்கிய உத்தியோகம் வஹித்து வந்திருக்கின்றனர். 1912-ம் வருஷத்தில் தேஷீய மிஷனெரி கவுன்சல் முதல் முதல் கூடினபோதே இது வற்புறுத்தப்பட்டது. "எங்கெங்கே பக்தரும் திறமைசாலிகளுமான சுதேச புருஷர் ஸ்திரீகள் உண்டோ, அங்கெல்லாம் அப்படிப்பட்டவர்களுக்கு ஐரோப்பிய மிஷனெரிமாருக்குச் சமானமான உத்தரவாதமும் ஸ்தானமும் அளிக்கும்படி சபைகளும் மிஷன்களும் ஜாக்ரதையாயிருக்கவேண்டும்; புறதேச மிஷனெரி சங்கங்கள் நடத்தும் பணிவிடைகளனைத்தையும் நாளடைவில் சுதேச சபைகளுக்குக் கையளிக்கவேண்டும். இவ்வித மாறுதல்கள் தகுந்தவிதமாய் நிறைவேறத்தக்கதாக மிஷன் ஏற்பாடுகளையும் சட்டதிட்டங்களையும் மாற்றுவது அவசியமாகில்மாற்றிக்கொள்ளவேண்டும்" என்று அச்சமயத்தில் தீர்மானித்தார்கள்.

கடந்த முப்பது வருஷத்தில் மேற்கண்ட தீர்மானத்துக்கிசைய பல மாறுதல்கள் தேசமெங்கும் நடைபெற்றுள. முன் ஐரோப்பிய மிஷனெரிமார் கைக்குள்ளிருந்த பகுதிகள் பல இப்பொழுது திறமையுள்ள

சுதேசிகள் கைவசம் ஒப்புவிக்கப் பெற்றிருக்கின்றன. முன் ஐரோப்பியர் தலைவராயிருந்த உயர்தரப் பாடசாலைகளில் இப்பொழுது சுதேசிகள் தலைவராயிருக்கின்றனர். முன் ஐரோப்பிய டாக்டர்கள் தலைவராயிருந்து நடத்தின மிஷன் வைத்தியசாலைகளிற் சில நாளடைவில் சுதேச கிறிஸ்தவ டாக்டர்கள் மேற்பார்வைக்கு வந்திருக்கின்றன. "சூப்பிராண்டு மிஷனெரி" என்ற பேரே பல மிஷன்களிலும் இப்போது போய்விட்டது. அதற்குப் பதிலாகச் சிறு சிறு பகுதிகள்மேல் இப்போது சுதேச குருமாரே விசாரணைக் குருக்களாயிருக்கின்றனர். இவ்வாறு நவீன உத்தரவாதம் பெற்றவர்கள் பெரும்பாலும் தங்கள் கடமைகளை உண்மையோடும் நம்பிக்கையோடும் நிறைவேற்றிவருகிறார்களெனத்தகும். பணக்கணக்கு வைப்பதிலும், வேலையை அபிவிருத்தி செய்வதிலும், தங்கள் கையின் கீழுள்ள சகாயர்களைச் சிரத்தையுடன் மேற்பார்வை செய்வதிலும் அநேக சுதேசத் தலைவர் ஐரோப்பியருக்குத் தாழ்ந்தவர்களல்லவென்று நிரூபித்திருக்கிறார்கள்.

இவ்விதத் தலைவர் இன்னம் அநேகர் தேவை. கடவுள் அவர்களை எழுப்புவாராக! மிஷன்களும் சபைகளும் இன்னம் அதிகத் தைரியமாய்ச் சுதேசிகளுக்கு உத்தரவாதத்தைக் கொடுக்க ஒழுங்கு செய்வதவசியம். உத்தரவாதமின்றி உத்தமம் வெளிப்படாது. நம்பிக்கை நம்பிக்கையைப் பிறப்பிக்கும். பொறுப்பைச் சுதேசிகள்மேல் ஏற்றும்போதுதான் அப்பொறுப்பை நிறைவேற்ற பெலனை அவர்கள் தேடுவார்கள்; பொறுப்பை நிறைவேற்றுவதில் சமர்த்தராவார்கள்; வேலைகளை முன்னின்று நடத்த தைரியங்கொள்வார்கள்; மென்மேலும் அதிகப் பொறுப்பைப் பெறப் பாத்திரராவார்கள்.

இது நம் தேசத்தில் சுதேசிகள் மூப்புக் காலம். கிறிஸ்து சபை இத்தேசத்துக்குரியதென்றும், சுவிசேஷ பிரபல்ய வேலையை இத்தேசத்தவர்களே முன்னின்று நடத்துகிறார்களென்றும் சுதேச அதிகாரிகள் காணும் போது இவ்வேலைக்குத் தடை செய்யத் துணியார்கள்.

ஆகையால், மிஷன்களும் சபைகளும் விசேஷித்த ஜாக்ரதையுடன் சகலத்தையும் ஆய்ந்தறிந்து, கிறிஸ்து மார்க்கம் இந்துதேச மதங்களிலொன்றென்றும், கிறிஸ்துமத ஊழியங்கள் சுதேசிகள் தலைமைக்குட்பட்டு நடைபெறுகின்றனவென்றும், கிறிஸ்துமத வியாபகம் ஐரோப்பியரால்ல இத்தேசத்தவர்களாலேயே கொண்டுசெலுத்தப்படுகிறதென்றும், ஐரோப்பியர் சுதேசிகளுக்குச் சகாயஞ் செய்கிறவர்களே யொழிய, சுதேசிகள் ஐரோப்பியருக்கு ஏஜன்டுகளல்லவென்றும் யாவரும் அறியத்தக்கதாக மிஷன் ஏற்பாடுகளைக் கிரமப்படுத்துவது அத்தியாவசியம்.

6. கிறிஸ்தவர்களும் சுவிசேஷ வேலையும்.—இந்துதேசத்தைக் கிறிஸ்துநாதர் பாதத்தண்டை கொண்டுவரும் வேலையில் கிறிஸ்தவர்கள் வர வர அதிக சிரத்தை எடுத்துக்கொள்ளுவதும் இக்காலத்துக்குரிய விசேஷம்.

சுவிசேஷ ஊழியம் முதல் முதல் விதேச மிஷனெரிமாரால் நடத்தப்படுவது இயல்பு. இச்சுபவர்த்தமானம் ஆரம்பத்தில் அவர்களால் கூறி அறிவிக்கப்படும்போது, கேட்போர் அவ்வார்த்தையை மாத்திரம் நிதானிப்பர். கொஞ்சப்பேர் விசுவாசித்தபின்போ, பிரசங்கிக்கப்படும் வார்த்தையை மாத்திரமல்ல அதைப் பின்பற்றின கிறிஸ்தவர்களையும் நிதானித்தறிவர். சுவிசேஷம் இனி ஜெயங்கொள்ளவேண்டுமாகில், தேவ வாக்கிய போதனை மாத்திரமல்ல, அவ்வாக்கியத்தை அங்கீகரித்தவர்கள் நடக்கையும் முக்கியாவசியம். ஆதலின் கிறிஸ்தவர்கள் தொகை அதிகமாக ஆக, கிறிஸ்தவர்கள் திருஷ்டாந்தத்துக்குத்தக்கதாகவே வசனத்தின் வல்லமை பலிக்கும். மேலும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் கடமை இப்புது சபைக்குமுரிய கடமையே. ஆரம்ப முதல் கிறிஸ்தவர்கள் இக்கடமையை உணருவார்களாகில், இவர்களே சுவிசேஷ வேலைக்குப் பெரிய சாதனமாவார்கள்.

கிறிஸ்தவர்கள் வேலை மூன்றுவிதமாயுள்ளது.

1. கிறிஸ்தவர்கள் ஜீவிய சாட்சி. — கிறிஸ்து சபை நமது தேசத்தில் வளர்ந்து பெருகுகிறதெங்கே யென்று

விசாரிப்பின், கிறிஸ்தவர்கள் ஜீவிய மாறுதல் எங்கெங்கே பிரத்தியட்சமாயிருக்கிறதோ அங்கங்கேயே யென்று சந்தேகமறச் சொல்லலாம். திருவாங்கூரும் தெலுங்கு நாடும் இதற்குத் திருஷ்டாந்தங்கள். கீழ் ஜாதியாரெனப் படுவோர் கிறிஸ்துவை அங்கீகரித்து அவரால் புது ஜீவனடையும்போது அந்த ஜீவன் வெளியரங்கமாய்ப் பலன் செய்யாமலிருக்கமாட்டாது. ஆகவே, கிறிஸ்தவர்களாகச் சிலரைச் சேர்த்தவுடன், அவர்களைக் கிறிஸ்தவ நடக்கையிலும் வணக்கத்திலும் விசுவாசத்திலும் வளர்க்கவேண்டியது தேவ ஊழியர் கடமை. இவ்விதமாய் வளர்க்கும் பிரயத்தனங்கள் செய்யாதுவிட்ட இடங்களில் சுவிசேஷம் அப்பால் பரம்புவது அசாத்தியம்.

கிறிஸ்தவர்கள் ஜீவியம், ஒன்று புறமதஸ்தரைக் கிறிஸ்துவண்டை இழுக்கும், அல்லது கிறிஸ்துவினிடமிருந்து துரத்தும். பம்பாய் ராஜதானிப் பஞ்சமர் தலைவர் கிறிஸ்து மார்க்கத்தைப்பற்றிப் பேசுமிடத்தில்: எங்கள் ஜனங்களுக்குக் கிறிஸ்து மார்க்கத்தின்மீது அதிகப் பிரீதியுண்டு; ஆனால் கிறிஸ்தவர்களுடைய சுயநயத்தைப் பார்த்து பின்வாங்குகிறார்கள். கிறிஸ்து மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் ஜனங்களின் முன்னேற்றத்திற்காக ஒரு பிரயத்தனமும் செய்கிறதில்லை. தாங்களும் தங்கள் பிள்ளைகளும் முன்னேறும்படி முயற்சிக்கிறார்களேயன்றி வேறல்ல என்று முறையிட்டார். மேலும் பல கக்ஷிகளுள்ள ஓர் சபையைச் சுட்டிக் காட்டி: கிறிஸ்தவர்கள் இவ்வளவு கக்ஷிகளாய்ப் பிரிந்து சண்டையிடும் போது, நாங்களும் அவர்களோடு சேர்வதில் லாபமென்ன என்றார். இது வெட்கமான காரியம். நம் தேசத்திலும் இவ்வித குறை கூறப்படக்கூடிய சபைகள் இல்லையோ? நமது நிமித்தம் நாம் நம்மைச் சீர்திருத்தாவிட்டாலும், நம்மைப் பார்த்து இடறலடைகிறவர்கள் நிமித்தமாவது நம்மைச் சீர்திருத்திக்கொள்வது அவசியமல்லவா? உத்தமமும் நீதியும் தூய்மையுமான நடக்கைச் சாட்சிக்கு எவரும் எதிர்பேசத் துணியார்.

கிறிஸ்தவர்களுடைய நடக்கைச் சாட்சியினாலேயே முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் சுவிசேஷம் எங்கும் பரம்பி வியாபித்ததாகச் திருச்சபைச் சரித்திரக்காரர் பிரஸ்தாபிக்கின்றனர். "கிறிஸ்தவ நடக்கையைப் பார்த்தவர்கள் அவ்வாறு நடக்கும்படி யத்தனித்தார்கள்" என்று ஓர் ஆக்கியோன் சொன்னார். "கல்லாதவர்களும் மூடரும் வறியோரும் முதலாய் எப்போது கிறிஸ்தவர்களானார்களோ அதுமுதல் துர்இச்சைகளுக்கும் காம விகாரத்துக்கும் இடங்கொடாது, செய்கையிலும் நினைவிலும் கற்புள்ள தூயராகத் தங்களைக் காத்துக்கொள்ளுகிறார்கள்" என்று ஓரிஜன் எழுதினார். "எங்கெங்கே பொருளாசை, லோபித்தனம், வர்த்தகத்தில் பித்தலாட்டம் முதலிய தீமைகளை அந்த ஆரம்ப நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் கண்டார்களோ அங்கங்கெல்லாம் அவற்றை எதிர்த்தார்கள்; உலகப்பொருள் வணக்கத்தை அதின் சகல ரூபத்திலும் கண்டனம் செய்தார்கள். சகலவித அபத்தத்தையும் மாயத்தையும் அருவருத்தார்கள். லஞ்சம் உருட்டு புரட்டு திருட்டு முதலியவற்றை ஜனங்கள் நாடோடிய பழக்கவழக்கத்தில் தண்ணீரைப்போல் குடித்த அக்காலத்தில், கிறிஸ்தவர்களோ, தங்கள் உத்தமமும் நீதியும் யதார்த்தமும் நிறைந்த திருஷ்டாந்தத்தினால் வென்றார்கள்" என்று ஹார்னக் வரைகிறார்.

சிறுபான்மை இந்துதேசத்திலும் இது வாஸ்தவமே. கிறிஸ்தவர்கள் ஜீவியத்தில் விளங்கின சன்மார்க்க நடக்கையே கிறிஸ்து மதம் இத்தேசத்தில் இதுவரை வியாபித்ததற்கு ஓர் முக்கிய காரணம் என்று ஐயமறச் சொல்லத்தகும். இனிமேலும் இதுவே சிரேஷ்ட அத்தாட்சியாக மதிக்கப்படும்.

2. கிறிஸ்தவர்கள் வாக்கிய சாட்சி.—ஆயினும் ஜீவிய சாட்சி மட்டும் போதாது, வாக்கிய சாட்சியமும் தேவை. நம்மிலிருக்கும் விசுவாசத்தைக் குறித்து விசாரிக்கிறவர்களுக்குத் தைரியமாய் வாய் திறந்து சாட்சி பகராவிடில், அவ்விசுவாசத்தை அவர்கள் அறிவது எங்ஙனம்? பரிசுத்த ஞானஸ்நானம்பெற்ற ஒவ்வொரு கிறிஸ்

தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரன், போர்ச்சேவகன். ஞானஸ்நான சமயத்தில் சிலுவையடையாளத்தை நெற்றியில் வரைந்து, "சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை அறிக்கையிடுவதற்கு இவன் இது முதல் வெட்கப்படாமல், அவர் கொடியின்கீழ், உலகத்துக்கும், பாவத்துக்கும், சாத்தானுக்கும் விரோதமாய்த் தைரியமாய்ப் போர்செய்து மாணபரியந்தம் கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகனும் ஊழியக்காரனுமாயிருக்க வேண்டுமென்பதற்குக் குறிப்பாக இப்படிச் சிலுவை அடையாளத்தை வரைந்தோம்" என்று சொல்லுவது பல சபைகளிலும் வழக்கம். கிறிஸ்தவர்கள் யாவரும் இப்பிரதிஷ்டை பதங்களின் கருத்தை உணர்ந்து பணிவிடைசெய்வார்களாகில் இந்துதேசம் கிறிஸ்துநாதரின் ராஜ்யமாவதற்கு வெகுகாலம் பிடிக்குமோ?

இச்சத்தியம் இக்காலத்தில் எங்கும் வற்புறுத்தப் படுகிறது. தேஷீய கிறிஸ்தவ கவுன்சலார் இவ்விஷயத்தில் காட்டிய மாதிரியைப் பின்பற்றி, சகல மிஷன்களும் சபைகளும் ஐந்து வருஷச் சுவிசேஷ பிரபல்ய முயற்சியில் உடன்பட்டுக்கொண்டன. "சாட்சி வாரம்" ஏறக்குறைய எல்லாச் சபைகளிலும் வருஷத்துக் கோர் தடவை ஆசரிக்கப்படுகிறது. கடந்த 1942-ம் வருஷத்தில் ஒரே சபையைச் சேர்ந்த சுமார் 38,000 கிறிஸ்தவர்கள் அவ்வாரத்தில் சாட்சிசொன்னதாகவும், 28,400 சுவிசேஷப் பிரதிகளை விற்றதாகவும், லக்ஷத்துக்கதிகமான ஒற்றைத்தாள் பிரதிகளை இலவசமாக அளித்ததாகவும் அறிவிக்கின்றனர். இம்முயற்சி தேசமெங்கும் பரவுவதாக!

3. சுதேச மிஷன்கள் வேலை.—சுயாதீன வாக்கிய சாட்சியினால் கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறதுடன், பல சுதேச மிஷன்கள் மூலமாயும் கிறிஸ்தவர்கள் இத்தேசத்தைக் கர்த்தரண்டை கொண்டுவர முயற்சிக்கிறார்கள். தென் இந்தியாவின் பல சபைகளுக்கும் இவ்வித சுவிசேஷ பிரபல்ய சங்கங்களுண்டு. மதுரைத் திருச்சபை சங்கம் கொங்கை நாட்டில் பல வருஷமாய் சுவிசேஷகர்களை

அனுப்பி வேலை நடப்பிக்கின்றது. தெலுங்கு பாப்திஸ்டு கன்வென்ஷன் என்ற மகா சபை வருஷத்துக்குச் சுமார் ரூ. 660 சேகரித்து, நெல்லூர் ஜில்லாவில் ஒன்பது சுவிசேஷர்களைப் போஷித்து வருகின்றன.

திருநெல்வேலி இந்திய மிஷனேரி சங்கம் இவ்வித சங்கங்களில் சற்று பெரிது. 1903-ம் வருஷம் பெப்ருவரி மாதம் 12-ம் தேதி பாளையங்கோட்டையில் இது ஸ்தாபகமானது. திருநெல்வேலி அத்தியக்ஷாதீன முழுவதும், சென்னை, கொளும்பு, ரங்கூன் அத்தியக்ஷாதீனத்திலுள்ள ஆங்கிலேய சபைத் தமிழ் கிறிஸ்தவர்கள் பலரும் இப்போது இச்சங்கத்தை ஆதரித்து வருகின்றனர். இச்சங்கம் வேலைசெய்யுமிடம் தோர்ணக்கல்லைச் சுற்றியிருக்கும் மாபூபாத் தாலுகா. இது திருநெல்வேலியிலிருந்து சுமார் எண்ணூறு மைலுக்கு வடக்கே நிஜாம் ராஜ்யத்திலிருக்கிறது. இம்மிஷனுக்கு முக்கிய ஸ்தானம் தோர்ணக்கல்; இதிலிருந்தே தோர்ணக்கல் அத்தியக்ஷாதீனத்தின் பேர் வந்தது. சங்கத்தின் வருஷ வருமானம் சுமார் ரூ. 21,000. 1941-ம் வருஷத்தில் இம்மிஷன் பராமரிப்பின்கீழ் ஞானஸ்நானம்பெற்ற கிறிஸ்தவர்கள் 9420 பேரும், ஞானஸ்நானத்துக்கு ஆயத்தப்படுகிறவர்கள் 3637 பேரும் இருந்தனர். இரண்டு பட்டம்பெற்ற தமிழ் மிஷனெரிமாரும், மூன்று பட்டம்பெறாத தமிழ் ஊழியரும், நான்கு தெலுங்கு குருமாரும், 57 தெலுங்கு உபாத்திமாரும் இம்மிஷன் பரிபாலனத்தில் உண்டு. தெலுங்கு குருமார் தெலுங்குச் சபைக் காணிக்கையினால் ஆதரவு பெறுகின்றனர்.

இந்திய தேஷீய மிஷனேரி சங்கம்.—1905-ம் வருஷம் டிசம்பரில் கல்கத்தாவுக்குச் சமீபமாயுள்ள செரம்பூரில் ஸ்தாபிக்கப்பட்டது. இந்துதேசக் கிறிஸ்தவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து இம்மிஷனெரி சங்கத்தை ஆதரித்து நடத்துகிறார்கள். சுதேச ஊழியர், சுதேச வருமானம், சுதேச ஆளுகை என்பதே இச்சங்கத்தின் சட்டம்.

இச்சங்கத்தின் வேலை எட்டு மாகாணங்களில் ஐம்பது ஸ்தானங்களில் நடைபெறுகிறது. திருப்பத்தூர் ஆசிர

மம், வங்காளத்திலுள்ள பரி. அந்திரேயாவின் மிஷன், திருவாங்கூர் அத்தியக்ஷ கண்டத்துப் புறதேச மிஷன், பரி. தோமா சீரிய சபையின் சுவிசேஷபிரபல்ய வேலை முதலியவை இத்தேஷீய மிஷனெரி சங்கத்துடன் உடன் பட்டு வேலை நடப்பிக்கின்றன. இச்சங்கத்தின் பரா மரிப்புக்குள் தற்சமயத்தில் 160 ஊழியரும் 9,500 கிறிஸ் தவர்களும் உண்டு. இதின் வருஷ வருமானம் ரூ. 78,000. பஞ்சாபிலுள்ள மாண்ட்காமரி ஜில்லாவிலும் ஐக்கிய மாகாணங்களிலுள்ள அலகபாத்-பத்திப்பூர் ஜில்லாக்களி லும் பேஹார் ஒரிஸ்ஸாவிலுள்ள சம்பற்பூர் ஜில்லாவிலும், மத்திய மாகாணங்களில் பிலாஸ்பூர் ஜில்லாவிலும், பம் பாய் ராஜதானியைச் சேர்ந்த ஆமத்நகர்-ஷோலாப்பூர் ஜில்லாக்களிலும் இச்சங்கம் நேர்வேலை நடப்பிக்கிறது. திருவாங்கூர் அத்தியக்ஷ கண்டத்தார் தோர்ணக்கல்லுக்கு வடக்கேயுள்ள பர்க்கால் தாலுகாவில் சுவிசேஷவேலை நடப்பிக்கிறார்கள்; தற்சமயம் அங்கு சுமார் 1,000 கிறிஸ் தவர்களுண்டு.

பரி. தோமாசபையின் சுவிசேஷ பிரபல்ய சங்கம் வருஷத்துக்கு ரூ. 24,000 சேர்க்கிறது. மலையாளத்தில் கீழ்ஜாதிகளுக்குள் வேலை நடப்பிக்கும் 25 சுவிசேஷகர் களும், கொச்சி, பால்காட், வடகன்னடத்தில் சில ஊழி யரும் இச்சங்கத்தினால் போஷிக்கப்படுகிறார்கள்.

இலங்கை தேஷீய மிஷனெரி சங்கம் 1913-ம் வருஷத் தில் உண்டானது. இலங்கைத்தீவில் நான்கு பாகங்களில் சுவிசேஷ வேலை இம்முயற்சியால் நடைபெறுகிறது. வருஷ வருமானம் ரூ. 6,000.

தோர்ணக்கல் அத்தியக்ஷ கண்டத்துக் கிறிஸ்தவர்கள் முளக் தாலுகாவில் ஒரு சுதேசகுருவைத் தம் மிஷனெரி யாக ஆதரித்து வருகின்றனர். இங்கே 1941-ம் வருஷத் தில் 1146 கிறிஸ்தவர்கள் உளர்.

மேற்கண்ட சுதேச பிரயத்தனங்களால் சுவிசேஷ வேலைக்கு உண்டாயிருக்கும் லாபம் ஒருவேளை கொஞ்ச மேயாயினும், அந்தந்த வேலைகளை நடப்பிக்கும் சபை களுக்கு இவற்றால் பெருத்த ஆத்துமலாபம் வந்திருக்கிற

தென்பதற்கையமில்லை. நடந்திருக்கும் வேலையும் அவமதிக்கப்படத்தக்கதன்று. ஏனெனில், சுவிசேஷ வேலை முன் நடைபெறுத புது இடங்களிலேயே இம்மிஷன்கள் யாவும் வேலை ஆரம்பித்தது; சுதேச சபையின் சுவிசேஷ முயற்சிக்கு இவைகள் ஸ்தம்பங்களாய் அங்கங்கே விளங்குகின்றன.

இந்துதேச சபையின் நற்குறிப்புகளை இம்மட்டும் சவிஸ்தாரமாய் வரைந்தோம். இச்சபை எவ்வளவு தூரம் பரிசுத்தத்திலும் சுயவெறுப்பிலும் பக்தியிலும் பெருகி வளர்ந்தோங்குகின்றதோ, அவ்வளவுக்கு இந்து தேசத்தைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயம்பண்ணுவதற்கு அது பலத்த கருவியாய் விளங்கக்கூடும். அச்சபை பரிசுத்தத்தில் பெருகச்செய்வோமாக. அதில் சுயவெறுப்பை உண்டாக்குவோமாக. அதின் பக்தியை அபிவிருத்தி செய்வோமாக. சுவிசேஷ வாஞ்சையில் அது வளரும்படி தக்க பிரயத்தனங்களைக் கையாடுவோமாக. இதுவும் நம் தேசத்துக்காக நாம் செய்யும் பணிவிடையே.

அத்தியாயம் 10

இன்னம் நடக்கவேண்டிய வேலை

இந்துதேசத்தில் கிறிஸ்துமத வியாபகமாகும் விஷயத்தைப்பற்றி ஆலோசிக்குமிடத்து இன்னம் நடக்கவேண்டிய வேலையை இரண்டு விதமாய்க் கவனிக்கலாம். முதலாவது: சபையில் நடக்கவேண்டிய வேலை; இரண்டாவது: இன்னம் சுவிசேஷம் செல்லாத பாகங்களில் நடக்கவேண்டிய வேலை.

I

சபையில் நடக்கவேண்டிய வேலை

இந்திய சபையில் ஞான உயிர் வரும்படி செய்யும் வேலையே சகல வேலைகளிலும் பிரதான வேலை. சபைகள் உயிரற்றிருக்கிறதாக நாம் சொல்லுகிறதில்லை. உயிரிருப்பதினாலேயே முந்தின அத்தியாயத்தில் நாம் விவரித்த நற்குறிப்புகள் விளங்குகின்றன. ஆயினும், அந்த ஞான உயிர் சம்பூரண உயிராகவும், கிறிஸ்தவர்களனைவரையும், சபைகளனைத்தையும் பற்றிப்பிடிக்கும் திவ்ய அக்னியாகவும் ஜுவாலிப்பது அவசியம்.

திருச்சபையின் அபிவிருத்தி எல்லா இடங்களிலும் ஒன்றுபோலில்லையென்பது உண்மை. நாற்பது ஐம்பது வருஷக்காலமாகக் கிறிஸ்து மார்க்கத்தைப் புதிதாய்ச் சேருகிறவர்கள் ஒருவருமின்றி, நின்ற நிலையிலேயே நிற்கும் சபைகளுண்டு. வயசு வந்தவர்கள் ஞானஸ்நானம் ஒன்றுவது முப்பது வருஷமாய் நடக்காத ஆலயங்கள் உண்டு. இவ்வித வளர்ச்சி இல்லையென்று சற்றென்கிலும் வியாகுலப்படாத சபைக்கமிற்றிமார் உளர். ஜன சங்கைக்கு ஜனசங்கை கிறிஸ்தவர்கள் தொகை குறைந்து கொண்டே போகும் ஜில்லாக்கள் உண்டு. நின்ற நிலையில்

நிற்கும் மாகாணங்கள், ஜில்லாக்கள், மிஷன்கள், சபைகள் அநேகம் தேசமெங்கும் இருக்குங்கால், சபைகளுக்குப் புது உயிர் தேவையென்று யார்தான் உள்ளுணர்வுடன் சொல்லாதிருக்கக்கூடும்?

இதற்குக் காரணம் என்ன?

1. பல சபைகள் இரண்டாம் மூன்றும் தலைமுறைக் கிறிஸ்தவர்களால் நிறைந்த சபைகளாகிவிட்டன. முதலாம் தலைமுறையார் ஹிந்து மதானுஷ்டானங்களை விட்டுப் பிரிந்துவந்தவர்கள். ஒருவாறு ஆத்மீக அநுபவமுள்ளவர்கள். கிறிஸ்துவுக்காகப் பல கஷ்டநஷ்டங்களைச் சகித்தவர்கள். திருச்சபையின் ஐக்கியத்தை நன்கு மதித்து, சாக்கிரமெந்துக்களை அருமைபெருமையாய் ஆசரித்து, வேதவாக்கியங்களைக் கற்று ஞான வளர்ச்சியடைந்தவர்கள். இரண்டாம் மூன்றும் தலைமுறையாரோ இவ்வித அநுபவமற்றவர்கள். துன்பத்தைச் சகித்தவர்களல்ல, கிறிஸ்தவ நாகரீகத்தில் சுகித்தவர்கள். கிறிஸ்துமார்க்கத்தினால் நஷ்டமடைந்தவர்களல்ல, அதினால் மேன்மையடைந்தவர்கள். ஆகவே இவர்கள் லௌகீகப் பிரியுற்றோராகவும், பணஆசை கொண்டவர்களாகவும், மெய்ப்பக்தியற்றவர்களாயும் வளருவது கூடிய காரியம். குடும்பப் பக்தி, பால்யப் பயிற்சி, பாடசாலைகளில் கிறிஸ்துமதபோதனை, சிறு பிராயமுதல் வேத வாசிப்பு,—இவைகளே இரண்டாம் மூன்றும் தலைமுறையாரைப் பக்தியிற் பாதுகாக்கும் பிரயத்தனங்கள்.

இன்னொரு காரணம்: தற்காலத்துக்குரிய லௌகீகம். எப்பக்கம் நோக்கினும் ஜனங்கள் கடவுளற்று ஜீவிக்கப் பழகுகின்றனர். தேசத்தின் தீமைகளைக் கண்ணுறும் தேசாபிமானிகள் சிலர் இத்தீமைகளனைத்துக்கும் மதமே காரணமென்றுணர்ந்து — ஹிந்துமதத்தை மட்டுமல்ல, சகல மதங்களையும் துறக்கும்படி ஜனங்களை ஏவுகின்றனர். ஹிந்துக்கள் மகம்மதியரான பலர் மதானுஷ்டானங்கள் யாவற்றையும் தவிர்த்து, தேசமே தெய்வம் என்றாற் போல தேசத்தைப் பூஜித்துவருகிறார்கள். விதேச சாஸ்

திரங்களையும் வித்தைகளையுங் கற்ற கல்விமான்கள் பலர் இப்பிரபஞ்சம் யாவும் சாஸ்திர விதிகளாலேயே நிற்கிற தென்று நினைத்து, மதபக்தி மதியீனமென்றாற்போல வாழ்க்கையாற்றுகின்றனர்.

நம் தேசத்தவர்கள் இவ்வாறிருக்குங்கால், கிறிஸ்து வின் தாசராகிய நாமும் நமது பிள்ளைகளுங்கூட தெய்வ பக்தியற்றவர்களாகில், தேசத்தை எப்படி இரட்சிப் போம்? நமது சபைகளனைத்திலும் உரத்த சத்தமாய் நாம் செய்யவேண்டிய விளம்பரம்: "கடவுளைக் கிட்டிச் சேருங்கள்! இயேசுநாதரை அண்டிப் பிடியுங்கள்! பரி சுத்த ஆவியால் நிறைந்திருங்கள்!" என்பதே.

2. சுதேச சபையில் நடக்கவேண்டிய இரண்டாவது வேலை: சுவிசேஷ பிரபல்ய வாஞ்சையைச் சபையில் உண் டாக்குவதாம்.

பக்தியில்லாதிருக்கும்போது சாட்சி சொல்லுவது அசாத்தியம். சாட்சிசொல்லத் தவறும்போது பக்தி வளருவதும் அசாத்தியம். சாட்சிகூறும்படி சபையைத் தூண்டிவிடும்போது ஞானஜீவன் அனல்கொள்ளுமென் பது நிச்சயம். நடமாடாமலிருந்தால் கால் சூம்பிப் போவது கூடியது; கால் அசையும்போது இரத்தம் ஊறி தசை பெலன்கொள்வது இயல்பு. அநேக சபைகளில் ஞானஜீவன் ஊறி தசை பெலன் கொள்ளாதிருப்பதற்குக் காரணம் அவைகள் அசைவற்றவர்களாய் மற்றவர்களுக் காக யாதொரு பணிவிடையும் செய்யாமலிருப்பதே.

ஓர் ரோமான்சபைச் சரித்திரப் புஸ்தகத்தில் ஆக்கி யோன்: "தலைமுறை தத்துவமாய் வந்திருக்கும் பழைய கிறிஸ்தவர்களுக்கு ஸ்திரமான ஞான பணிவிடைகளைச் செய்வதிலேயே கத்தோலிக்கச் சபையின் பணமும் மிஷ னெரிமாரின் பொழுதும் போகிறது; இதினால் புது இடங் களில் புறமதஸ்தரைக் கிறிஸ்தவர்களாக்குவது கூடாத காரியம்" என்றெழுதுகிறார். இது என்ன பரிதாபமான அறிக்கை! "காணமற் போனதைத் தேடுவதும் இரட் சிப்பதுமே திருச்சபையின் வேலை. தொழுவத்துக்கு

வெளியே இருக்கிறவர்களை உள்ளே கொண்டுவருவதற்காகவே கிறிஸ்துவின் மந்தையும் அதின் மேய்ப்பரும் பாடுபடவேண்டியவர்கள். தலைமுறை தத்துவமாய் வந்திருக்கும் கிறிஸ்தவர்களுக்குப் பணிவிடை செய்வதே ஓர் சபையின் வேலையாகவும், குருமாரின் ஓயாத ஊழியமாகவுமிருப்பின், அச்சபையின் வேலை வியர்த்தமென்று தீர்ப்பிடத்தகும். அநேக சபைகளின் ஸ்திதி இதுதானன்றோ? பாஸ்றறரேற்றுக் கமிற்றி, சர்க்கிள் கமிற்றி, கவுன்சல்—முதலிய ஏற்பாடுகளின் தொழில் "தலைமுறைத் தத்துவமாய் வந்திருக்கும் கிறிஸ்தவர்களைப்" போஷிப்பதன்றோ? நேரத்தையும் பணத்தையும் இவ் வேலையிலேயே செலவுசெய்து, சுவிசேஷ வேலையை அலக்ஷியம் பண்ணும் சபைகள் இதை ஆலோசிக்க மன்றாடுகிறோம். இதின் சம்பந்தமாய்த் "திருச்சபையும் சுவிசேஷ பிரபல்யமும்"[1] என்ற சிறு புஸ்தகம் பிரயோஜனமாயிருக்கும்.

கிறிஸ்துமதம் சுயநயமற்ற மதம், மற்றவர்களை இரட்சித்து, தன்னைத்தான் இரட்சிக்காத ஒருவர் ஸ்தாபித்த மதம். ஊழியமில்லாத கிறிஸ்தவ ஜீவியம் கிறிஸ்தவ ஜீவியமன்று. ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவுக்குச் சாட்சி. இச்சத்தியத்தைச் சபைகளில் எக்காளம் ஊதித் தொனிக்கச் செய்யும்போது சபைகள் உயிரடையும்.

3. சுதேச சபையில் நடக்கவேண்டிய மூன்றுவது வேலை: திருச்சபை ஐக்கியம்.

"இந்திய சபை" என்று சொல்லத்தக்க ஓர் சபை நம் தேசத்திலில்லையென்று சொன்னோம். சுதேச கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள், சபைகள் இருக்கின்றன, சுதேச சபையோ இல்லை. நம் சுயதேசக் கிறிஸ்தவர்கள் அநேக சபைப் பிரிவினைகளுக்குட்பட்டுப் பிரிந்து நிற்கின்றார்கள். கிறிஸ்து மார்க்கத்திற் சேருமுன் நம்மவர்கள் குலங்குல

---

1 "திருச்சபையும் சுவிசேஷ பிரபல்யமும்." Christian Literature Society. Price As. 3.

மாய்ப் பிரிந்திருந்ததுண்டு; வெவ்வேறு பாஷைகளினால் வகுக்கப்பட்டிருந்ததுண்டு; மதவிஷயமாகவோ பெரும் பாலும் ஐக்கியப்பட்டிருந்தனர். கிறிஸ்தவர்களான பின்னர், முன் ஒரே குலமாயிருந்தவர்கள் பல சபைக ளாய்ப் பிரிந்தனர். முன் ஒரே மதத்தில் ஏகமாய் வணங் கினோர் இப்போது வேறு வேறு ஆலயங்களில் ஆராதனை செய்கின்றனர். தேசத்தைக் கிறிஸ்துவுக்காக ஜெயிக்க வேண்டிய இச்சுதேச சேனை இவ்வாறு பிரிந்திருப்பது பலவீனம்.

ஐக்கியம் தேவசித்தம். உலகம் விசுவாசிக்கத்தக்க தாக அவர்களெல்லாரும் ஒன்றுகவேண்டுமென்பதே ஆண்டவர் ஜெபம். ஒரே சரீரம், ஒரே ஆவி. 1919-ம் வருஷம் தரங்கன்பாடியில் கூடின சில திருச்சபைக் குருமார் தயாரித்து அனுப்பின செய்தியில்: "யுத்தத் துக்குப் பின் உலகம் திரும்பக் கட்டப்பட்டு, சகல ஜாதி களும் ஒன்றுசேரும் இக்காலத்தில், நமது கடந்தகாலப் பிரிவினைகளுக்காக நாம் துக்கப்படவும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிடம் திரும்பி சபை ஒற்றுமை பிரத்தி யட்சமாய் விளங்கும் வழியைத் தேடவும், இந்தியாவின் தற்கால நிலைமை நம்மைத் தூண்டுகின்றது. பூலோகத்து மனுஷரில் ஐந்தில் ஒரு பாகத்தை அடக்கியுள்ள இந்தியா வைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்தும் பிரமாண்ட வேலை நமக்குமுன் நின்றபோதிலும், நமக்குள் காணும் பிரிவினைகளால் நாம் பலட்சயமடைந்து திறமையற்றவர் களாய் விளங்குகின்றோம். இப்பிரிவினைகளுக்கு உத்தர வாதிகள் நாம் அல்ல; நாம் அவைகளை உண்டாக்கவில்லை: நாம் அவைகளை நிலைநிற்கச் செய்யவேண்டியதுமில்லை" என்று விளம்பரஞ்செய்தனர்.

தென் இந்தியாவில் சபை ஆளுகைமுறை அமையப் பெற்ற சபைகளுக்கும், மூப்பர் ஆளுகை முறையுடைய சபைகளுக்கும் 1907-ம் வருஷத்தில் ஒற்றுமை உண்டா னது. அதின் பலனே தென் இந்திய ஐக்கிய சபை. முன் ஆறு மிஷன்களால் ஸ்தாபகமான சபைகள் இவ்வாறு ஒரே சபை ஆளுகை ஒழுங்குக்குள் வந்தன.

1920-ம் வருஷம் முதல் தென் இந்தியா ஐக்கிய சபையும் அங்கிலேய சபையும் ஒன்றுசேரும் வழிகள் ஆலோசிக்கப்பட்டுவருகின்றன. இது 1919-ல் தரங்கன்பாடியிற் கூடின சில சுதேச குருமார் ஆரம்பித்த முயற்சி. 1923-ல் மெதடிஸ்டு (உவெஸ்லியன்) சபையும் இவ்வாலோசனைகளிற் சேர்ந்துகொண்டது. இம்மூன்று சபைப் பிரதிநிதிகளும் இவ்விஷயத்தை ஆலோசித்துவருகின்றனர். இதுவரை செய்திருக்கும் தீர்மானங்களைச் "சபை ஐக்கிய ஏற்பாடு" என்னும் நூலிற் காணலாம். அத்தியக்ஷ ஆளுகைக்குட்பட்ட சபைகளுக்கும், அத்தியக்ஷர்களில்லாத சபைகளுக்கும் ஐக்கியம் ஏற்படுவதற்கு உலகத்தில் எக்காலத்திலாவது இவ்வித பிரயத்தனம் நடந்ததில்லை. இப்பிரயத்தனம் பலிக்குமாகில், சபை ஆளுகை, மூப்பர் ஆளுகை, அத்தியக்ஷர் ஆளுகை என்ற மூன்று சபைப் பரிபாலன முறைகளும் ஒருங்குசேர்ந்த ஓர் ஐக்கிய சபை தென் இந்தியாவில் உண்டாகும். இது யாவரும் விரும்பத்தக்க பலனே.

இப்பிரயத்தனம் நல்ல முடிவுக்கு வந்தபின்னுங் கூட நடக்கவேண்டிய வேலை அதிகம் உண்டு. லூத்தரன் சபைகள், பாப்திஸ்து சபை முதலிய பல சுயாதீனச் சபைகள் இவ்வைக்கிய ஏற்பாட்டுக்குப் புறம்பே நிற்பதால், அவைகளையும் ஏகசபையிற் சேர்க்கும் வழிவகைகளை விசாரித்தறிதல் நன்று. ரோமான் சபை மற்றவர்களோடு ஒருமைப்பாட்டுக்கு வா மனமற்றுப்போனாலும், மற்ற சீர்திருத்தச் சபைகளனைத்தும் ஒரே சபையாவது கூடாத காரியமல்ல.

ஆயினும், இச்சுகிர்த பலனை நாம் காணுமுன், அநேக இடையூறுகள் நீங்கவேண்டிய தவசியம். சபை ஐக்கியம் வேண்டும் என்று வாயினால் சொல்லுவது எளிது. திட்டவட்டமான ஒழுங்குகள் செய்வதற்கு ஆரம்பிக்கும் போதோ மனுஷருடைய பிடிவாதமும், தற்பெருமையும் இடையூறாய் வருவது இயல்பு. ஐரோப்பாக் கண்டம், பிரித்தானியா, அமெரிக்கா—இத்தேசங்களிலிருந்து வந்திருக்கும் மிஷனெரிமார் சில நூற்றாண்டுகளாகத் தங்கள்

முற்பிதாக்கள் அநுசரித்து வந்த கொள்கைகளையும் மதானுஷ்டானங்களையும் விட்டுவிட எளிதில் விருப்பப் படார். அவர்களிடமிருந்து கற்ற தேஷீயக் கிறிஸ்தவர் களும் தங்கள் முற்பிதாக்கள் அநுசரித்துவந்த சபை ஏற்பாடுகளைவிட்டு மாறுவதற்கு எளிதில் மனங்கொள் ளார். சபை ஐக்கியம் வரவேண்டுமாகில், பழைய ஆசா ரங்களையும் கொள்கைகளையும், அவசரமானால், விட்டுவிட மனசு வரவேண்டும். தம்தம் பழக்கவழக்கங்களையும் சித்தாந்தங்களையும் ஒவ்வொருவரும் திரும்பவும் பரீட் சித் தறியவேண்டும். ஐக்கியத்தினிமித்தம் எதெதை விட்டுவிடலாம், எதெதை அநுசரிக்கத்தகுமென்று ஒவ் வொருவரும் பிடிவாதமின்றி ஆராயவேண்டும். இவ்வித ஆராய்ச்சிசெய்து, ஒரே தீர்மானத்துடன் திருச்சபையின் நன்மைக்காக உழைக்கும் சுதேச கிறிஸ்தவர்கள் பிரயா சத்தினாலும் பிரார்த்தனையினாலுமே ஐக்கியம் பலிக்கும். இதைப் படிக்கும் சுதேச நண்பர் ஒவ்வொருவரும் இவ் விஷயத்துக்காகப் போராடி ஜெபித்து முயற்சிக்க மன் றாடுகிறோம்.

4. சுதேச சபையில் நடக்கவேண்டிய நான்காம் வேலை: அரசாட்சி சம்பந்தமான கடமைகளைச் செய் வதற்கு கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்துவது.

கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் இந்துதேசத்துப் பிரஜைகளில் ஒருவன். அவன் கிறிஸ்தவன்; அதினால் கிறிஸ்துநாதருக்கு அவன் செய்யவேண்டிய கடமை உண்டு. அவன் இந்தியன்; அதினால் இத்தேசத்துக்கு அவன் செய்யவேண்டிய கடமையுமுண்டு. நம் தேசத்த வர்களுக்குச் சுவிசேஷத்தைமாத்திரம் பிரசங்கிப்பதினால் நமது கடமை தீர்ந்துபோகிறதில்லை. அவர்களைப் பீடிக் கும் தீமைகளை நீக்குவதற்கு முயற்சிப்பதும், இதினி மித்தம் அரசாங்கத்தாரோடும், பஞ்சாயத்து போர்ட், ஜில்லாபோர்ட், முனிசிபல் கவுன்சல்களோடும் உடன்பட் டுழைப்பதும் நமது கடமை.

கிராம முன்னேற்ற முயற்சிகள் பல அவசியம். மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு எண்பத்தொன்

பதுபேர் 5,000 பேருக்குக் குறைந்த ஜனமுள்ள கிராம வாசிகள் என்றோம். அநேக கிராமங்களில் சுத்தமான குடிதண்ணீர் கிடையாது; சுகாதாரத்துக்கேற்ற கொல்லை சுத்தம் கிடையாது; சாதாரண வைத்திய சகாயம் கிடையாது; பிள்ளைப்பேற்றில் சாஸ்திர விதிப்படியான உதவி கிடையாது; அநேக கிராமங்களில் பாலியர் வாலிபருக்குக் கல்விச் சாதனங்கள் இல்லை. இவை கள் கிடைக்கும்படி செய்யவேண்டியது கிறிஸ்தவர்கள் பேரிலும் விழுந்த கடமையே. மேலும் கிறிஸ்தவர்கள் குடியிருக்கும் கிறிஸ்தவக் கிராமங்கள் இவ்விஷயங்க ளில் நன்மாதிரிகளாய் விளங்கப் பார்ப்பது நமது பொறுப்பு.

இவ்வித முயற்சிகளில் சில பஞ்சாயத்து போர்ட் மூல மாகவும், ஜில்லா போர்ட் மூலமாகவும், சட்ட நிரூபணச் சபைகள் மூலமாயும் நடக்கக்கூடும். ஆகவே, இவ்வா லோசனைச் சபைகளுக்கு அங்கங்களைத் தெரிந்துகொள் ளும் பாத்தியதை யார் யாருக்குண்டோ அவர்கள் இவ் வித கரிசனையுள்ள உத்தமர்களுக்கே தம்தம் சீட்டைக் கொடுப்பது நியாயம். மேற்கண்ட போர்டுகளுக்கும் சாசனச்சபைகளுக்கும் அங்கங்களாக நிற்க விரும்பு வோர் ஏராளம். இவ்வாறு நிற்க விரும்புவோர் சிற்சில சமயங்களில் வோட்டுக்காக லஞ்சம்கொடுப்பதும், வோட் கொடுப்பவர்கள் லஞ்சம் கேட்பதும் வழக்கம். கிறிஸ்த வர்களோ இவ்விதத் தீய முறைகளைக் கையாடத் தகாது. நிறைவேற்றமுடியாத வாக்குகளைச் சிலவேளைகளில் அங்கங்களாய் நிற்க விரும்புவோர் கொடுக்கிறார்கள். உங் கள் கிராமத்துக்கு ரஸ்தா போடுவோம், உங்கள் ஊரில் பள்ளிவாசல், ஹிந்து தேவாலயம், கிறிஸ்தவ ஆலயம் கட்டுவோமென்று சொல்லுகிறவர்கள் உளர். கிறிஸ்த வர்கள் எள்ளளவேனும் லஞ்ச முறைகளைக் கையாட லாகாது.

எலக்ஷன்களில் பல தாறுமாறுகள் நடக்கிறதாகக் கேள்வியுற்றோம். ஜில்லா போர்ட் மெம்பர் ஒருவர் கிறிஸ்தவ வோட்டர்களுக்குத் தலைக்கு ஐந்து ரூபாய்

கொடுத்தாராம். ஓரிடத்தில் ஜில்லா போர்டுக்குச் சீட்டுக்கொடுக்கும்படி ஒவ்வோர் பேரைக் கூப்பிடவே, யாரோ ஒருவன் போய் நான்தான் என்று ஆஜர் சொல்லி வோட் கொடுக்கும்படி ஜமீன்தார் ஒருவர் செய்தாராம். கிறிஸ்தவர்கள் வோட்டைத் தன் பக்கம் திருப்புவதற்காக உபாத்திமாருக்குத் தலைக்கு மூன்று ரூபாய் விதம் ஒருவர் கொடுத்ததாக வதந்தி. தங்கள் உத்தியோகத்தையும் செல்வாக்கையும் பாராட்டி, தங்கள் இஷ்டம் போல சீட்டிடுவோரைத் திருப்பும்படி பயமுறுத்தினவர்களையும் அறிவோம். ஜாதிப்படியும் குலப்படியும் சீட்டுக் கேட்கிறவர்களும் கொடுக்கிறவர்களும் உளர். இவ்வித குறை குற்றங்கள் கிறிஸ்தவர்கள்மேல் சொல்லப்படுவதற் கிடமில்லாமல் குருமார் ஜனங்களை ஏற்கனவே ஆயத்தப்படுத்தவேண்டும்.

சுயாதிபத்தியம் ஆரம்பிக்கும் காலத்தில் இவ்வித குற்றங்குறைகள் எத்தேசத்திலும் காணப்படுவது சகஜம். கிறிஸ்தவர்களோ இவைகளை எதிர்க்கவேண்டும், இவற்றிற்கு விரோதமாய்ப் போராடவேண்டும், இவற்றை வெளிச்சத்துக்கு இழுத்துக்கொண்டு வரவேண்டும்.

கிறிஸ்தவர்களாகிய நமதுமேல் இத்தனை கடமையும் நிற்கிறது. சபையின் முக்கியஸ்தரும் குருமாரும் இக்காலத்தில் தங்கள் தங்கள் ஆதீனத்திலுள்ள கிறிஸ்தவ மக்களைச் சன்மார்க்கத்திலும் மெய்த்தேவ பக்தியிலும், ஐக்கியத்திலும், உத்தம ஊழியத்திலும் பயிற்றுவிக்கக் கடவுள் கிருபை பாலிப்பாராக.

அத்தியாயம் 11

இன்னம் நடக்கவேண்டிய சுவிசேஷ வேலை

II

தென் ஆபிரிக்காவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் விருத்தியடையும்படி ஜீவகாலமெல்லாம் பிரயத்தனம் செய்து, பொருளையும் உயிரையும் செலவிட்ட செஸில் ரோட்ஸ் என்ற மகான் மரணத்தறுவாயிலிருக்குங்கால், "நடந்திருப்பது எவ்வளவு கொஞ்சம்! நடக்கவேண்டியது எவ்வளவு அதிகம்!" என்று புலம்பினாராம். இந்துதேசத்தில் சுவிசேஷ ராஜ்யத்தின் விருத்தியை நினைத்து நாமும் அவ்வாறே புலம்பவேண்டியதிருக்கிறது. இவ்வளவு காலமும் நடந்திருக்கும் வேலை எவ்வளவு சொற்பம்! இன்னம் நடக்கவேண்டிய வேலை எவ்வளவு அதிகம்!

இந்துதேசத்தின் ஜனத்தொகையில் சுமார் நூற்றுக்கிருவர் கிறிஸ்தவர் என்று சொன்னோமே. நூற்றுக்கிருவர் கிறிஸ்தவர் என்பது பெரிய காரியந்தான். ஆனால் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுப் பேருக்கு மேலாக இன்னம் கிறிஸ்துசபைக்கு வெளியே இருக்கிறார்களென்பதையும் மறந்துபோகாதிருப்போமாக. இந்தியாவின் ஜனத்தொகையை நிமிஷத்துக்கு இருபதுபேர் வீதம் இராப்பகலாய் எண்ணினால், முப்பத்தேழு வருஷம் செல்லும் என்று பார்த்தோம். கிறிஸ்தவர்களெல்லாரையும் எண்ணுவதற்கு முதல் வருஷத்தில் எட்டு மாசம் போதும்!

இவ்வத்தியாயத்தில் காணும் படத்தைப் பார்த்தால், ஒவ்வோர் மாகாணத்திலும் ஜனத்தொகை இவ்வளவென்றும், கிறிஸ்தவர்கள் இத்தனைபேர் என்றும், ஜனத்தொகையில் கிறிஸ்தவர்கள் வீதாசாரம் ஆயிரத்துக்கு இத்தனையென்றும் குறித்திருக்கிறது.


மொத்த ஜனத்தொகை
கிறிஸ்தவர்கள் தொகை
ஆயிரத்துக்குக் கிறிஸ்தவர்கள் தொகை
4,684,000
26,000
5
3,646,000
2200
1/2
24,000,000
415,000
17
11,225,000
5778
1/2
49,000,000
208,000
4
9,248,000
2,49,000
27
51,000,000
183,000
3
42,000,000
416,000
10
9,375,000
17,000
1
17,990,000
102,000
5
22,000,000
314,000
14
14,436,000
150,000
10
46,740,000
1,774,000
38
6,557,000
87,000
13
5,095,000
1,604,000
315

இரண்டொன்று தவிர சுதேச சமஸ்தானங்களின் ஸ்திதி நிர்ப்பந்தமே.

திருவாங்கூர்	315	பரோடா	3
கொச்சி	278	வங்காள சிற். நாடுகள்	3
மத்திய மாகாண சிற்றரசு நாடுகள்	20	மத்திய மாகாண சிற்றரசு நாடுகள்	2
மைசூர்	13	காஷ்மீரம்	·6
ஹைதராபாத்	10	ராஜபுதனம்	·5
பம்பாய் சிற். நாடுகள்	3	பஞ்சாப் சிற். நாடுகள்	·5

இவற்றிலிருந்து நாம் யூகிக்கக்கூடிய சில குறிப்புகள் உண்டு.

(1) ஒவ்வொரு மாகாணத்திலும் சுவிசேஷம் அறிவிக்கப்படாத பாகங்கள் இன்னம் ஏராளம். ராஜபுதனத்திலும் பஞ்சாபிலுமுள்ள 17 ஜில்லாக்களில் 1931-ம் வருஷத்தில் கிறிஸ்தவர்களே இல்லை. சிந்து, குவாலியர், காஷ்மீரம் முதலிய நாடுகளில் சரியான வேலை நடக்கவில்லையென்று வதந்தி. வங்காளத்தில் எண்பதுலக்ஷம் ஜனமுள்ள டாணுக்களில் ஈராயிரத்துக்கொருவன்கூடக் கிறிஸ்தவன் இல்லை. பேஹாரில் 2½ கோடி ஜனத்தொகையுள்ள ஜில்லாக்களில் வேலை மகா சொற்பம். பம்பாய் ராஜதானியில் மூன்றிலொரு பாகத்தில் இன்னம் சுவிசேஷ ஊழியம் சரிவர நடக்கவில்லை. வட இந்தியாவின் அறுபது ஜில்லாக்களில் கிறிஸ்தவன் ஒருவனுமில்லை. ஆகவே வட இந்தியா, சிற்றரசு நாடுகள், கங்காநதி தீரம்— இவைகளே சுவிசேஷவேலை இன்னம் அதிகமாய் நடைபெறவேண்டிய பாகங்கள்.

(2) சென்னை ராஜதானியிலுங்கூட நூறு கிறிஸ்தவர்களில்லாத தாலுகாக்கள் இருபத்து நான்கு உள. இவைகள்: கஞ்சம், விசாகப்பட்டணம், பெல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களிலுண்டு. ஐதராபாத் ராஜ்யத்தில் அதிலபாத், பீர், நாந்தர், உஸ்மானபாத் ஜில்லாக்களிலுள்ள 29 தாலுகாக்களில், மொத்தம் 20 லக்ஷம் ஜனங்களில், கிறிஸ்

தவர்கள் 575 பேர்தான். அநேக தாலுகாக்களில் சுவிசேஷ வேலை நடக்கவேயில்லை.

(3) சுவிசேஷவேலை நடைபெறும் இடங்களிலுங்கூட பல ஜாதியார், வகுப்பார், கூட்டத்தார் இன்னம் சுவிசேஷத்துக்கு வெளியே நிற்கிறுர்கள். பம்பாய் ராஜதானியில் ஜெயினர், லிங்காயத்தார், பார்ஸிகள் நடுவில் யாதொரு ஊழியமும் நடக்கவில்லையாம். தென் இந்தியாவில் இஸ்லாமியர் நடுவில் நடக்கும் வேலை சொற்பம்.

சென்னை ராஜதானியில் பின்வரும் குலத்தவர்களிடத்திலிருந்து கிறிஸ்து சபையில் சேர்ந்தவர்கள் மகா சொற்பம்:

நாவிதர்	1,03,000	பேர்
சக்கிலியர்	6,06,000	,,
இடையர்	8,00,000	,,
ஆதிதிராவிடர்	16,19,000	,,
மறவர்	4,23,000	,,
வண்ணுர்	2,00,000	,,
கள்ளர்	5,09,000	,,
பள்ளர்	8,25,000	,,
பறையர்	11,17,000	,,

இக்குலத்தவர்களுக்குட் பல நற்குணங்களும் சாமர்த்தியமும் திறமையுமுண்டு. இக்குணசிலங்கள் கிறிஸ்து சபைக் கவசியம். இவ்வகுப்பினர் கிறிஸ்துவை அங்கீகரிப்பாராகில் கிறிஸ்துவின் கிரீடத்தில் எத்தனை அலங்காரமாய் இலங்குவர்! இவர் போன்ற வகுப்பாருக்காகவும் முயற்சி செய்வது நமது பொறுப்பு.

இந்துதேசம் முழுவதிலும் சுவிசேஷவேலை இன்னம் ஜாஸ்தியாய் நடைபெறவேண்டிய பாகங்கள் எவையெனின்: சுதேச சமஸ்தானங்களும், வங்காளமும், ஐக்கிய மாகாணங்களுமெனலாம். தேசமுழுவதிலும், இன்னம் பத்துக்கோடி ஜனங்களுக்குச் சுவிசேஷம் செல்ல வழியில்லை என்று தெரிகிறது. அதாவது, நம் தேசத்தவரில் இன்னம் பத்துக்கோடிப்பேர் தங்கள் ஜீவகாலத்தில் இரக்ஷண்யவழியை அறிய ஏதுவில்லை. இவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க யார் போவார்?

இந்த தேசம் நம் சொந்த தேசம். இந்த ஜனம் நம் சொந்த ஜனம். நமது எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமுமான இவர்களுக்காகவும் நம் இரட்சகர் மரித்தார்! இவ்விஸ்தார தேசத்தவரை ஜெகஜோதியாகிய ரக்ஷாபெருமான் திருப்பாதத்தண்டை சேர்ப்பதற்கு அவசியம் தேவை எவை?

இன்னும் மிஷனெரிவேலை நடைபெறாத பாகங்களை ஊடறுத்துச் சென்று, சிலுவைக்கொடியை நாட்ட சுவிசேஷகர்களும் மிஷனெரிமாரும் தேவை!

தற்காலம் ஊழியம் நடப்பிக்கும் ஐரோப்பிய மிஷனெரி சங்கங்களுக் கெட்டாத தூரத்தில் வசிக்கும் பத்துக்கோடி ஜனங்களுக்கும் பிரசங்கிக்க மனுஷரும் பணமும் தேவை!

ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மிஷன்களில் ஊழியஞ் செய்ய சுயத்தியாகம் நிறைந்த தேசிகர் சுவிசேஷகர் தேவை!

சுதேச சபையைச் சுயாதரவு, சுயாதிபத்தியம், சுயாபிவிருத்திக்கு வழிநடத்த திறமையும் ஆத்மீக வல்லமையும்பொருந்திய படிப்பாளிகளான குருமார் தேவை!

இன்னும் அரிவரி தெரியாத நூற்றுக்குத் தொண்ணூற்றொன்று பங்கு ஜனத்தின் மனக்கண்ணைத் திறப்பதற்கு ஆசிரியர் தேவை!

இருள் நிறைந்த அந்தர்ப்புரங்களுக்குட் பிரவேசித்து அங்கு ஞானஒளியை நாட்ட வேதாகம ஸ்திரீகள் தேவை!

விதேச மிஷனெரி மாதுக்கள் நடப்பிக்கும் பணிவிடைகளைத் தாங்களே தலைமேற்கொண்டு நிறைவேற்றும் சுதேச மாதுசிரோமணிகள் தேவை.

தேஷீய சபையைப் பரிபாலித்து ஆளும் சுதேச தலைவர் தேவை.

அந்தத் தேஷீய சபையைச் சுவிசேஷ பிரபல்ய வாஞ்சியில் வளர்க்கும் குருமார் தேவை.

"நீங்களே அவர்களுக்குப் போஜனம் கொடுங்கள்" என்று எஜமான் சொல்லுகிறார். "எங்களுக்கு வந்து உதவிசெய்யுங்கள்" என்று கோடாகோடி ஜனம் கூக்குர லிடுகிறது. இந்தியா இரட்சிக்கப்படுவதற்கு நாம் என்ன செய்யலாம்?

1. ஜெபிக்கலாம். — அதிகமாய் ஜெபிக்கிறவர்களே அதிகமாய் உதவிசெய்கிறவர்கள். ராஞ்சி மிஷனை ஸ்தாபித்த காஸ்னர் போதகர் ஜெபத்தில் நிபுணராம். "வைத்தியசாலைச் சுவர்களை ஜெபத்தினால் எடுப்பித்தார்; மிஷன் ஸ்தானங்களை ஜெபத்தினால் ஸ்தாபித்தார்; மிஷனெரிமார் விசுவாசத்தை ஜெபத்தினால் ஊன்றக் கட்டினார்; ஐசுவரியவான்கள் இருதயங்களையும், பொக்கிஷங்களையும் ஜெபத்தினால் திறந்தார்" என்று அவரைப்பற்றிச் சொல்லியுளது. ஊக்கமான ஜெபம் மிகுந்த பெலனுள்ளது.

கருணை நிதியான இயேசுகிறிஸ்து திரளான ஜனங்களைக் கண்டபொழுது அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கிப் பார்த்து, "அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்றார். இந்தியா தேசத்தின் பரிதாப நிலைமையைக் கண்ணுற்றுக் கருணைகொள்ளும் ஆண்டவர், இன்றும் தமது சீஷராகிய நம்மையே நோக்கிப் பார்க்கிறார். தமிழ் பேசும் சுதேச கிறிஸ்தவர்களாகிய நம்மையே விசேஷமாய் நோக்கிப் பார்த்து, "வேண்டிக் கொள்ளுங்கள்" என்கிறார்.

எதற்காக வேண்டிக்கொள்ளவேண்டும்? இந்துதேசத்திற்காக வேண்டிக்கொள்ளுவோமாக. இதின் நிர்ப்பந்த நிலைமையைப் பார்த்து கர்த்தர் இரங்கும்படி ஜெபிப்போமாக. இங்கிருக்கும் சுதேச சபைக்காகப் பிரார்த்திப்போமாக. தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற யாவரும் உத்தம கிறிஸ்தவர்களாய் இந்து தேச ரக்ஷணைக்காக ஜெபித்து உழைத்துப் பிழைக்கும்படியாய் மன்றாடுவோமாக. விசேஷமாய்த் தமிழ்ச் சபைக்காக வேண்டிக்கொள்ளுவோமாக. தமிழ் நாட்டுச்

சபை தன் விசேஷித்த உத்தரவாதத்தை உணரும்படியாக ஊக்கமாய்ப் பிரார்த்தனை செய்வோமாக. சகல மிஷனெரி சங்கங்களுக்காகவும் விண்ணப்பம்பண்ணுவோமாக. எல்லாவற்றிலும் முக்கியமாய், கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றி இன்னம் கேள்விப்படாத பத்துக்கோடி ஜனங்களுக்குச் சுவிசேஷம் செல்லும்படியான வாசல் திறக்கப்படக் கெஞ்சுவோமாக. "எங்கள் தேசத்தை இரட்சியும்! எங்கள் தேசத்தை உயிர்ப்பியும்" என்ற மன்றாட்டு இதை வாசிக்கும் ஒவ்வொருவருடைய இருதயத்திலிருந்தும் தினந்தோறும் கடவுள் சந்நிதிக்கு எழுந்தருளுவதாக. ஜெபமே ஜெயம்.

2. கொடுக்கலாம்.—யூதன் ஒவ்வொருவனும் மூன்று காரியங்களுக்காகக் காணிக்கை செலுத்தவேண்டியவனாயிருந்தான். (1) தேவாலயத்தில் படைக்கவேண்டிய பலிகளுக்காக; (2) ஆசாரியர் பிழைப்புக்காக; (3) ஏழைகள் பராமரிப்புக்காக. இவற்றில் ஒன்றைச் செலுத்தினால் மற்றதை நிறுத்திக்கொள்ளலாமென்றில்லை. மூன்றிற்காகவும் யூதன் பணம் செலவிடவேண்டியவன். தங்கள் மொத்த வருமானத்தில் மூன்றில் ஒன்றை யூதர் இவ்வாறு செலவிட்டனர்.

கிறிஸ்தவர்களும் மூன்றுவிதமான காணிக்கை செலுத்தவேண்டியவர்கள். கிறிஸ்தவர்களும் யூதரைப் போல தங்கள் ஆத்தும மேய்ப்பரான குருமார், உபாத்திமார் ஆதரவுக்காகக் கொடுக்கக் கடமைப்பட்டவர்கள். யூதரைப்போலவே, தங்களிலுள்ள ஏழைகளையும், அநாத விதவைகள் பிள்ளைகளையும் பராமரிக்கவேண்டியவர்கள்; தேவாலயப் பலிவகைகளுக்குப் பதிலாக, சுவிசேஷ ராஜ்யத்தின் அபிவிருத்திக்காகக் கொடுக்கவேண்டியவர்கள். இதுவே கர்த்தருக்கு சுகந்த வாசனையான பலி என்பது பரி. பவுலின் வார்த்தை (பிலி. 4: 18).

தமிழ்நாட்டுக் கிறிஸ்தவர்கள் இம்மூன்றையும் ஒன்றுபோலச் செய்துவருகிறார்களா? தர்மஞ்செய்ய முந்திக்கொள்ளுகிறதுபோல, சுய ஆதரவுக்கும் உற்சாகமாய்க் கொடுக்கிறார்களா? தர்மத்திற்கும் சபை தாபரிப்புக்குப்

கொடுப்பதுபோல சுவிசேஷ பிரபல்யத்திற்கும் நன்கொடை செலுத்துகிறார்களா? சுவிசேஷம் இன்னம் செல்லாத நாடுகளில் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்காக நம் தேசத்தவர் தங்கள் இனத்தையும் ஜனத்தையும் விட்டுப்போய், சரீர கஷ்ட நஷ்டங்களைச் சந்தோஷமாய் அநுபவித்து, சுவிசேஷக்கொடியை நிறுத்தப் போயிருக்கிறார்களே! அவர்கள் தங்கள் உயிரையும் அருமையென்று பாராமல், கிறிஸ்துவுக்காக முன்னணியத்திற்குச் சென்றிருக்குங்கால், அவர்கள் நிகழ்த்தும் வேலையைப் பரிபாலும்படி பொருள் சகாயம் செய்வது நமது கடமையன்றோ?

ஐரோப்பியர் உலகத்தின் நான்கு திக்குகளினின்றும் தங்கள் பொருளை இத்தேசத்தின் இரட்சிப்புக்காகக் கொட்டுகிறார்கள். அவர்கள் பணத்தினால் எழும்பியிருக்கும் ஆலயங்கள் எத்தனை! பாடசாலைகள் எத்தனை! கல்விகற்றோர் எத்தனை ஆயிரம்! உபகாரம்பெற்றுப் பிழைக்கிறவர்கள் எவ்வளவு ஏராளம்! விதேசத்தார் நமக்காக இவ்வளவு செய்யும்போது நாம் சும்மா இருந்து பார்த்துக்கொண்டிருப்போமா? இது நம் தேசமன்றோ? ஆண்டவர் நமக்காகவும் தமதாருயிரைக் கொடுக்கவில்லையோ? அப்படியானால், நமது சக்திக்கேற்றபடி நமது சொந்தத் தேசத்தின் இரட்சிப்புக்காக நாம் கைதிறந்து கொடுக்க வேண்டாமோ? நாம் எவ்வளவு கொடுக்கிறோமோ அவ்வளவே நமது தேசத்தின்மீது அபிமானம் கொள்ளுகிறவர்களெனத்தகும்.

3. உழைக்கலாம். —ஜெபமும் பணமும் அவசியந்தான். ஆனால் வேலை மகா அவசியம். இந்துதேசத்திற்காக ஜெபிக்கிறவர்கள் வேண்டும், கொடுக்கிறவர்கள் வேண்டும். அதிலும் முக்கியமாய் இந்துதேசத்தைக் கர்த்தருடைய பாதத்தில் சேர்ப்பதற்கு உழைக்கிறவர்கள் அவசியம் தேவை. ஜெபிக்கிறவர்கள் அநேகர் தங்கள் சொந்த நாட்டை விட்டுப் போய் ஊழியம் செய்யக்கூடாதவர்கள். ஒரே ஜில்லாவுக்குள்ளேயே கஷ்டமான பாகத்திற்கும், தூரமான இடத்திற்கும், தண்ணீர்க்

கஷ்டம் விட்டுக் கஷ்டம் உள்ள கிராமங்களுக்கும் போக மனமற்றவர்கள் உளர். பட்டணக் கரைகளில் வேலை வேண்டுமென்றும், சுகத்துக்குப் பிரதிகூலமான தாலுகாக்களில் வேலை வேண்டாமென்றும் சொல்லுகிறவர்கள் அநேகர். கிறிஸ்து ராஜ்யத்தை நமது நாட்டில் ஸ்தாபித்தவர்கள் யாரெனில், தங்களையும் தங்கள் சுகத்தையும் உயிரையும் வெறுத்து, இன ஜனங்களை விட்டு, இத்தேசத்துக்கு வந்த பக்தரான பிரான்ஸிஸ் சவேரியார், உல்லியம் கேரி, சுவார்ச், அலெக்சாந்தர் டப் என்ற மகான்களன்றோ? மிஷனெரிவேலை தியாகவேலை. கிறிஸ்துவின் பணிவிடையில் பூலோக சம்பந்தமான வருமானம் கிடையாது, மேன்மை கிடையாது. கிராம ஜீவனம் சொற்பச் சம்பளம், வசதியற்ற வீடு, கடும் பிரயாணம்—இவைகளே மிஷனெரிகள் பங்கு.

இத்தாலியா தேசத்திற்குச் சுயாதீனத்தைக் கொடுத்த காரிபால்டி என்பவர் தம் தேசத்தை இரட்சிக்கும்படி புறப்பட்டார். தேசத்தின் வாலிபரைப் பார்த்து, "வாலிபரே, என்னோடு நீங்கள் வருவதானால், ஏதேனும் சுகம் கிடைக்கும் என்று எண்ணாதிருங்கள். குளிர், பசி, பட்டினி, கந்தையே உங்கள் பங்காயிருக்கும். தன் தேசத்தை நேசிக்கிறவன் என் பின்னே செல்லட்டும்!" என்றார். ஆயிரக்கணக்கான வாலிபர் காரிபால்டியைப் பின்சென்றார்கள், தங்கள் உயிரைக் கொடுத்தார்கள், தங்கள் அருமையான தேசத்தை இரட்சித்தார்கள்.

இந்தியாவை இரட்சிக்கும்படி இயேசு தளகர்த்தர் செல்லுகிறார். உஷ்ணமான பாழ் வனாந்தரங்களிலும், குளிரான மலங்காடுகளிலும், குளிர்ஜுரமும், விஷஜுரமும், மலைஜுரமும் உண்டாகும் சதுப்பு நிலங்களிலும், நல்ல தண்ணீர் கிடையாத உவர் நிலங்களிலும், யானை, புலி, சிங்கம் வசிக்கும் புதரடர்ந்த காடுகளிலும், நரமாம்ச பட்சணிகள் பிழைக்கும் காரிருள் அடவிகளிலும் கிறிஸ்து செல்கின்றார். அவர் பின்னே சென்று ஆத்துமாக்களை இரட்சிக்க யார் போவார்?

விண் கிரீடம் பெறப் போருக்குக்
கிறிஸ்தேசு செல்கின்றார்;
அவரின் வெற்றிக் கொடிக்குக்
கீழாகப் போவோன் யார்?
தன் கஷ்ட பாத்ரம் குடித்துச்
சோராமல் நிற்போன் யார்?
தன் சிலுவையை எடுத்து
அவர் பின் செல்வோன் யார்?

"இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும்" என்று யார் சொல்வார்?

இந்தியாவின் ஓலம்

(காலஞ்சென்ற கனம் V. சந்தியாகு போதகர் பாடியது)

(*ராகம்: "சரணம், சரணம், சரணம், எனக்குன்"*)

பல்லவி

எந்தன் நிர்ப்பந்தம் பாரும் என் மக்களே!
இரங்க மனமில்லையோ?

அநுபல்லவி

இந்து மா சமுத்ரம் தொடங்கி
இமயமலை வரையும்—ஐயோ,— எந்தன்

சரணங்கள்

1. *உந்தன் சோதரர் எண்ணிறந்த பேர்*
உருக்குலைந்தனர், பாரீர்—எந்தன்
சொந்தப் பிள்ளைகள் சோர மார்க்கத்தில்
தொலைந்து கெட்டுப்போனாரே! ஐயோ,— எந்தன்

2. *பஞ்சம் பசியுற்றோரைப் பார்க்கப்*
பதறுதே என் உள்ளம்—பாரும்
அஞ்சும் பாழ்கொள்ளை நோயின் வாளினால்
அறுப்புண்டவர் எத்தனை! ஐயோ,— எந்தன்

3. *கண்மணிகளில் கணக்கற்ற பேர்கள்*
கல்வியாதும் அறியார்—பலர்
விண்ணொளியற்று வீண்பக்தியினில்
விழுந்து கிடக்கின்றாரே! ஐயோ,— எந்தன்

4. *சாதி என்னும் பேயும் நுழைந்து*
சகலரையுங் கலைத்தான்—அவன்
வாதினால் பல சாதிகள் எழ,
வம்புகள் மிக வந்ததே! ஐயோ,— எந்தன்

5. அருமையாகப் பெற்ற என் பெண் மக்கள்
அந்தகாரச் சிறையில்—சிக்கிச்
சிறுமை அடைந்து தவித்து நிற்பதைச்
சிந்தையில் வைப்பார் இல்லையோ? ஐயோ,— எந்தன்

6. பாவக் கடலில் எத்தனையோ பேர்
பாய்ந்து அதோ! அமிழ்ந்தார்—இப்போ
தாவி அவரைத் தூக்கி எடுக்கத்
தாகமுள்ளவர் இல்லையோ? ஐயோ,— எந்தன்

7. இயேசு என்னும் உலக இரட்சகர்
எனக்காகவும் மரித்தார்—பல
தேசம் அவரைப் பெற்றிருக்க, அந்த
நேசர் எனக்கு இல்லையே! ஐயோ— எந்தன்

Q6·2
N42
TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS
No. 109285

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1942. B 8832